படைச் சிப்பாய் கொலை; ஆனந்தராஜா நிரபராதி

பக். 07

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 246 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 14, வெள்ளிக்கிழமை 29.07.2016

# உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை பன்னாட்டு நீதிபதிகளே கட்டாயம்வேண்டும்

## போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை அமைப்பது குறித்து வன்னிமக்கள் கருத்து

முல்லை., ஜூலை 29
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகள் கட்டாயம் உள்ளடக்கப்படவேண்டும். கடந்த கால கசப்பான அனுபவங்களின் அடிப்படையிலேயே, பன்னாட்டு விசாரணையையும், பன்னாட்டு நீதிபதிகளையும் கேட்கின்றோம். கொல்லப்பட்ட - காணாமற்போன - அங்கவீனமாக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு நீதி வேண்டும்.
இதனை, போரில் பிள்ளைகளை - உறவுகளைப் பறி கொடுத்த ஒருவனாக உங்களிடம் கேட்கின்றேன் என மல்லாவி – யோகபுரத்தில் வசித்து வரும் 62 வயதான அ.அமிர்தலிங்கம் நல்லிணக்கச் செயலணியிடம் தெரிவித்தார்.
போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன் பக். 23

“கொத்துக் குண்டுகளால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். 3 லட்சம் மக்கள் போரின் இறுதியில் அகப்பட்டிருந்தோம். ஆனால் 25 ஆயிரம் பேருக்குரிய உணவைத்தான் அரசு அனுப்பியது. எங்களைப் பட்டினி போட்டுச் சாகடித்தனர்.”

“பாதுகாப்பு வலயத்தில் ஒன்றுகூடி இருந்த மக்களில் பலரைக் கொலை செய்தனர். எறிகணைகள் எங்கள் மீது தவறி விழவில்லை. இலக்கு மாறி விழவில்லை. கொன்றொழிக்க வேண்டுமென்றே வீசப்பட்டன.”

“எங்கள் பிள்ளைகள் காணாமற்போய்விட்டார்கள் என்று பரணகம ஆணைக்குழுவில் முறையிட்ட போது, அவர்கள் கோழி வேண்டுமா மாடு வேண்டுமா என்று தான் கேட்டனர். நாங்கள் அதைக் கேட்கவில்லை. குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடியுங்கள்.”

## நீதிப் பொறிமுறையை அமைப்பது எவ்வாறு?

### மக்கள் கருத்தறியும் அமர்வு நாளை சண்டிலிப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 29
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு அமைப்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் அமர்வு நாளை சனிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் நல்லிணக்கப் பொறிமுறைகளை உருவாக்குவதற்கான யாழ்ப்பாண வலயச் செயலணியின் செயலாளர் சட்டத்தரணி என்.சுஜீவன் தெரிவித்ததாவது:
போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை அமைப்பது பக். 23

## பிரதேச செயலருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

### கொக்கிளாயில் மீன்பிடியில் ஈடுபடும் தெற்கு மீனவர்களின் செயல்

முல்லைத்தீவு, ஜூலை 29
கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கி நின்று தற்போது மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிங்கள மீனவர்கள்.
கடற்றொழில் சட்டத்தின் 33(44) இலக்கச் சட்டத்தைப் பக். 25

## இராணுவத்தினரை வேட்டையாடும் போர்க்குற்ற விசாரணை வேண்டாம்

### மகிந்த அணியின் பாதயாத்திரையில் கோஷம்

கொழும்பு, ஜூலை 29
படையினரைப் பலிக்கடாவாக்கும் போர்க்குற்ற விசாரணை வேண்டாம் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டு, அரசுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.
‘தேசிய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்’ என்ற தொனியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களின் பாதயாத்திரை, பேராதனையில் நேற்று முற்பகல் ஆரம்பமானது. பக். 25



## சிங்கள மீனவர்கள் ஆளுநருடன் சந்திப்பு

### கொக்கிளாயில் காணி தரக் கோரி

முல்லைத்தீவு, ஜூலை 29
முல்லைத்தீவு - கொக்கிளாய்ப் பிரதேசத்தில் வாடிகள் அமைப்பதற்கு தமக்குக் காணிகளைப் பெற்றுத் தருமாறு, அந்தப் பகுதியில் தற்போது தங்கியுள்ள ஒரு தொகுதி சிங்கள மீனவர்கள் வடக்கு மாகாண பக். 23

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதிவேண்டும்

போர்க் காலத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் பிரதேச செயலகத்தின் முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது. இறுதிக்கட்டப் போரின் பின் இராணுவத்திடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே?, அரசே எமது பிள்ளைகள் எப்போது திரும்பி வருவார்கள்?, அரசே ஐ.நா. பரிந்துரையை நிறைவேற்று, எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? போன்ற வாசககங்கள் அடங்கிய பதாகைகளுடன் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (விரிவு: பக்கம் 08)

## கடன் வசூலிப்பு நிறுவனங்கள் பெண்கள் மீது வன்கொடுமை

### கிளிநொச்சி பொலிஸில் நேற்று மாலை முறைப்பாடு

கிளிநொச்சி, ஜூலை 29
கடன் கொடுத்த தனியார் நிதி நிறுவனங்கள் ஆள்களை அனுப்பி தம்மைக் கொடுமைப் படுத்துகின்றன என்று பாதிக்கப்பட்ட பெண்கள் அழுது புலம்புகின்றனர். அவர்களின் கொடுமை தாங்காது 4 பெண்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை முறைப்பாடு செய்தனர்.
சாவகச்சேரியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றும், மல்லாவியிலுள்ள நிதி நிறுவனம் ஒன்றும் ஆள்களை வைத்து எம்மிடம் அனுப்புகின்றனர். சில நேரங்களில் அவர்களே நேரில் வந்து ஆண்கள் இல்லாத எங்கள் வீடுகளில் இரவு 11மணிவரை காத்திருக்கின்றனர். பகலில் வருபவர்களிடம் பணம் இல்லை. அடுத்தமுறை தருவதாகக் கூறியபின்னரும் இரவுவரை எதற்காக காத்திருக்கிறார்கள். இரவு வரை நின்றால் பக். 25



வர்தன செலரி பூஸ்டர்

இப்பொழுது விருப்பமானதை வாங்க காத்திருக்கத் தேவையில்லை

வர்தன செலரி பூஸ்டர் கணக்கு உங்களுக்கு அதிகபட்சமாக இரண்டு மாத சம்பளத்தின் பெறுமதியில் 90% வரை மேலதிகப்பற்றாக பெறும் அரிய வாய்ப்பையும் மற்றும் பல நன்மைகளையும் வழங்குகிறது.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

0112350000 வெப்: www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வலயங்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

## இப்படிக் கூறுகிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாங்குளத்திலும், மதகுவைத்த குளத்திலும் எந்த வகையான சந்தை அமைக்கப்படவேண்டும் என்பது குறித்து இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு நேற்று இரவு அறிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசனுக்கு, கடந்த 27ஆம் திகதி எழுதிய கடிதத்தில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாங்குளத்தில் கடல் உணவுச் சந்தையும், மதகுவைத்தகுளத்தில் மரக்கறிச் சந்தையும் அமைப்பதற்கான கருத்தைக் கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பான செய்தி நேற்று வெளியாகியது. இதனைத் தொடர்ந்து பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைய வேண்டும் என்பதற்காகக் குரல் கொடுத்த மக்கள் பிரதிநிதிகள் சிலர், முதலமைச்சரின் மேற்படி கடிதத்துக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்ததாக அறிய முடிகின்றது.

> “மாங்குளத்தில் கடல் உணவுப் பொருளாதார வலயமும், மதகுவைத்த குளத்தில் மரக்கறிப் பொருளாதார வலயமும் அமைப்பதற்கான கருத்தைக் கொண்டிருக்கின்றோம் என்று கடந்த 27ஆம் திகதி, (NP/CM/Res/0550/2016) அமைச்சர் பி.ஹரிசனுக்கு முகவரியிட்டு, வடக்கு மாகாண முதலமைச்சரின் கையெழுத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது”

இந்த நிலையில் நேற்று இரவு வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதார வலயம் மாங்குளத்திலும் வவுனியாவிலும் அமையப் போவது எல்லோரும் அறிந்ததே. மாங்குளத்தில் கடல் உணவு சம்பந்தமான சந்தையும், வவுனியா மதகுவைத்த குளத்தில் மரக்கறிச் சந்தையும் நிறுவப்படும் என்ற செய்தி மக்களிடையே பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து எந்தவிதமான இறுதித் தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக ஆலோசனைகள் பொருளியல் நிபுணர்களிடம் இருந்தும் மற்றவர்களிடம் இருந்தும் தற்போது பெறப்படுகின்றன. எங்கு எவ்வாறான சந்தை அமைக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமான தீர்மானம், ஆலோசனைகள் பெற்ற பின்னர் எம்மால் எடுக்கப்படும். தீர்மானம் எடுக்கப்படாத ஒரு விடயம் பற்றி மக்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 27ஆம் திகதி, (NP/CM/Res/0550/2016) அமைச்சர் பி.ஹரிசனுக்கு முகவரியிட்டு, வடக்கு மாகாண முதலமைச்சரின் கையெழுத்துடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. வடக்குப் பொருளாதார வலயம் என்று தலைப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் மூன்றாவது விடயமாக, மாங்குளத்தில் கடல் உணவுப் பொருளாதார வலயமும், மதகுவைத்தகுளத்தில் மரக்கறிப் பொருளாதார வலயமும் அமைப்பதற்கான கருத்தைக் கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-5)

### ஆசிரியர் மாநாடு இன்று ஆரம்பம்

துணுக்காய், ஜூலை 29

துணுக்காய் கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் முற்பகல் 9 மணி தொடக்கம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு இன்று முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவும் நாளைய நிகழ் விற்கு முதன்மை விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீகந்தராசா, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(வ-422)

### கல்வி அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் மருத்துவர் சங்கத்தின் வருடாந்த கல்வி அமர்வு மற்றும் மாநாடு இன்று நடைபெறுகிறது. மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதல் நாள் நிகழ்வு, மாலை 6:20 மணிக்கு ரில்க்கோ ஹோட்டலிலும், அறிவியல் அமர்வுகள் யாழ். பல்கலைக் கழக கேட்போர் கூடத்திலும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டது.

(வ-ரி4,106)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் இட நெருக்கடியைப் போக்க காணி கொள்வனவு செய்து வழங்குமாறு பாடசாலை அதிபர் திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் புலம்பெயர் தமிழரிடம் கேட்டிருந்தார். பாடசாலைக்காக கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் 4 பரப்புக் காணியில் ஒரு பரப்புக் காணியின் பெறுமதியான 8 லட்சம் ரூபா பணத்தை சுவிஸில் வசிக்கும் கதிர் காமநாதன், பிரதேச செயலாளர் முன்னிலையில் பாட சாலையின் அதிபரிடம் நேற்றுக் கையளித்தார்.

## வவுனியாவில் கடை உடைத்துத் திருட்டு

### நேற்றுமுன்தினமிரவு சம்பவம்

வவுனியா, ஜூலை 29

வவுனியா, பண்டாரிக்குளம் வியாசர் வீதியில் வர்த்தக நிலையம் நேற்றுமுன்தினமிரவு உடைக்கப்பட்டு பெறுமதியான பல பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தக நிலையத்தை அதன் உரிமையாளர் நேற்றுமுன்தினமிரவு 8.30மணியளவில் பூட்டிவிட்டுச் சென்றுள்ளார். நேற்றுக்காலை வர்த்தக நிலையத்தைத் திறக்கச் சென்ற போது கதவில் பூட்டப்பட்டிருந்த நான்கு பூட்டுகளும் உடைத்து வீசப்பட்டிருந்ததை அவதானித்த உரிமையாளர் பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

விசாரணையின்போது சிகரெட், பால்மா உள்ளிட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-4)

### தமிழரசுக் கட்சியில் இணைவதற்கு இராசேந்திரம் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சைக் குழுவில் போட்டியிட்ட ந.இராசேந்திரம், தமிழ் அரசுக் கட்சியில் மீளவும் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளார்.

ந.இராசேந்திரம் நீண்ட காலமாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்தார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் தனக்கு இடம் கிடைக்கவில்லை என்பதால், சுயேட்சையாகப் போட்டியிடக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தீர்மானித்தார். சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார். பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் செயலகத்தில் நியமனம் பெற்றிருந்தார். தற்போது, தமிழ் அரசுக் கட்சியில் இணைவதற்கு மீளவும் விண்ணப்பித்துள்ளார்.

“இராசேந்திரம் மீளவும் கட்சியில் இணைவதற்காக தலைவர் மற்றும் செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தை தலைவர், செயலாளர் ஆகியோர் மாவட்டக் கிளைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மாவட்டக் கிளை அதனைப் பரிசீலித்து அதற்கான முடிவைத் தலைமைக்குத் தெரியப்படுத்தும்'' என்று கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் தெரிவித்தார்.

(ற-5-101)

## சிறுவனைப் பிரம்பினால் தாக்கிய பெண்ணுக்கு மனநோய் உள்ளதா?

### மருத்துவ அறிக்கையை முன்வைக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் மன்றம் உத்தரவு

சாவகச்சேரி, ஜூலை 29

தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவனைப் பிரம்பினால் தாக்கிய பெண்ணுக்கு மனநோய் உள்ளதா என தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கையை முன்வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிவான் மன்றம்.

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலடியில் உள்ள பெண்ணும் அவரது கணவனும் தமது மகனுடன் சேர்த்து கல்வி புகட்ட சாவகச்சேரி வடக்கில் உள்ள உறவுக்காரச் சிறுவனை தமது வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வழமை போல தமது ஓட்டோவில் அழைத்துச் சென்று கல்வி கற்பித்த பின்னர் சிறுவனை அவனது வீட்டில் கொண்டு வந்து விட்டனர். தாயார் சிறுவனுக்கு உணவு பரிமாறிய போது அவனது கையில் தடியினால் அடித்தமைக்கான தழும்பு காணப்பட்டது. அது தொடர்பில் மகனிடம் விசாரித்தபோது, “சொல்வளம் பாடமாக்கி எழுதாததால் பாடம் புகட்டிய அன்ரி பிரம்பினால் அடித்தார்” என அவன் தெரிவித்தான். அவனது சேர்ட்டைக் கழற்றி பார்த்தபோது பல தடவைகள் பிரம்பினால் தாக்கிய தழும்புகள் முதுகில் காணப்பட்டன. இதனால் பெற்றோர் அன்றிரவே சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவனைச் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அறிக்கையைச் சேர்த்தனர். இதனையடுத்து வகுப்பு நடத்திய பெண்ணையும் அவரது கணவரையும் கைது செய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன், இருவரையும் தலா 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். அத்துடன் அந்தப் பெண்ணை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மனநோய் சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பித்து, அவருக்கு மனநோய் உள்ளதா எனப் பரிசோதனை நடத்தி மருத்துவ நிபுணரின் அறிக்கையை மன்றில் முன்வைக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். வழக்கு விசாரணை ஓகஸ்ட் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(வ- 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமற்போனோர் சான்றிதழ் வழங்கும் பணிகள் டிசெம்பருக்குள் ஆரம்பமாகும்

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

காணாமற்போனவர்களை, காணாமற்போனோர் என்று உறுதி செய்து அதற்கான சான்றிதழை வழங்கும் நடவடிக்கை இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டிருக்கும் நிலையில் அந்தக் கட்சியினருடன் கலந்துரையாடி அவர்களது யோசனைகளும் இதில் பெற்றுக் கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் தொடர்பில் அவர்களிது உறவினர்களுக்கு வழங்கப்படவுள்ள சான்றிதழுக்கு 'காணாமற்போனோர் சான்றிதழ்' என்றே பெயரிடப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே சான்றிதழும் வழங்கப்படும். ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் என்பன இணைந்து நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளன.

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்ட பின்னர், பிரதேச செயலகங்கள், மாவட்ட பதிவாளர்கள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, கிராம அலுவலர்கள் ஊடாக சான்றிதழுக்கான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும். நாட்டில் இல்லாத ஒருநபர் காணாமற்போயிருப்பதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர் சில சந்தர்ப்பத்தில் படகு மூலமோ அல்லது வேறு வழியிலோ பிறநாட்டிற்கு சென்றிருக்கலாம். இவ்வாறான சூழ்நிலையில் ஏனைய சாட்சியங்கள், ஆதாரங்களின் அடிப்படையிலேயே தீர்மானம் எடுக்க முடியும். முறைப்பாடு கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலே காணாமற்போனதை உறுதி செய்ய முடியாது. கிராம அலுவலர்கள் ஊடாக அதிகாரிகளின் மூலம் முறைப்பாடு உறுதிப்படுத்தப்படும். அதற்காகவே காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்படும்.

1971ஆம் ஆண்டுக் கலவரம், 87 மற்றும் 89ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரம், ஜூலைக் கலவரம் ஆகியவற்றில் காணாமற்போனவர்கள் தொடர்பாகவும் காணாமற்போனோர் சான்றிதழைப் பெற முடியும். காணாமற்போன ஊடகவியலாளர்களுக்கான எந்தவித சான்றிதழும் தற்போது இல்லை. அவர்களுக்கான உரிமை மற்றும் ஏனையவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் இல்லை. அவர்கள் விருப்பம் இல்லாத போதிலும் காணாமற்போன சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் - என்றார்.

(வ-5)

# சிறுவர் முற்றம் திறப்பு விழா

பளை, ஜூலை 29

பளை - வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் 7.25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் முற்றம் இன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஐ.குகானந்தராஜா, பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி.ஏ.ராஜபக்ச ஆகியோரும் கலந்து கொள்வர்.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்தின் கீழ் சிறுவர் முற்றம் அமைக்க கிளிநொச்சி கல்வி வலயத்தால் பளை ஆரம்ப பாடசாலை, வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை என்பன தெரிவு செய்யப்பட்டன. வட மாகாண கல்வி அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டது.(ற-9)

### இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை இன்று ஆரம்பம்

தமிழ் மற்றும் சிங்கள அரச பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறை இன்று முதல் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு அறிவித்தது.

இதேவேளை, எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்கிழமை ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகிறது. இந்தப் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் 27ஆம் திகதி வரை இடம்பெறுகிறது.

(வ)

# கனடா அயலுறவு அமைச்சர் கூட்டமைப்பினருடன் சந்திப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கனடா தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பன்னாட்டு விசாரணையை நாம் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில் அதனை நிறைவேற்ற கனேடிய அரசும் பக்கபலமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு கனேடிய அயலுறவு அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்தது.

மூன்றுநாள் பயணமாக இலங்கை வந்துள்ள கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஸ்ரீபன் டயோன் நேற்றுமாலை எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சிநிலை தொடர்பில் அவரிடம் எடுத்துக் கூறப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னரான எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படுகின்றனவா இல்லையா என்பது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று நாம் வலியுறுத்தியுள்ளோம். மக்களின் எதிர்பார்ப்பு அதுவாகவுள்ளது. அதனை விரைவுபடுத்த நாம் இலங்கை அரசிடம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துவருகிறோம். கனடாவும் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தீர்வு தருவதாகக் கூறிக் கொண்டிருந்தாலும் காலங்கடத்தப்படுவதாகவே உள்ளது. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமம்.

வடக்குக் கிழக்கில் பொதுமக்களின் காணிகள் இன்னும் மீளக் கையளிக்கப்படாமல் படையினரின் வசமுள்ளன. அதனைத் தருமாறு பொதுமக்கள் போராடுகிறார்கள். ஆனால் படையினர், அரசு காணிவிடுவித்து வந்தாலும் இன்னும் பல பிரதேசங்கள் விடுவிக்கப்படாமலுள்ளன. அவற்றையும் விடுவிக்க வேண்டும் என்று நாமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். எமது நாட்டைச் சேர்ந்த பலர் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவரும் நிலையில் கனடாவுக்கும் அந்தப் பொறுப்பு உள்ளது. அதிலிருந்து பின்வாங்காது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு கனடா அரசு பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தியதாக கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவித்தன. (வ-4)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 529
சீட்டிழுப்பு திகதி 2016.07.28
வெற்றி இலக்கங்கள்
01 06 23 29 U
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 42,924,860/=
011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1283
சீட்டிழுப்பு திகதி 2016.07.28
வெற்றி இலக்கங்கள்
12 14 50 62 E
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 20,618,720/=
011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

RACE FOR EDUCATION
JHC OLD BOYS

"கல்விக்கான ஓட்டம் - Race for Education"

யாழ் இந்துக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தினால் ஜூலை மாதம் 30ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட வீதி நடைபவனிக்கு நலன் விரும்பிகள் மற்றும் பொது மக்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

இந்த நடைபவனி, மக்களிடையே வடமாகாணத்தின் கல்விக்கான விழிப்புணர்ச்சியை எற்படுத்த ஒழுங்குசெய்யபட்ட நடைபவனியாகும்.

இந்த கல்விக்கான நடைபவனியின் நோக்கமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் க.பொ.த.சாதாரண பரீட்சையின் கணித பாடத்தின் பெறுபெறுகளின் தரத்தை உயர்த்தி மாணவர்களை மேலும் உயர்தரத்திற்க்கு கொண்டு போவதே இதன் பிரதான குறிக்கோள் ஆகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தினுடாக வடக்கு. கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சுமார் 7000 மாணவர்கள் 300 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கு நிதி திரட்டும் வகையாக ஜூலை 30ஆம் திகதி 2016 ஆண்டு மரதன் ஓட்டம் நிகழ்ச்சி இங்கிலாந்து. ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலும் இலங்கையில் இது நடைபவனியாகவும் ஒழுங்குசெய்யபட்டுள்ளது.

இந்த நடைபவனியானது பழைய மாணவர் சங்கத்தினால் யாழ் இந்துக் கல்லூரி வளாகதில் இருந்து 7 மணியளவில் புறப்பட்டு யாழ் வீதிகளினூடாக சென்று பின்னர் இந்துக் கல்லூரியின் மைதானத்தை சுமார் 9 மணியளவில் வந்தடையும்.

இந்த நடைபவனியில் இணைய விரும்புவோர் கீழே தரப்பட்ட மின்அஞ்சல் மூலமாகவோ அல்லது தொலைபேசியினுடாகவோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**தொலைபேசி:** +0767829680, **மின்அஞ்சல்:** rfe.jaffna@jhc92.com

காணவில்லை



யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த (86) வயதுடைய **பொன்னு இரத்தினம்** என்ற வயோதிபரை கடந்த 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று காணாமல் போயுள்ளார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**வெள்ளை நிற வேட்டி, றோஸ் கலர் சேட் அணிந்திருந்தார்.**

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 0456590
077 5320845

பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.சிவலிங்கம் சதீஸ்வரன்
(B.Com, PGDE, SLPS III)




திரு.யோகராசா தயாளன்
(BA.PGDE,Dip.in tech SLPS III)




திரு.நடராஜா கஜேந்திரன்
(B.Ed.Sp ...pys Edu,nat dip in Sports SEI.S.A)

...சதீஸ்வரன், திரு.யோகராசா தயாளன் ஆகியோர் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்வு பெற்றமை மற்றும் திரு.நடராசா கஜேந்திரன் அவர்கள் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம் - ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பொக்கிசமாக பாதுகாக்க வேண்டும்

## எதிர்காலச் சந்ததியும் பயன்படுத்த வேண்டும் என்று வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

மக்களுக்கு கொடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் அவர்களது வரிப் பணத்தில் இருந்தே வழங்கப்படுகின்றது. மக்கள் இதனை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். மாந்தை வரையறுக்கப்பட்ட உப்பள நிறுவனத்தால் மன்னார் உப்பளத்தில் அமைக்கப்படவுள்ள சுற்றுலா விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் தெரிவித்ததாவது:

நம்முடையசொந்தப்பொருள்களில் நாம் காட்டும் அதே அக்கறையை பொதுச் சொத்துக்களிலும் காட்ட வேண்டும். பொதுச் சொத்துக்கள் நம்மோடு மாத்திரம் முடிந்து போவதல்ல. நம்முடைய சந்ததிக்கு தொடர்ந்து பயன் தரும் வகையில், அரசு தருகின்றஅபிவிருத்திதிட்டங்களை பொக்கிசங்களாக நாம் பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறுநாம்செய்யும்போதே எம்முடைய வருங்கால சந்ததியும் அதனால் முழுப் பயனை அடையும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் மாந்தை, வரையறுக்கப்பட்ட உப்பள நிறுவனத்துக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிக்கின்றேன் - என்றார். (ற-5)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடமராட்சி, நவிண்டில் சிவகாமி அம்மன் கோயில் வருடாந்தப் பெருவிழா நேற்றுமுன் தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பத்து நாள்கள் தொடர்ந்து இடம்பெறும் இந்தப்பெருந்திருவிழா வரிசையில் எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 5ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ற)

# கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் கொழும்பு வந்தார்

கொழும்பு, ஜூலை 29

இலங்கைக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கனேடிய அயலுறவுத் துறை அமைச்சர் ஸ்டீபன் டியன் கொழும்பு வந்தார்.

கட்டுநாயக்கபன்னாட்டுவிமான நிலையம் வந்த கனேடிய அயலுறவுத்துறை அமைச்சரை பிரதிஅயலுறவுத்துறைஅமைச்சர் ஹர்ச டி சில்வா, அயலுறவுத்துறைச் செயலர் சித்ராங்கனி வகீஸ்வரா ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் மனோகணேசன் ஆகியோரை கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் நேற்றுச் சந்தித்தார்.

யாழ்ப்பாணம் வரவுள்ள கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஸ்டீபன் டியன், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநரையும், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் இன்று சந்திக்கவுள்ளார்.

கனேடிய நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளார். (ற-5)

# காணி அனுமதி பத்திரம் வழங்கல்

தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சி பிரதேசத்தில் அரச காணிகளில் குடியமர்ந்துள்ள 20 குடும்பங்களுக்கு நேற்று அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வரணி-இடைக்குறிச்சி மற்றும் கைதடி ஆகிய பகுதிகளில் அரச காணிகளில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கே காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ற-9)

ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
ஒருவார, ஒருமாத, 3 மாத குஞ்சுகள் விற்பனைக்குள்ளன.
077 245 3673

காணி விற்பனைக்கு
கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியில் 2½ பரப்புக் காணியும் அருகில் 2 பரப்புக் காணியும், 2½ பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன.
077 196 2465

பராமரிப்பாளர் தேவை
முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு வலுவான தேக ஆரோக்கியமுள்ள ஆண் ஒருவர் யாழ் மாவட்டத்தில் தேவை. சம்பளம் 20 000/= தங்குமிட வசதி சாப்பாடு இலவசம். (J/ 3284) (12,17,18)
076 824 5455

பெயர்மாற்றம்
கைதடி கிழக்கு கைதடியைச் சேர்ந்த விசுவரட்ணம் (VISUVARATNAM) ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து விக்கினேஸ்வரி (VICKNESWARY) எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(J/ 3284) (12,17,18)
விக்கினேஸ்வரி

வீடு வாடகைக்குத் தேவை
மூன்றுபேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு மானிப்பாயை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
077 690 9595

தவறிவிட்டது
இல -163 அண்ணாநகர், வவுனியாவைச் சேர்ந்த தங்கவேலு சிதம்பரப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (482762808V). முதியோர் அடையாள அட்டை பேர்ஸ்சுடன் கடந்த 26.07.2016 அன்று வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 937 1426

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.00 / 1.00 / 7.00
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
ICE AGE மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 4.00 p.m
விசாரணை 021 - 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

# மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு - கேள்வி அறிவித்தல் - 01

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு, அவர்களினால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த தொகை (வரி விலக்கி) | தேவையான கேள்விப் பிணை | | ஆகக் குறைந்த தரம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) | செல்லுபடியாகும் காலம் | | |
| 01 | Mu/Kac/Tech/ Cap/AQ/2016/ 01 | மாவட்ட செயலகத்துக்குரிய கூட்டு விடுதி (10 அறை) அமைத்தல் | 14.43 Mn | 144, 300.00 | 15.11.2016 | C6 or above (Buildings) | 4 மாதங்கள் |
| 02 | Mu/Kac/Tech/ Cap/AQ/2016/ 06 | ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கட்டட புனர்நிர்மாண வேலை | 3.01 Mn | 30,100.00 | 15.11.2016 | C9 or above (Buildings) | 3 மாதங்கள் |
| 03 | Mu/Kac/Tech/ Sta/Br/ 2016/01 | மாவட்ட செயலக புள்ளி விவரக்கிளைக்கு அலுமினிய பிரிவிடல் வேலை | 0.26 Mn | 2,700.00 | 15.11.2016 | C9 or above (Buildings) | 1 மாதம் |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி நடைமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்படும்.
2. I. கடந்த 05 வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையை கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

   II. ஒப்பந்தகாரர் ஊழல் மோசடி மற்றும் திருப்தியற்றதிறன் இல்லாதவராக இருக்க வேண்டும்.
3. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை **மாவட்ட செயலகம், முல்லைத்தீவில்** பெற்றுக்கொள்ளலாம். ( **தொலைபேசி இலக்கம் 021 2290034, 021 2290041**)
4. கேள்வி ஆவணங்களை **29.07.2016** ஆம் திகதியில் **இருந்து 19.08.2016 ஆம் திகதி வரை காலை 9.00** மணியிலிருந்து **மாலை 3.30 மணிவரை** வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000.00 ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 05 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும் அத்துடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதி சுற்றறிக்கை 4/2016 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், **திணைக்கள தருவித்து வழங்கல் குழு மாவட்ட செயலகம், முல்லைத்தீவு என்ற விலாசமிடப்பட்டு, 20.08.2016** பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். கேள்விகள் உடனடியாகவே திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியிலிருந்து அதன் பின்னரான 90 நாள்களுக்கு கேள்வி ஆவணங்கள் செல்லுபடியானதாக இருக்கும்.
7. கேள்விகள் தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைக்குமாறு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

(c/24860) (11,18) திருமதி.ரூ.கேதீஸ்வரன் திணைக்கள தருவித்து வழங்கும் குழுவின் தலைவர், அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையின் ஜனநாயகம் வலுவானதாக மாறியுள்ளது

## கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் பாராட்டு

கொழும்பு, ஜூலை 29

இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு ஜனநாயகம் வலுவடையச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஸ்ரீபன் டியன் ஜனாதிபதி மைத்திரிபாலவுடனான சந்திப்பில் குறிப்பிட்டார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ள கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விவேகமுள்ள தலைமைத்துவத்தில் இலங்கையின் ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கனேடிய அரசு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று கனடா அயலுறவுத் துறை அமைச்சர் ஸ்ரீபன் டியன் தெரிவித்தார்.

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் தெரிவித்த ஸ்ரீபன், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் அவரைச் சந்தித்த பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகவும்பயனுள்ளபேச்சைமேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது என்று கனேடியப் பிரதமர் குறிப்பிட்டார் எனக் கூறினார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து சூரிய மின்சக்தி உற்பத்தி கருத்திட்டங்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கனேடிய அயலுறவுத் துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறிய தொழில் முயற்சியாளர்களை வலுவடையச் செய்யும் நோக்கில் சனச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ரீபன் தெரிவித்தார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் சுதந்திரமான நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி கனேடிய அயலுறவுத்துறை அமைச்சருக்கு விளக்கமளித்தார். இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல் மற்றும் காணாமற் போனோர் பற்றிக் கண்டறிவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார். - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

# ஆரோக்கியமான மக்களை உருவாக்க நோய்த் தடுப்பை பலப்படுத்தவேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் பணியின் போது நோய்களைத் தடுக்கும் சேவையை பலப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்தார். கடவத்தையில் நேற்று இடம் பெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர்களின் 81 ஆவது ஆண்டு பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது–

மக்களுடன் மிக நெருக்கமாக பணியாற்றும் பிரிவினர் என்ற ரீதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுச் சுகாதார சேவையின் தரம் மற்றும் நியமங்களை மேம்படுத்துவதற்காக கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரசு கூடுதலான நிதியை ஒதுக்கி உள்ளது.

பொதுச் சுகாதார உத்தி யோகத்தர்களின் வரப்பிரசாதங்கள் மற்றும் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல விதமான பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு தயக்கமின்றி செயற்படுவேன். சுகாதார அமைச்சராக இருந்தபோது நான் சகல தொழிற் சங்கங்களுடன் நட்புறவுடனும் மோதல்கள் எதுவுமின்றி நடவடிக்கை மேற்கொண்டிருந்தேன்.

இந்த அனுபவங்களை எனது அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கிய பாடமாகக் கருதுகின்றேன். 103 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சேவையாகக் காணப்படும் பொதுச் சுகாதார பரிசோதகர் சேவை, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று கிராமிய மக்களின் சுகாதாரத்துடன் ஒட்டிக் காணப் பட்ட அறியாமை மற்றும் மூட நம்பிக்கை என்பவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மிகப் பிரதானமான சேவையை வழங்கினர்.

இலங்கை வரலாற்றில் ஒரு பேரழிவாகக் காணப்பட்ட மலேரியா நோய் பரவிய 1934, 1935 ஆண்டு காலப் பிரிவுகளில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக 1937 ஆம் ஆண்டின் மலேரியாத் தடுப்பு இயக்கத்துடன் இணைந்து துப்புரவேற்பாட்டு பரிசோதகர்கள் மலேரியா மற் றும் அம்மை ஆகிய நோய்களை ஒழிப்பதற்கு முன்னின்று செயற்பட்டனர் - என்றார். (ற-5)

# மது போதையில் அட்டகாசம் செய்தவர் கைது

நெல்லியடி, , ஜூலை 29

பருத்தித்துறை மந்திகைக்கு அண்மையில் மது போதையில் கத்தியுடன் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். துப்பாக்கி வைத்துள்ளேன் என்று தெரிவித்து பொதுமக்களை அச்சுறுத்துகின்றார் எனப் பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் பருத்தித் துறையைச் சேர்ந்தவர் எனவும் விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஐவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், பிணைக்காக கையொப்பம் இட்டவர்கள் என்று நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதில் 3 பேர் விடுவிக்கப்பட்டனர். இருவரை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா தீர்ப்பளித்துள்ளார். (ற-5,ரி3)

அசத்தலான , ஆடிமாத ஆடைத்தள்ளுபடி
த.குமாரசாமி றெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தின்

ஆடி மாதம் முழுவதும் வரை என்றும் எங்கும்
இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்



* சாறி (பட்டு கல்லுவைத்தது) 2500/=
* நெற்சாறிகள் 1000/= 2000/=
* ஸ்கேட் வகைகள் 500/= 750/=
* பிளவுஸ் வகைகள் 250/=
* T. சேட் வகைகள் 250/=
* பஞ்சாபி வகைகள் 500/=750/=
* ஜீன்ஸ்வகைகள் 500/=
* சேட் வகைகள் 500/=750/=
* கொட்டன் சாறிவகைகள் 500/=
* 01 M சலஞ்சர்துணி 44" 100/=

மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும்
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்

44, 42 பெரியகடை , யாழ்ப்பாணம்.

காவலாளி தேவை

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்திற்கு பகல் காவலாளி தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி , 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 15.08.2016 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாக விண்ணப்பத்தைத் தயாரித்து விண்ணப்பிக்கவும்.

021 222 2324 (7/3284) (12,17,18) செயலாளர்.

கணக்காளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல லண்டன் Chartered Certified Accountants கிளை அலுவலகத்துக்குக் கணக்காளர்கள் உடனடியாகத் தேவை.

தகைமைகள் :
*Commerce Graduate
*Accounts Packages Experiences will be Prefered.

077 815 7295, 021 222 9901
Please call us the above number for Appointment
(சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்)
sri@harans.com

உ
சாவகச்சேரி நுணாவில் மேற்கு
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தானம்
பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 2016

| | |
|---|---|
| கொடியேற்ற விழா | - 29.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி |
| வேட்டைத் திருவிழா | - 04.08.2016 வியாழக்கிழமை மாலை 5.00 மணி |
| சப்பறத் திருவிழா | - 05.08.2016 வெள்ளிக்கிழமை இரவு 8 மணி |
| தேர்த்திருவிழா | - 06.08.2016 சனிக்கிழமை முற்பகல் 10.31 மணி |
| தீர்த்தத்திருவிழா | - 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி |
| பூங்காவனம் | - 08.08.2016 திங்கட்கிழமை மாலை 5.00 மணி |

மஹோற்சவ பிரதம குரு வேதாகம கிரியா ஜோதி, சாமஸ்ரீ சிவாகமஜோதி
தேசமான்ய சிவஸ்ரீ .தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(M.A.ஆசிரியர் - கல்வயல்)
ஆலய ஸ்தானிக குரு பிரம்மஸ்ரீ தே.குருராஜசர்மா
(கல்வயல்)
இறை அடியார்கள் அனைவரும் வருக! அருள் பெறுக!
சுபமஸ்து
ஆலய ஸ்தானிக குருவும்,
ஆலய பரிபாலன சபையினரும்,
உபயகாரர்களும்.
(சி.88) (13.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியங்களைப் பாதுகாக்க இளையோர் முன்வரவேண்டும்

## வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 29
கிராமத்தில் உள்ள இளையோர் எமது பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்க முன்வரவேண்டும். நவீனத்தை உள்ளடக்கிய ஒரு பாரம்பரிய வாழ்க்கை முறையே எமது வாழ்க்கை முறையாக அமைய வேண்டும். பணமும், பகட்டுமே வாழ்க்கை என்றிருப்பவர்களது வாழ்க்கையில் பண்பையும் பணிசெய்யும் பாங்கையும் நாங்கள் உட்புகுத்தவேண் டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

இதன்போது தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:
நகர்ப்புற நாகரிக பழக்கவழக்கங்களுக்கு இன்று எமது இளைய சமுதாயம் அடிமையாகி வருகின்றார்கள். போதைப் பொருள் பாவனை மட்டும் அல்ல கலாசார சீரழிவுகளுக்கும் அவர்கள் காரணமாக இருந்து வருகிறார்கள். தரமான வாழ்வு வாழ்ந்த எமது தமிழ் மக்கள் தரம் கெட்டு வாழ்வதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

சிரமதானம் என்பது எமது மக்களை ஒன்றிணைக்கக் கூடிய ஒரு உன்னதமான கைங்கரியம். எமது சுற்றுச் சூழலை பாதுகாக்கவும், போக்குவரத்தை போதிய வசதியுடன் எதிர்நோக்கவும் இளையோரின் புரிந்துணர்வையும், உத்தமமான ஒரு உறவு நிலையையும் மேம்படுத்தவும், சேவை மனப்பான்மையை எமது மனதில் மேலோங்கச் செய்யவும் சிரமதானம் வழி வகுக்குகின்றது.

எமது இளைய சமுதாயம் நேற்றையதைப் பற்றியோ நாளையைப் பற்றியோ சிந்திக்காமல் சாப்பிடுங்கள், குடியுங்கள், உற்சாகமாக இன்றிருங்கள் என்ற மனோநிலையில் வாழத் தலைப்பட்டுள்ளார்கள். இது எமது இன அழிவுக்கு வித்திடும் அறிவற்ற செயலாகும். இந்த சனசமூக நிலை யமானது நிலையான பண்புகளை நிலைநாட்ட முன்வரவேண்டும் - என்றார். (வ-ரி)

# மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு ரூபா 1,800 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜுலை 29
மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக நடுவண் அரசால் நடப்பாண்டுக்கு ஆயிரத்து 800 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மீள்குடியேற்ற அமைச்சால் வீடமைப்புக்காக 912 மில்லியன் ரூபாவும், வாழ்வாதார உதவிக்காக 70 மில்லியன் ரூபாவும், இடம்பெயர்ந்தோர் மீள்கட்டுமானப் பணிக்காக 160 மில்லியன் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீட்டுத் திருத்தத்துக்காக 154 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளன. உள்ளக அபிவிருத்திக்காக 55 மில்லியனும், நீர் விநியோகம் மற்றும் மலசல கூட அமைப்பிற்காக 40 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளன.

தேசிய திட்டமிடல் அமைச்சால் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்துக்காக 153 மில்லியன் ரூபாவும், விளையாட்டு அமைச்சின் ஊடாக மைதான அபிவிருத்திக்கு 5.6 மில்லியன் ரூபாவும், சமூக சேவைகள் அமைச்சால் 5.33 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. கொள்கை திட்டமிடல் அமைச்சின் ஊடாக 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.


வர்த்தக வாணிப அமைச்சின்ஊடாக 112 மில்லியன் ரூபாவும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாகப் புதிதாக அமைக்கப்படும் செயலகத்துக்கு 99 மில்லியன் ரூபாவுமாக ஆயிரத்து 791 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

இவற்றுக்கான பணிகள் தற்போது நடைபெறுகின்றன. ஆண்டு இறுதிக்கு முன்னதாக இவை முடிவுறுத்தப்படும் - என்றார். (ற-5-101)



இலங்கை அஞ்சல் அதிபர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 78 அலுவலர்கள் நேற்று உள்ளகப் பயிற்சிக்காக சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு வந்தனர். அலுவலக செயற்பாட்டைப் பார்வையிட்ட பின்னர் அஞ்சல் அலுவலக வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டனர். இவர்களுக்கு கொழும்பில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டபோதிலும் உள்ளகப் பயிற்சியினையடுத்து நாளை யாழ்ப்பாணத்தில் நிலையங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

**6ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**இரத்தினம் பொன்னம்பலம்**
(திதி - ஏகாதசி)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள்
தந்தையே!
உங்கள் நினைவுகளில்
என்றும் மிதக்கிறோம்
அப்பா!..

தோற்றம் 05.08.1945
மறைவு 06.08.2010

**குடும்பத்தினர்.**
கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

# தெல்லிப்பழை வைத்தியசாலை உணவக திறப்பு விழா

வலி.வடக்கு, ஜுலை 29
அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அனைத்துலக மருத்துவ அமைப்பு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உயர்தர உணவகம் நிர்மாணிக்கப்பட்டது. உணவகம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரி சங்கத் தலைவருமாகிய மருத்துவர் க.இளங்கோஞானியர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமெரிக்கா அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் உப தலைவர் மருத்துவர் திருமதி ராஜம் தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைமுன்னாள்வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரி சங்க ஆலோசகருமாகிய மருத்துவர் மு.உமாசங்கர் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். நிகழ்வில் ஆசியுரையை துர்க்கா துரந்தரர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும், வரவேற்புரையை தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரனும், நன்றியுரையை நோயாளர் நலன்புரி சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரனும் வழங்குவர். கட்ட ஒப்பந்தகாரர் கௌரவிப்பும் நடைபெறும். (ற-25)

**நினைவஞ்சலிகள்**

| முதலாம் ஆண்டு நினைவில் | ஒன்பதாம் ஆண்டு நினைவில் |
| --- | --- |
| மலர்வு 29.11.1942 | மலர்வு 06.05.1934 |
| உதிர்வு 10.08.2015 | உதிர்வு 22.09.2007 |





**அமரர் கமலாதேவி விஜயராசா**

**அமரர் மாரிமுத்து விஜயராசா**

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்று கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுங்களைக் கவர்ந்து சென்ற கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம் ஆண்டுகள் பல சென்றாலும்
என்றும் அழியா உங்கள் நினைவுகளுடன்

விளாத்தியடி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

**குடும்பத்தினர்.**

(ஜெ.3312) (13.8)

# வாரத்தில் இருநாள் ஒடியல் கூழ்

பனை அபிவிருத்திச்சபை வாரத்தில் இரண்டு நாள்கள் ஒடியற் கூழை நுகர்வோருக்கு வழங்குகின்றது.

முன்னர் சனிக்கிழமைகளில் மட்டுமே ஒடியற் கூழ் வழங்கப்பட்டு வந்தது. அரச மற்றும் தனியார் பணியாளர்களின் வசதி கருதி தற்போது புதன்கிழமைகளிலும் ஒடியற் கூழ் வழங்கப்படுகின்றது. ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சபையில் பனம் பொருள் விற்பனை நிலையத்தில் கூழ் விநியோகிக்கப்படுகின்றது. (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டு விழா

சாவகச்சேரி, ஜூலை 29
சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 32 வருடங்களாக நீதிமன்ற கட்டளைச் சேவகராகக் கடமையாற்றிய ப.சிவச்சந்திரா நேற்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். இவரது சேவையைக் கௌரவித்து நீதிமன்ற ஊழியர் நலன்புரி சங்கத்தால் சேவை நலன் பாராட்டு விழா நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடத்தப்பட்டது. (ற-9)

## அரங்க அளிக்கை நிகழ்வு

கொழும்புத்துறை, ஜூலை 29
திருமறைக்கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து உடுவில் ஆர்க் அமைப்பின் மாற்று ஆற்றல் மாணவர்களின் அரங்க அளிக்கை நிகழ்வுகளைக் கொண்ட வண்ணக் கோலங்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளது.
திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறும்.
முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா. செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாகாணத் தலைவி அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸும் கலந்து கொள்வர். (ற-135)

## முதலுதவி பயிற்சி வகுப்பு

சாரணர் மாவட்ட காங்கேசன்துறைக் கிளையின் சாரணர்களுக்கான மூன்று நாள் முதலுதவிப்பயிற்சிவகுப்புக்கள் ஓகஸ்ட் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெறும்.
பயிற்சிவகுப்புகளில் அனைத்து சாரணர்களையும் கலந்து கொள்ளுமாறு காங்கேசன்துறைக் கிளையின் சாரண ஆணையாளர் செ.சற்குணராஜா அறிவித்தார். (ற-9)

# பனை இனங்களை இனங்கண்டு அவற்றைப் பராமரிக்க வேண்டும்

## வடக்கு விவசாய அமைச்சர் கிளி. விவசாய பீடத்திடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ். பல்கலைக் கழக விவசாய பீடம் பனை இனங்களை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இவற்றைக் கிளிநொச்சி விவசாயபீடத்தில் நடுகை செய்து பராமரிக்கவும் முன்வர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்தார்.
வடமாகாண பனை அபிவிருத்தி வார இறுதி நாளான நேற்று வியாழக்கிழமை பனை அபிவிருத்தி ஆய்வரங்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடந்தது. யாழ். பல்கலைக் கழக விவசாயபீட மூத்த விரிவுரையாளர் கலாநிதி சீ.வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கத் தொடக்க அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கில் ஏனைய மரங்களை விடப் பனை மரங்களே அதிகம். மற்றெல்லா மரங்களையும் விட அதிக பயன்தரக் கூடியவையும் பனைகள்தான். அரிய வளமான பனைகள் பற்றி ஆய்வாளர்கள் அதிகம் கண்டு கொள்வதாக இல்லை.
பனை என்று நாங்கள் பொதுவாக அழைத்தாலும் பனைகளில் வித்தியாசம் உண்டு. வடக்கில் வேறுபட்ட இயல்புகளைக் காட்டுகின்ற பனை மரங்கள் இருக்கின்றன. அவற்றில் குட்டையான பனை மரங்கள், அதிக எண்ணிக்கையான பழங்களைத் தரக்கூடிய பனை மரங்கள், அதிகம் பதநீரைத் தரக்கூடிய பனை மரங்கள், அதிக வெல்லச் செறிவைக் கொண்ட பதநீரைத் தரவல்ல பனை மரங்களைக் கள ஆய்வுகளின் மூலம் அடையாளம் காண்பது அவசியம். கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகம் 200 வகையான பனைகளை இனம்கண்டு தனது வளாகத்தில் நட்டுப் பராமரித்து வருகிறது. யாழ். பல்கலைக்கழக விவசாய பீடமும் பனைகளை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும். இவற்றை விவசாய பீடம் இயங்கும் கிளிநொச்சியில் நடுகை செய்து பராமரிக்கவும் முன்வர வேண்டும். இதற்கு பனை அபிவிருத்திச் சபையும் பனை ஆராய்ச்சி நிலையமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ற-5)

## கசிப்பு வைத்திருந்த ஐவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 29
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்புக் காய்ச்சிய 3 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
தருமபுரம் பகுதியில் 1000 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும், புளியம்பொக்கணைப் பகுதியில் 2 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது 7 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், 14 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டது.
நேற்று முன்தினம் புதன்கிழமை, தருமபுரம் பகுதியில் ஆயிரம் மற்றும் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த சந்தேகத்தில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர். குமாரசாமிபுரத்தில் 2 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவர் என 3 பெண்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப் படவுள்ளனர். (ற-5-ரி3)

## ஒளிப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29
"பகிர்வு" ஒளிப்படக்கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது. பலாலி வீதி - பருத்தித்துறை வீதிச் சந்தியில் அமைந்துள்ள சன்மார்க்க ஒன்றிய இளைஞர் கழகத்தில், இன்றும், நாளையும், காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. (ற-ரி4)

# வலி. தென்மேற்கு பிரதேசத்தில் வர்த்தகர் சங்கம் நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29
வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களின் நலன்கருதி வர்த்தகர் சங்கம் நிறுவப்படவுள்ளது.
வலி. தென்மேற்குப் பிரதேசத்தில், மானிப்பாய்ப் பட்டினம், மானிப்பாய்க் கிராமம், பண்டத்தரிப்புப் பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமம் ஆகிய நான்கு உப அலுவலகப் பிரிவுகளிலும் பெருந்தொகையான வர்த்தக நிலையங்கள் இருக்கின்ற போதும் வர்த்தகர் சங்கம் இல்லாமை குறித்து வர்த்தகர்கள் மத்தியில் குறைபாடு நிலவுகின்றது.
கடந்த இருவருடங்களுக்கு முன் மானிப்பாய் கோவில்பற்றிலுள்ள மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய 5 கிராமங்களிலும் உள்ள வர்த்தகர்களை உள்ளடக்கிய வர்த்தகர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சில காலம் இயங்கி வந்த போதிலும் பின்னர் சங்கம் இயங்காமல் முடங்கியது.
முதற்கட்டமாக மானிப்பாய்ப் பட்டினத்திலுள்ள வர்த்தகர்களை உள்ளடக்கிய சங்கத்தை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுடன் தொடர்புகளையும் பிரதேச செயலர் ஏற்படுத்தியுள்ளார். (ற-115)

# இராணுவச் சிப்பாய் கொலை வழக்கில் ஆனந்தராஜா நிரபராதி என விடுதலை

## யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
மல்லாகம் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரைக் கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் சந்தேகநபர் இரத்தினம் ஆனந்தராஜாவை நிரபராதி எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்தது யாழ். மேல் நீதிமன்றம்.
2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி மல்லாகம் இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவக்கசமீர பிரசாத் குமார என்ற இராணுவச் சிப்பாயைக் கொலை செய்தார் என்றும், தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றையும் உயிருள்ள ரவைகளையும் உடைமையில் வைத்திருந்தார் என்றும் மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சட்டமா அதிபரால் யாழ். மேல் நீதிமன்றத்தில் இரத்தினம் ஆனந்தராஜா என்பவருக்கு எதிராக குற்றப்பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.
அதில் வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சிகளாக மல்லாகம் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ உத்தியோகத்தர்கள் சாட்சியமளித்தனர்.
மல்லாகம் இராணுவ முகாமில் கடமையாற்றிய குமாரதாசகே சமீர பிரசாத் குமார என்ற இராணுவச் சிப்பாய் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் எதிரி கைது செய்யப்பட்டார். எதிரியின் உடைமையில் தன்னியக்கத் துப்பாக்கியும் உயிருள்ள ரவைகளும் இருந்தன என சாட்சிகளான இராணுவ உத்தியோகத்தர்கள் தமது சாட்சியத்தில் தெரிவித்தனர்.
அரச தரப்புச் சாட்சியங்களையடுத்து இந்த வழக்கில் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த இரத்தினம் ஆனந்தராஜா நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.
இந்த வழக்கில் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்செயல்களுடன் எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. மல்லாகம் இராணுவ முகாமுக்கு அருகிலேயே எனது வீடு இருக்கின்றது. வீட்டில் இருந்த எனக்கு, இராணுவ முகாம் பக்கம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. சூட்டுச் சத்தம் கேட்ட சில நிமிடங்களில் இராணுவத்தினர் வந்து என்னைக் கைது செய்தனர். கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயினுடைய சாவுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என இரத்தினம் ஆனந்தராஜா தனது சாட்சியத்தில் கூறினார்.
இரு தரப்புச் சாட்சியங்களையும் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அரச தரப்பால் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (ற-வ-5)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
08.01.1949
உதிர்வு
01.07.2016
அமரர் பொன்னம்பலம் ஈஸ்வரன்
(ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
Retired Chief Pharmacist, Teaching Hospital - Jaffna.
முன்னாள் சிறாப்பர், முன்னாள் தலைவர், மாவிட்டபுரம் மாரியம்மன் ஆலயம்)
மாவிட்டபுரம், மாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், காரைநகர் மாப்பாணவூரியை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது தங்களது தன்னலமற்ற சேவையை வழங்கிய வைத்தியசாலை ஆளணியினர் குறிப்பாக Ward - 08 ஐச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். மற்றும் அன்னார் 01.07.2016 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி குறுந்தகவல்கள், மின்னஞ்சல், முகப்புத்தகம் ஊடாக தம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
மாப்பாணவூரி, காரைநகர். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் நாள் நிகழ்வுகள்

தென்மராட்சி, ஜூலை 29
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும்.
வித்தியாலய அதிபர் க.உதய குமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதய குமாரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் கௌரவ விருந்தினராக வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் க.மயில்வாகனமும் கலந்து கொள்வர். (ற-9)

## தவறி விழுந்து அர்ச்சகர் காயம்

அளவெட்டி, ஜூலை 29
அளவெட்டி மலைவேம்படிப் பகுதியில் அர்ச்சகர் ஒருவர் மாடியில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்தார்.
கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. அளவெட்டி மலை வேம்படிப் பகுதியைச் சேர்ந்த வைரவநாதன் யவேந்திரன் (வயது - 45) என்பவரே காயமடைந்தார்.
கால்முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-ரி, 36)



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

### மூதூர் பிரதேச செயலகம் முன்பாக உறவினர்கள் முன்னெடுத்தனர்

மூதூர், ஜூலை 29
போர்க் காலத்தில் உயிர் இழந்த மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் பிரதேச செயலகத்தின் முன்பாக போராட்டம் நடத் தப்பட்டது.
மூதூர்பிரசைகள் குழுவின் தலைவர் இ.பாஸ்கரன் குருக்களின் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மூதூர் தெற்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.
இறுதிக்கட்டப் போரின் பின் இராணுவத்திடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே, அரசே எமது பிள்ளைகள் எப்போது திரும்பிவருவார்கள், அரசே ஐ.நா. பரிந்துரையை நிறைவேற்று, எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது போன்ற வாசககங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனவும், நிரந்தர வாழ்வாதார உதவிகள் தமக்குச் செய்து தரப்படவேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.
தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மூதூர் பிரதேச செயலாளர் வீ.யூசுப்பிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் கையளித்தனர். (ற-5)

## மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு

கரணவாய், ஜூலை 29
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கல்லூரி முதல்வர் திருமதி பாலட்தரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக வடம ராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் சி. நந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-108)

## சாரண ஆசிரியருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29
காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் கிளையும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இணைந்து சாரண ஆசிரியர்களுக்கான கலைக் கூறு 1பயிற்சி வகுப்புகள் நாளை காலை 9 மணி தொடக்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.
சாரணர் மற்றும் குருளைச் சாரணர் பிரிவுகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# போரால் கணவரை இழந்த பெண்களுக்கு கடன் திட்டம்

### சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
போரால் கணவரை இழந்த பெண்களுக்கு சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாச சம்மேளனம் ஊடாக சுய முயற்சிக் கடன் மற்றும் வாழ்வா தாரத் திட்டங்கள் என்பன நடை முறைப் படுத்தப்பட்டுள்ளன. புதிய திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகள் நன்மையடையக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
இவ்வாறு சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
மாவட்டச் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் கடந்த வருடத்தில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு பலவிதமான கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி கடன் வசதிகளை வழங்கியுள்ளது. தற்போது எமது சமாசம் அகில இலங்கை ரீதியில் முதன்மை பெற்று வருகின்றது.
வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களின் சமாசங்களும் இணைந்து சம்மேளனம் ஒன்றை உருவாக்கி இந்த சம்மேளனம் ஊடாக பல்வேறுபட்ட கடன் வசதிகளை அங்கத்தவர்கள் பெற்று வருகின்றனர்.
குடாநாட்டில் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக அங்கத்தவர்கள் கூடுதலாக இணைக்கப்பட்டு அவர்களுக்கு சுய முயற்சிக்கான கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படும். போரின் பின்னர் இயங்காமல் இருக்கும் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளத் திறக்கவும் விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
இயங்காமல் இருக்கும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு அமைப்புக்களை மீளத்திறப்பதன் மூலம் அந்தக் கிராம மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள். - என்றார். (ற-17)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ரம்ஸான் நல்லிணக்க விழா நேற்று மு.ப. 10 மணியளவில் மஹ்மூத் மண்டபத்தில் நடந்தது. நிகழ்வில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 100க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். யாழ். நாவாந்துறை மகாவித்தியாலயம், வைத்தீஸ்வராக் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஆகியவற்றுடன் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியும் இணைந்து கலை கலாசார நிகழ்வுகளை நடத்தின. பாடசாலை அதிபர் எம்.அஸ்ரப், வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, வட மாகாண எதிர்கட்சித் தலைவர் தவராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான ஆனல்ட், அய்யூப் அஸ்மின், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான மௌலவி சுபியான், சரபுல் அனாம், பாடசாலை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-ரி)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 29
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.
பெரியகுளம் மற்றும் மயில்வாகனபுரம் பிரதேசங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர், ஏற்கனவே அனுமதிப் பத்திம் இன்றி மணல் ஏற்றிய குற்றத்திற்காக கிளிநொச்சி நீதிவான் மன்றத்தினால் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டவர் என்று கூறப்படுகின்றது. (ற-5,ரி3)

# புதிய மோட்டார் சைக்கிள்களை மாவட்ட செயலகத்தில் பதியலாம்

### யாழ். மாவட்ட செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் புதிய மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு யாழ். மாவட்ட செய லர் நா.வேதநாயகன் தெரி வித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருந்த பதிவு நடவடிக்கை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
முழுமைப்படுத்தப்பட்ட எம்.ரி.ஏ.- 2 படிவம், மோட்டர் சைக்கிள் ஆவணங்கள், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி, கடவுச் சீட்டு ஒளிப் பட அளவிலான விண்ணப்ப தாரியின் 2 ஒளிப்படங்கள் - பின்புறம் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், மோட்டார் சைக்கிளின் முன் பக்கம் மற்றும் பின் பக்கங்களும், கொள்வனவு பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்ப முகவரி தேசிய அடையாள அட்டையின் முகவரியுடன் வேறுபட்டிருப்பின் கிராம சேவையாளரால் வதிவிட [illegible] பதிவு செய்வதாயின் முழுமைப் படுத்தப்பட் எம்.ரி.ஏ.- 3 படிவம், ஈடு பதிவு செய்வதாயின் ஈட்டுப் பிணைப்புப் பத்திரம் போன்றவற்றைச் சமர்ப்பித்து மற்றும் குறிப்பிட்ட கட்டணங்களயும் செலுத்தி பதிவுகளை மேற் கொள்ளமுடியும். இவற்றுக்கான பதிவுகள் அனைத் தும் இணையம் மூலம் நடை பெறுவதால் உடனடியாகவே பதிவுப் புத்தகத்தை பெற்றுக் கொள்ளலாம்.
2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சுங்கத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுங்கத் தளைநீக்க ஆவணங்களின் பட்டியிலில் உள்ள மோட்டார் சைக்கிள்களை கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்குப் பின் எந்த மாவட்டக் காரியாலயங்களிலும் பதிவு செய்யமுடியாது. அவற்றை தலைமைக் காரியாலயத்திலேயே பதிவு செய்ய வேண்டும். - என்றார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத்தொடர்புச் சாதனங்கள், சினிமாவால் மன்னாரில் பாலியல் துர்நடத்தை அதிகரிக்கிறது

## மன்னார் மாவட்ட நீதிவான் அலெக்ஸ்ராஜா சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 29

தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் தென் இந்திய சினிமாக்களின் தாக்கத்தால் மன்னார் மாவட்டத்தில் பாலியல் துர்நடத்தைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா தெரிவித்தார்.

சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துர்நடத்தைகளைத் தடுக்கும் வகையிலும், சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டின் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

சிறுவர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக பல்வேறு மட்டங்களில் ஆராய்ந்து ஒருவருக்குத் தண்டனை வழங்குவதைவிட அடிப்படையில் அவர்களை திருத்தம் செய்து எதிர்காலத்தில் அவர்களை நல்ல குடிமக்களாக மாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கம். தற்போது தமது சொந்த வீட்டிலும், வெளியிலும் சிறுவர்கள் துர்நடத்தைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். துர்நடத்தைகளை நாங்கள் ஒவ்வொரு வகையாகப் பிரித்து பார்க்க முடியாதநிலை உள்ளது.

இவ்வாறான விழிப்புணர்வுச் செயலமர்வு மூலமாக சிறுவர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற துர்நடத்தைகளை நீக்கி சிறுவர்களின் எதிர்காலத்தை நல்ல ஒளிமயமான எதிர் காலமாக மாற்றவேண்டும் என்பதே எங்கள் எல்லோருடைய நோக்கமுமாகும்.

இந்த நோக்கத்துக்காக வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பொலிஸ் அதிகாரிகள் மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றனர். நீதிமன்றத்தில் சிறுவர் துர்நடத்தை என வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றபோது அந்த வழக்கை நாங்கள் மிகவும் கண்ணியமாக வேறு எவருக்கும் தெரியாத வகையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்றோம். இதற்கு எங்களுடைய சட்ட வைத்திய அதிகாரிகள் பெரும் ஒத்துழைப்பை வழங்குகின்றனர்.

பாலியல் துர்நடத்தை என்பது வார்த்தைகளாலும், செயற்பாடுகளாலும் ஏற்படுகின்றது. எங்களுக்கு அறிக்கையிடப்படுகின்ற வழங்குகளைப் பார்க்கின்றபோது பாலியல் துர்நடத்தை மன்னார் மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நீதிமன்றத்துக்கு வரும்போது பல தடவைகள் பாதிக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். இதனை நாங்கள் ஆராம்பத்திலேயே தடுப்போமாக இருந்தால் இந்தச் சிறுவர்களின் எதிர்காலம் நல்லதொரு எதிர்காலமாக அமையும்.

துர்நடத்தைக்கு உள்ளான சிறுவர்களை பாதுகாப்பதற்கு பல சட்டங்கள் காணப்படுகின்றன. பாலியல் துர்நடத்தை சம்பந்தமாக பல இறுக்கமான சட்டங்களும் காணப்படுகின்றன. ஆனால் சமூக மட்டங்களினூடான விழிப்புணர்வுகள் குறைவாகக் காணப்படுகின்றது. உங்களுடைய தகவல்களை பொலிஸாருக்கு வழங்குவதற்கோ அல்லது நீதிமன்றத்திற்கு வழங்குவதற்கோ அல்லது சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளுக்கு வழங்குவதற்கோ ஒருபோதும் அஞ்சக் கூடாது. அவ்வாறு தகவல்களை வழங்க தயக்கம் காட்டும் சந்தர்ப்பத்தில் எழுத்து மூலமாக இரகசியமாக பொலிஸாரிடம் அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடி யும். உங்களது தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும்.

சிறுவன் அல்லது சிறுமி ஒருவர் தனது இளம் பராயத்தில் பாலியல் துர்நடத்தைகளுக்கு உள்ளாகி பாதிக்கப்படுவாராக இருந்தால் அவரின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். அவர் அதிலிருந்து வெளியே வருவதற்கு நீண்ட கரலங்கள் எடுக்கும். சிறுவர் துர்நடத்தைகளை தடுப்பதற்கு உங்கள் அனைவராலும் முடியும் என நான் நம்புகின்றேன் - என்றார். (ற-21,56)

---

## ஆசிரியர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மடு வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஆசிரியர் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்றும், நாளையும் இருநாள்களாக மாநாடு நடைபெறும்.

முதல்நாள் அமர்வு இன்று காலை 8.30 மணிக்கு மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும். நாளை சனிக்கிழமை இரண்டாம் நாள் காலை அமர்வு மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்திலும், மாலை அமர்வு மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடம்பெறும். (ற-ரி4)

---

## நவநாள் திருவிழா

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலயவருடாந்தநவநாள் திருவிழா இன்று மாலை 4 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6ஆம் திகதி திருநற்கருணை ஆராதனையும் வழிபாடும் இடம்பெற்று மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் வழிபாடும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் வழிபாடுகள் ஆலய பங்குத்தந்தை அருட்திரு யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் இடம்பெறும். (ற-9)

---

## நடுவர் சபை அமர்வுகள் இடம் மாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி நடுவர் (மத்தியஸ்தர்) சபையின் அமர்வுகள் நாளை மறுதினம் தொடக்கம் தற்காலிகமாக சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம் பிகை வித்தியாலயத்தில் நடை பெறும் என்று சபைத் தவிசாளர் வை.இராசரத்தினம் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் ஜூலை 31 ஓகஸ்ட் 7,14, 21,28 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அமர்வுகள் தற்காலிகமாக அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன என்றும் தெரிவித்தார். (ற-9)

---

# கிளிநொச்சியின் கட்டுமானங்களை நிறைவேற்றும் காலம் கனிகின்றது

## மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துக் கட்டுமானங்களையும் படிப்படியாக நிறை வேற்றுவதற்குரிய காலம் தற்போது கனிந்து வந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம்.

கிளிநொச்சி புளியம்பொக்கணை, பெரிய குளத்தில் பொது நோக்கு மண்டபத் திறப்பு விழா நடந்தது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் காணிப் பிணக்குகள் நிறைய இருக்கின்றன. அவற்றின் மத்தியில் பொது நோக்கு மண்டபம் அமைப்பதற்கு காணி வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வரிசையில் பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டங்களில் வீதிப் புனரமைப்பு, வீட்டுத் திட்டம், வாழ்வாதாரம், காணிப் பிரச்சினை என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. மாவட்டத்தில் வீடில்லாது இருப்பவர்களுக்கு இந்த ஆண்டு கிடைக்கும் வீட்டுத் திட்டங்களில் வீடுகள் ஒதுக்க இருக்கின்றோம். இன்னும் 13 ஆயிரம் குடும்பங்களுக்கு மாவட்டத்தில் வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டியுள்ளது. இந்த ஆண்டு 2 ஆயிரம் பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. யு.என். கபிட்டட் நிறுவனம் எமது மாவட்டத்தில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. புளியம்பொக்கணைப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. தற்காலிக கட்டடத்தில் இயங்கும் பிரதேச செயலகம் விரைவில் புதிய கட்டடத்தில் மக்களுக்கு சேவைகளை வழங்கும். - என்றார்.

நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன், கண்டாவளைப் பிரதேச செயலக உதவித திட்டமிடல் பணிப்பாளர், யு.என்.கபிட்டட் நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட முகாமையாளர், பொறியியலாளர்கள், முதன்மை கிராம உத்தியோகத்தர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21,ரி3)

---

# ஈ.பி.டி.பியினருக்கு எதிரான வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

## கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்திய குற்றசாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஊர்காவற்றுறையில் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மாவை சேனாதிராசா உள்ளிட்ட அரசியல் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றிலிருந்து யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் பரப்புரையின் போது, மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம் உள்ளிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்தனர்.

இந்த வழக்கு யாழ். நீதிவான் மன்றில் விசாரிக்கப்பட்டு, அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

சட்டவிரோத உறுப்பினர்களுடன் சேர்ந்து, இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த செபஸ்டியன் ரமேஸ் அல்லது நெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன், அன்ரன் சிவராஜா அல்லது ஜீவன் மற்றும் நமசிவாயம் கருணாகரமூர்த்தி என்ற நான்கு பேருக்கு எதிராக மொத்தமாக 47 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் திருகோணமலை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் வழக்கு விசாரணையை சம்பவம் இடம்பெற்ற மாவட்டத்தில் முன்னெடுப்பதற்காக வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு சட்டமா அதிபரினால் மாற்றப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இருந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதாக ஜூலை 4ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இந்த அறிவித்தலையடுத்து, இந்த வழக்குத் தொடர்பான திருகோணமலை மேல் நீதிமன்றத்தின் பதிவேடுகளை யாழ். மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு கடிதம் அனுப்புமாறு யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிபதி இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

இந்த வழக்குத் தொடர்பான பதிவேடுகள் கிடைத்ததும் யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ)

---

## தொண்டர் ஆசிரியருக்கு அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 29

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வன்னி தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயராசா தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எமது நியமனங்கள் இழுத்தடிக்கப்படுகின்றன என்று உணர்கின்றோம். இது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்- என்று அவர் தெரிவித்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மருத்துவர்கள் வெளிநாட்டில்; வெளிநாட்டினர் இலங்கை வர எதிர்ப்பு

## இது என்ன நியாயம் என்கிறார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜூலை 29
இலங்கையின் மருத்துவர்கள் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். அப்படியாயின் ஏன் வெளிநாட்டு மருத்துவர்கள் இலங்கையில் பணிபுரிய முடியாது?. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. அதில் அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள எட்கா உடன்படிக்கை தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். எட்கா உடன்டிபடிக்கை கைச்சாத்திடப்படுவதால் இந்திய மருத்துவர்கள் இலங்கைக்கு வந்து விடுவார்கள் என்று கூறுகின்றனர். ஒருவிடயத்தை இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மருத்துவர்கள் 11 ஆயிரம் பேர் லண்டனில் பணி புரிகின்றனர். அப்படியாயின் ஏன் வெளிநாட்டு மருத்துவர்கள் இலங்கையில் பணிபுரிய முடியாது என்று நான் கேள்வி எழுப்புகின்றேன். இலங்கை மருத்துவர்கள் வெளி நாடுகளில் பணி புரியலாம். வெளி நாட்டு மருத்துவர்கள் இலங்கையில் பணிபுரிய முடியாதாம். என்ன நியாயம் என்று எனக்கு விளங்கவில்லை.

இவர்கள் இப்படித்தான் விமர்சனம் செய்துகொண்டே இருப்பார்கள். 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கை கொண்டு வரப்பட்ட போது எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் காரணமாக எனது உடலில் மூன்று குண்டுகள் இன்னும் இருக்கின்றன. அவற்றை வெளியில் எடுக்க முடியாது. அவ்வாறு நாங்கள் இந்திய - இலங்கை உடன்படிக்கைக்காகப் பாடுபட்டோம்.

அன்று அதனை எதிர்த்தவர்கள் பின்னர் அந்த மாகாண சபையில் அங்கத்துவம் வகித்தனர். அதுமட்டுமன்றி மாகாண சபை ஆட்சியைத் தீர்மானிப்பது தாங்கள்தான் என மார்த்தட்டிக் கொண்டனர். இவர்கள் போன்றவர்களின் செயற்பாடுகளே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கும் தடையாக இருக்கின்றன - என்றார்.
(ற-5)

# கொழும்புக்கு வந்தது ரஷ்யப் போர்க் கப்பல்



கொழும்பு, ஜூலை 29
ரஷ்ய கடற்படையின், தேடுதல் மற்றும் மீட்புக் கப்பலான 'இகோர் பெலோசோவ்', நான்கு நாள் நல்லெண்ணப் பயணமாக கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை வந்தது.

96 மாலுமிகளுடன் வந்த ரஷ்ய கடற்படைக் கப்பலுக்கு கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அலெக்சே நெகோட்சேவ், கப்பல் அணியின் தளபதி கப்டன் மாக்சிம் அலாலிகின், சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நாளை சனிக்கிழமை வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள ரஷ்ய கடற்படைக் கப்பலில் உள்ள மாலுமிகள், கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் ஓமான் மற்றும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தரித்திருந்த நிலையிலேயே ரஷ்ய போர்க்கப்பலும் கொழும்பு வந்துள்ளது.
(ற-5)

# இந்திய அம்புலன்ஸ் சேவை நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்





கொழும்பு, ஜூலை 29
அவசரநிலை நோயாளர் காவு வண்டிச்சேவை (அம்புலன்ஸ்) கொழும்பில் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்தியப் பிரத்மர் நரேந்திர மோடி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து நேற்றுக் காலை அதனை ஆரம்பித்தனர்.

இந்திய - இலங்கை புரிந்துணர்வு அடிப்படையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய இந்தியாவின் அவசரநிலை நோயாளர் காவு வண்டிச் சேவைகள் நேற்று ஆரம்பமாகின.

ஆரம்ப நிகழ்வு கொழும்பு காலி முகத்திடலில் இந்தியத் தூதரகம் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. தலைமை விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவிலிருந்துகொண்டு காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த நிகழ்வில் இணைந்தார்.

நோயாளர் காவு வண்டிச்சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட சாரதிகளுக்கு இந்தியாவில் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.
(ற-5)

# கோத்தபாய பதவியிலிருந்தபோது ஒழுங்காக செயற்பட்டதாம் சட்டம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 29
முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச பதவியிலிருந்தபோதுசட்டம்ஒழுங்காக தன் கடமையைச் செய்தது. இவ்வாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன புகழாரம் சூட்டியுள்ளார்.

பொலிஸார் சரியான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார். அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
கொழும்பு உட்பட மேல்மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் பாத யாத்திரைகள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் முன்னெடுக்கப்படுவதால் எமது அடிப்படை உரிமை மீறப்படுகின்றது. பொலிஸ்மா அதிபர், போக்குவரத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இந்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழு தனது முறைப்பாட்டை உரிய முறையில் முன்னெடுக்காத பட்சத்தில் பொலிஸாருக்கு எதிரான உயர் நீதிமன்றிலும் மனுத்தாக்கல் செய்ய நேரிடும்.- என்றார்.
(ற-5)

# பிரச்சினைகளைத் தீர்க்கவே புதிய அரசமைப்பு உருவாக்கம்

## ஜனாதிபதி மைத்திரிபால விளக்கம்

கொழும்பு, ஜூலை 29
நாட்டில் உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது. பிரச்சினையை அதிகரித்துக் கொள்வதற்காக அரசமைப்பு உருவாக்கும் முயற்சி நடைபெறவில்லை. இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்தார்.

கெட்டம்பே மகாநாம கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய பிரிவெனா தின அரச நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பௌத்த சமயம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதை அகற்றி புதிய அரசமைப்புத்தயாரிக்கப்படுகின்றது என்று முன்னெடுக்கப்பட்டு வரும் பரப்புரைகள் முற்றிலும் போலியானவை. மகா சங்கத்தினருக்கோ அல்லது பௌத்த சமயத் துக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் எவ்வித நடவடிக்கையையும் அரசு எடுக்காது.

பௌத்த மக்கள் உள்ளடங்கலாக எல்லா சமயங்களும் எல்லா இனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதிய அரசமைப்பே நாட்டுக்கு முன் வைக்கப்படும்.

நாட்டை பிளவுப்படுத்தும், நாட்டின் இறைமைக்கும் பாதிப்பாக அமையும் எந்தவொரு விடயமும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படவில்லை. இது தொடர்பாக சிலர் முன்னெடுத்து வரும் போலிப் பரப்புரைகளை ஜனாதிபதி என்ற வகையிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் நிராகரிக்கின்றேன். தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் மூலம் நாட்டுக்குப் பொருத்தமான எல்லோருக்கும் நியாயமான ஒரு புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கு அரசு அர்ப்பணத்தோடு உள்ளது - என்றார்.
(ற-5)

# இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு இலங்கையர் விருப்பப்படியே அமையும்

## இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29
இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு, இலங்கை மக்களின் அபிலாசைகளின் அடிப்படையில் இருக்கவேண்டும். எங்களின் செயற்திட்டங்கள் இலங்கை மக்கள் மற்றும் இலங்கை அரசின் தலைமைத்துவத்தால் ஏற்படுத்தப்படும் தெரிவுகள் மற்றும் முன்னுரிமையில் தங்கியுள்ளது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்துக்கு எங்களது உதவிகளை வழங்கியிருந்தோம். (துரையப்பா விளை [illegible] இலங்கை - இந்திய ... திட்டத்தின் ஊடான ஒத்துழைப்பு தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கு வழங்கப்படுகின்றது. அவசரநிலை நோயாளர் காவு வண்டிச் சேவையை வெற்றிகரமாக ஆரம்பித்ததில் பிரதமர் விக்கிரமசிங்கவைப் பாராட்ட வேண்டும். எங்களது நெருக்கமான உதவி. எவ்வாறு களத்தில் உள்ள மக்களுக்கு பயன்பாடாக உள்ளது என்பதை உறுதியாக இது எடுத்துக்காட்டுகின்றது.

இந்திய அனுபவங்கள், செயற்திறன்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பன எவ்வாறு இலங்கையிலுள்ள எங்களது நண்பர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென்பதற்கு இது மற்றுமொரு உதாரணமாகும்.

உறுதியான நாகரிகத் தொடர்புகள் எங்களது இரு நாடுகளினதும் மக்களை ஒன்றுபடுத்தியுள்ளன. இன்று இந்தியாவின் செயற்திறன்கள் மற்றும் உங்களது தேவைகளுக்கு இடையிலான பங்குடைமை எங்களது மக்களின் வாழ்க்கைகளை மட்டும் தொடவில்லை. அது எங்களது ஆக்கபூர்வமான பிராந்தியக் கூட்டுறவின் பாதையையும் காட்டுகிறது.


இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு இலங்கை முழுவதிலுமாக பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறுபட்ட பகுதிச் செயல் திட்டங்களின் ஒரு பரந்துபட்ட பரம்பலை அனுபவிக்கிறது. ஆனால் அவை உங்களது அபிலாசைகளின்படி நிகழ்தல் வேண்டும். இந்தக் காரணத்தினாலேயே எங்களது கூட்டுறவுச் செயல் திட்டங்கள் மக்களினாலும் மற்றும் இலங்கை அரசின் தலைமைத்துவத்தினாலும் ஏற்படுத்தப்படுகின்ற தெரிவுகள் மற்றும் முன்னுரிமைப் படுத்தல்களில் தங்கியுள்ளது.

ஓர் ஒன்றுபட்ட, உறுதியான மற்றும் சுபீட்சமான இலங்கைக்காக இந்தியா துணை நிற்கும். எங்களது பங்குடைமையின் இலக்கும் அதுவாகும். அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் சேவை இந்த நட்பின் பிரத்தியேகமான உதாரணமாகும் - என்றார்.
(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிய நடனத்துடன் மகிந்த நடைபவனி ஆரம்பம்







கொழும்பு, ஜூலை 29
மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினால், அரசுக்கு எதிரான நடைபவனி நேற்று ஆரம்பமானது. கண்டி நீதிவான் மன்றம் மற்றும் மாவனெல்ல நீதிவான் மன்றம் என்பன விதித்திருந்த தடைகளின் காரணமாக, கண்டி பெரதெனியாப் பாலத்துக்கு அருகிலேயே நடைபவனியை கூட்டு எதிரணியால் ஆரம்பிக்க முடிந்தது.

சர்வ மத வழிபாடுகளைத் தொடர்ந்து கண்டிய நடனத்துடன் நடைபவனி ஆரம்பமானது. கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினருடன் மக்கள் இந்தப் நடைபவனியில் கலந்து கொண்டனர்.

புதிய அரசமைப்பு உருவாக்கம், இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை அரசு மீது சுமத்தியுள்ள கூட்டு எதிரணி, இவற்றுக்கு எதிராகவே இந்த நடைபவனி நடத்தப்படுகின்றது என்று தெரிவித்தது. கண்டி தலதா மாளிகையில் இருந்து ஆரம்பமாகி கொழும்பு நோக்கிச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது.

கண்டி நீதிவான் மன்றம் மற்றும் மாவனெல்ல நீதிவான் மன்றம் என்பவற்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ததன் அடிப்படையில், கண்டி மாநகரில் நடைபவனி ஆரம்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. மாவனெல்ல நகரின் ஊடாகச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

அதனால் பாதயாத்திரை ஆரம்பிக்கும் இடம் தொடர்பில் குழப்பம் நிலவியது. நேற்றுக் காலை 10 மணிக்கு பெரதெனிய ஹெட்டம்பே விகாரைக்கு மகிந்த ராஜ பக்ச தலைமையிலான குழுவினர் வந்தனர். அங்கு வழிபாடுகளை முடித்துக் கொண்டு கண்டி கட்டுகலை சிறீ செல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர். பின்பு பெரதெனியாப் பாலத்திலிருந்து நடை பவனி கண்டிய நடனத்துடன் ஆரம்பமானது.

மகிந்த ராஜபக்ச நடைபவனியில் பாதுகாப்பு ஜீப்பிலிருந்தவாறு கலந்து கொண்டார். நடைபவனி காரணமாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நேற்று மாலை நடைபவனி மாவனெல்ல நகரின் புறச்சுற்றுப் பாதையில் நிறைவுற்றது. இன்று அங்கிருந்து இரண்டாம் நாள் நடைபவனி ஆரம்பமாகவுள்ளது.

பெரிய சவாலுக்கு மத்தியில் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளோம். பாதயாத்திரை நிறுத்தப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க அரசு முயற்சித்தது. அதனை உடைத் தெறிந்துள்ளோம். மக்களின் பலத்துடன் வீதிக்கு இறங்கியுள்ளோம். ரணில் விக்கிரமசிங்க மக்களின் ஆதரவைத் தேட இப்போது முயற்சிக்கின்றார்.

அரசு நாட்டைப் பிளவுபடுத்தி சுயாதீன தன்மையை பன்னாட்டிடம் ஒப்படைத்து நாட்டை படுபாதாளத்துக்குள் தள்ளியுள்ளது. முதலில் அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் – என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல். (ற-5)

## கொழும்பில் தரித்து நிற்கும் அமெ. போர்க் கப்பலில் வரவேற்பு நிகழ்வு



கொழும்பு, ஜூலை 29
கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்கக் கடற்படையின் ஈரூடக போக்குவரத்துத் தள போர்க் கப்பலான, யு.எஸ்.எஸ். நியூ ஓர்லியன்சில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை வரவேற்பு நிகழ்வு நடந்தது. அதில் அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்றனர்.

அமெரிக்க போர்க்கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் கிளென் ஜமிசன் விருந்தினர்களை வரவேற்றார்.

அமெரிக்க கடற்படை யினரின் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. விருந்துபசாரமும் அளிக்கப்பட்டது.

அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, பைசர் முஸ்தபா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, கடற்படைத் தளபதி மற்றும் இராணுவத் தளபதி உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

அமெரிக்க – இலங்கைக் கொடிகள் போல வடிவமைக்கப்பட்ட கேக்கும் இந்த நிகழ்வில் வெட்டப்பட்டது. (ற-5)

## மக்களை ஒன்றிணைத்த ராணுவத்தை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முயற்சி

### பெங்கமுவ நாலக்க தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 29
தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை ஒன்றிணைத்து அமைதியாக வாழ வழியேற்படுத்திய இராணுவத்தினரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த மனித உரிமை அமைப்புகள் முயற்சிக்கின்றன.

இவ்வாறு தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் பெங்கமுவ நாலக்க தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாக பிரிவினைவாதிகளுக்கு வாய்ப்பளிக்கும் செயற்பாடுகளை தற்போதைய நல்லாட்சி அரசு முன்னெடுகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டிய தேவையில்லை. சில பிரிவுகளை மாத்திரம் திருத்தத்துக்கு உட்படுத்தினால் போதும்.

எங்களுக்கு கிடைத்திருக்கும் தகவலுக்கு அமைய அரசமைப்பை மாற்றியமைத்தல் அல்லது திருத்தத்துக்கு உட்படுத்தும் செயற்பாடானது பிரிவினைவாதிகளுக்கு இடமளிக்கும் ஒரு விடயமாகவே அமைந்துள்ளது. இதுவொரு பிழையான விடயம். ஆகவே அதற்கு இடமளிக்கக்கூடாது.

> புதிய அரசமைப்பு உருவாக்கத் தின் ஊடாக பிரிவினைவாதிகளுக்கு வாய்ப்பளிக்கும் செயற் பாடுகளை தற்போதைய நல்லாட்சி அரசு முன்னெடுகின்றது. புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டிய தேவையில்லை. சில பிரிவுகளை மாத்திரம் திருத்தத் துக்கு உட்படுத்தினால் போதும்.

போரின் போது வடக்கிலும் கிழக்கிலும் வாழ முடியாத நிலையில் இடம் பெயர்ந்தவர்கள், காயமடைந்தவர்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை காட்டவில்லை. நாட்டில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டதன் பின்னர் மனித உரிமைகள் தொடர்பில் பேசிக்கொண்டு தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்களின் உரிமைகள் தொடர்பில் ஆராய்கின்றனர்.

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளே தீவிரவாதத்தை ஊக்குவித்தன. அவர்கள் சதாரணமாக தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் ஆராய்வதாகக் காட்டிக் கொண்டு தீவிரவாதத்தைத் தவறு அல்லவென நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து வாழ வழியேற்படுத்திய இராணுவத்தைக் குற்றவாளிகளாகக் காட்ட மனித உரிமை அமைப்புகள் முயற்சிக்கின்றன – என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போகச் செய்யப்பட்டோர் குடும்பங்கள் அல்லாடும் பரிதாபம்!

இந்த நாட்டில் போர் நடைபெற்ற வேளையில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் தமது உறவுகளுக்கு என்னதான் நடந்தது என்பதனை அறிவதற்குத் துடியாய்த் துடிக்கிறார்கள். தமக்கு இப்போதுள்ள நிலையில் அதுவே இன்றைய முக்கியமான தேவை என்று தெரிவித்துள்ளனர்.

இதனை நல்லாட்சி அரசு கண்டுபிடித்துச் சொல்வதாக நினைத்துவிடாதீர்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழு மிகுந்த துக்கத்துடன் வெளிப்படுத்தி உள்ளது என்பதே தகவல்.

ஏனைய தரப்புகள் போன்று, வாய்க்கு வந்தவாறு ஏதோ மேலோட்டமாக இந்தக் கருத்தை அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து இலங்கை முழுவதிலும் தாம் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படைகளை, ஆதாரமாக வைத்தே இந்தத் தகவலை இப்போது பரகசியமாகப் பதித்துள்ளனர்.

தத்தமது உறவுகளுக்கு என்ன நடந்தது; எத்தகைய நிலை ஏற்படுத்தப்பட்டது?

எத்தகைய சூழ்நிலையில் காணாமற்போகச் செய்யப்பட்டனர்?

பொருளாதார மற்றும் உணர்வுரீதியான தேவைகளுக்கு அவர்கள் என்ன செய்தார்கள்? என்பவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதன் விளைவே, அச்சொட்டான தகவல்களைப் பெற்றுத் தந்தது என்பதனையும் அறிய முடிகிறது.

மேலும்--

சட்ட ரீதியான தமக்கு உள்ள பொருளாதாரத் தேவைகள், மற்றும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கனத்துப் பெருத்த எதிர்பார்ப்பு காணாமற்போகச் செய்யப்பட்டவர்களிடம் மிக ஆழப் பதிந்திருப்பதும், அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு--

ஐம்பத்து மூன்று சத வீதமானவர்களுக்கு பொருளாதார ரீதியான நெருக்கடி முதன்மையானதாகவும் மிகப் பெரிய அளவிலானதுமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, முப்பத்தாறு சதவீதமானோர் தமது உறவுகளுக்கு என்னதான் நடந்தது, அவர்களது இப்போதைய நிலைப்பாடு என்ன என்பதனை அறிய முடியாது, இத்தனை ஆண்டுகளாக, அல்லாடுகின்றனர் என்பதனையும், செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழு, பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி உள்ளது.

காணாமற் போகச் செய்யப்பட்டோர், அவ்வாறு காணாமற் போகச் செய்யப்படுவதற்கு முன்னதாகவே-

அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை களத்தில் இருந்து அகற்றப்பட்டமை மனித நேயத்துக்குப் போடப்பட்ட பெரும் அடி என்பதனையும் இங்கு சுட்டிக்காட்டுவது, பெரும் பொருத்தமோ - பொருத்தம்.

காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொண்ட நெருக்கடிகள் மிகமிகப் பெரியவை.

தமிழ் மக்களின் பேருதவியுடன் ஆட்சிக்கு வந்துள்ள நல்லாட்சி அரசே! இவை தொடர்பாக உனது நிலைப்பாடு தான் என்ன..?

எமது நாட்டின் மதங்கள், சமயங்கள் மற்றவனுக்குத் தீமை செய்யாதே, நல்லதையே செய் என்று கூறுவது, உங்கள் வசம் சூடு, சொறணை மேலெழ வேண்டும் என்பதன் பாற்பட்டதே.

# புறக்கணிக்கப்பட்ட 13ஆவது திருத்தம்

## தமிழர்களுக்கான தீர்வுக்கு உதவாது

எம்.ஐ.முபாறக்

இந்த நாட்டின் தமிழ் மக்களது பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வை வழங்கும் முயற்சிகள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் இடம்பெற்று வருகின்றன. இந்த ஆட்சியைப் பயன்படுத்தி, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தமிழர் தரப்பு இந்த விவகாரத்தில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த அரசு புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வரும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ளதை நாம் அறிவோம். புதிய அரசமைப்பும் அதில் உள்ளடங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வும் எவ்வாறு அமைய வேண்டும் என்று அரசு மக்களிடம் அபிப் பிராயங்களையும் எடுத்து முடித்துவிட்டது.

அதனை அரசிடம் சமர்ப்பித்துள்ள மக்கள் கருத்தறியும் குழு, ஒற்றையாட்சியின்கீழ் தான் தீர்வு என்று தனது பரிந்துரைகளையும் முன் வைத்துள்ளது. உத்தேச அரசமைப்பை அடுத்த வருடம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய முடிகின்றது. தமிழருக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் அந்த உத்தேச அரசமைப்பில் உள்ளடக்கப்படும்.

இந்த அரசியல் தீர்வு தொடர்பில் தமிழர்கள் ஒரு வகையான எதிர்பார்ப்பில் உள்ளனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புகள்- நம்பிக்கைகளுக்கு உரிய பலன் கிட்டாது என்றே கொள்ளவேண்டியுள்ளது.

சமஷ்டி அடிப்படையில் இணைந்த வடக்கு-கிழக்குக்குள் தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் தமிழர்கள் உள்ளனர். ஆனால், அரசோ தனித்தனியான வடக்கு- கிழக்குக்குள் ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் நிற்கின்றது.

### 13ஆவது திருத்தத்தைத் தீர்வாக வைக்கவும் அரசு யோசனை

இதேவேளை - 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வாக முன் வைக்கப்படும் என்ற தகவலும் அரசுக்குள் இருந்து வெளிவருகின்றது. 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே புலிகள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். அந்த எதிர்ப்பையும் மீறித்தான் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டு மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. புலிகள் இருக்கும்வரை அந்த மாகாண சபை முறைமையைச் செயற்படுத்த முடியவில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தான் அது இயங்கத் தொடங்கியது. இருந்தாலும், தமிழரின் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இது தொடர்பில் புலிகளின் நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கி, சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை என்ற நிலைப்பாட்டில்தான் கூட்டமைப்பு இருந்து வருகின்றது. ஆனால், அதை இறுதித் தீர்வாக அக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றை மீண்டும் கொடுக்க முற்படுவது எப்படி ஆக்கபூர்வமான-நிலையான-இறுதியான அரசியல் தீர்வாக அமையும்?

அதிலும், இப்போது இருப்பது போன்றே காணி,பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் வடக்கு-கிழக்கு இணைக்கப்படாமல்தான் தீர்வு வழங்கப்படும் என்று அரசு கூறி வருகின்றது. ஆனால், 1987 ஆம் ஆண்டே அந்தத் தீர்வு வழங்கப்பட்டுவிட்டது. இன்று வரை அந்த முறைமையே முழு நாட்டிலும் நடைமுறையில் இருக்கின்றது. நடைமுறையில் இருக்கின்ற ஒன்றை- எப்படி மீண்டும் வழங்கமுடியும்?

### அதிகாரங்களைக் கொடுத்துப் பறித்தெடுப்பது 13ஆவது திருத்தம்

13 ஆம் திருத்தச் சட்டம் என்பது அதிகாரங்களை வலது கையால் கொடுத்து அவற்றை இடது கையால் பறித்தெடுக்கும் ஒரு தந்திரோபாய முறைமையாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை-ஜனாதிபதியை வெறும் பொம்மையாக இருக்க வைத்து அரசால் நியமிக்கப்படும் ஓர் ஆளுநருக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் ஒரு முறைமையானது எப்படி ஒரு முழுமையான அரசியல் தீர்வாக அமையும்?

வடக்கு-கிழக்கு ஆளுநர்கள் அதிகாரமிக்கவர்களாக- முதலமைச்சர்கள்பொம்மைகளாக இருப்பதும் வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள முதலமைச்சர்கள் அதிகாரமிக்கவர்களாக- ஆளுநர்கள் பொம்மைகளாக இருப்பதும் வடக்கு-கிழக்கு இனவாதத்தால் ஆளப்படுகின்றது என்பதற்குச் சிறந்த உதாரணமாகும். கிழக்கு முதலமைச்சர் அண்மையில் கடற்படை அதிகாரி ஒருவர் மீது சீறிப் பாய்ந்து பெரும் சர்ச்சையை கிளப்பிய விவகாரம்கூட முதலமைச்சரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளமையால் எழுந்ததுதான்.

வெளிப் பார்வையில் 13 ஆவது திருத்தச் சட்டம் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் ஒரு பொறிமுறையாகத் தெரிந்தாலும் உண்மையில், அது பிரச்சினையை மேலும் உருவாக்கும் ஒரு பாதகமான பொறிமுறையே. இந்த முறைமையை ஒரு முழுமையான-நிலையான-இறுதியான- ஆக்கபூர்வமான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அதில் அதிகாரம் என்பது உண்மையில் பகிரப்படவில்லை. பகிரப்பட்டுள்ளதாகக் காட்டப்படுகின்றது.

இவ்வாறானதொரு முறைமையை இறுதித் தீர்வாக வழங்குவதற்கு அரசு முயற்சித்தால், அதைச் சிறுபான்மை இன மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவ்வாறானதோர் எண்ணம் அரசிடம் இருந்தால் அதைக் கை விடுவதே அரசுக்கு நல்லது.

> கிழக்கு முதலமைச்சர் அண்மையில் கடற்படை அதிகாரி ஒருவர் மீது சீறிப் பாய்ந்து, பெரும் சர்ச்சையைக் கிளப்பிய விவகாரம்கூட முதலமைச்சரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளமையால் எழுந்ததுதான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சத்துக்கு வராத குற்றங்களை மேற்கொண்டவர்கள் யாரோ?

சிங்கள மொழிமூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரீ



தாம் கனவில் கூடக் காணாத விதத்தில் எதிர்காலத்தில் சிலர் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்த கருத்தால் மகிந்த தரப்பினர்களில் பலர் குழம்பிப் போயுள்ளனர். நல்லாட்சி அரசின் அமைச்சர்கள், மகிந்த அரசின் பிரபலஸ்தர்கள் கைது செய்யப்படவுள்ளதாகக் கூறியபோது அரசியல்வாதிகள் எவ்வாறு அந்த விதம் கருத்து வெளியிடலாம் என மகிந்த தரப்பினர் வாயடித்துக் கொண்டனர். தற்போது அத்தகைய கருத்தை வெளியிட்டிருப்பவர் பொலிஸ்மா அதிபர் என்பதால் மகிந்த தரப்பினரால் அந்த விதம் கேள்வி எழுப்ப இயலாது. பொலிஸ் தரப்பினரது விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபருக்கே வழங்கப்படுவதால், அந்த அறிக்கைகளின் பிரகாரமே அவர் அத்தகைய கருத்தை வெளியிட்டிருக்கலாம்.

### பொலிஸ் மா அதிபரது கருத்தால் மகிழும் வாக்காளர்கள்

ஒரு வகையில், பொலிஸ் மா அதிபரது மேற்குறிப்பிட்ட கருத்து, நாட்டில் லஞ்சம் ஊழல் புரிந்தவர்களை பிடித்துத் தண்டிக்கும் நோக்கில் நல்லாட்சி அரசொன்றுக்காக வாக்களித்த வாக்காளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நல்லாட்சி அரசொன்றுக்காக வாக்களித்தவர்களது நோக்கத்தை, மகிந்தவால் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட முன்னைய பொலிஸ் மா அதிபரால் புரிந்து கொள்ள முடியவில்லை. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் பொலிஸ் மா அதிபர் இத்தகைய கருத்தை வெளியிட்டிருந்தால் அவர் பாதுகாப்பு செயலர் கோத்தபாயவால் கண்டிக்கப்பட்டு இருப்பார். ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் பொலிஸ்துறையினர் ராஜபக்ச அரசின் ஏவலர்களாக இருந்தனர். கோத்தபாய கையளிக்கும் அறிவிப்புக்களையே பொலிஸ் மா அதிபர் வாசிக்க வேண்டியிருந்த காலகட்டம் அது. மைத்திரிபால ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் பொலிஸ்துறை சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புக்கிட்டியது.

தாஜுதீன் கொலை குறித்த விசாரணை, ராஜபக்ச தரப்பினரது ஊழல் மோசடிகள் என்பவைகள் முன்னைய ஆட்சிக்காலத்தில் மூடிமறைக்கப்பட்டன. மகிந்த தரப்பினரைக் கைது செய்ய ஜனாதிபதி மைத்திரிபாலவோ, பிரதமர் ரணிலோ பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருப்பார்களானால், அரசு வழங்கியுள்ள பாதுகாப்பின் மத்தியில் இருந்த கொண்டு புலிகள் மீண்டும் தலையெடுக்கிறார்கள் என கோத்தபாய கூப்பாடு போட்டுக்கொண்டிருக்க வாய்ப்புக் கிட்டியிருக்காது. விமல் வீரவன்ச தமது ஊழல் செயற்பாடுகள் குறித்த குற்றச்சாட்டுக்களின் மத்தியில், நல்லாட்சி அரசு குறித்து குறை, குற்றம் சுமத்திக் கொண்டிருக்க முடியாது. ஓர் அரசு, தனக்கு எதிரான தரப்பினரைக் கைது செய்து தடுத்து வைக்கும் நடை முறைக்குப் பொருத்தமானதோர் உதாரணம் மகிந்த அரசு, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் கைது செய்து தடுத்து வைத்தமையாகும். அவரைக் கைது செய்தவேளை குற்றச்சாட்டுப் பத்திரமெதுவும் வழங்கப்படவில்லை. தாம் எதற்காகக் கைது செய்யப்படுகிறோம் என்பதைச் சரத் பொன்சேகா அறிந்திருக்கவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றச்சாட்டுப் பத்திரத்துக்கு அமைய நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டது. சரத் பொன்சேகா 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரை சிறைத்தண்டனை அனுபவித்தார்.

இதற்கான மற்றுமொரு உதாரணம் 2013 மே மாதத்தில் இடம்பெற்ற அசாத் சாலியின் கைதாகும். அவரது கைதுக்கான காரணம் அசாத் சாலிக்கு மட்டுமல்லாது, பொலிஸ் ஊடகப்பேச்சாளருக்குக்கூடத் தெரிந்திருக்கவில்லை. இது தான் மகிந்த அரசு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்து தனக்கு எதிரானவர்களைக் கைதுசெய்வித்த இலட்சணம். நல்லாட்சி அரசு பொலிஸாருக்கு உத்தரவிட்டு கைதுகளை மேற்கொள்ள வைப்பித்திருந்தால், இன்று ராஜபக்ச குடும்பம் சிறையிலேயே காலம் கழிக்க நேர்ந்திருக்கும். நல்லாட்சி அரசு அந்தப் பணியைப் பொலிஸ் தரப்பிடம் கையளித்திருப்பதால், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் வரை, ஊழல்வாதிகளால் சுதந்திரமாக உலவ முடிகின்றது.

### குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்தறியத் தேவைப்பட்டது காலஅவகாசம்

சி.எஸ்.என். தொலைக்காட்சிச் சேவையை யோசித ராஜபக்சவே நிர்வகித்த போதிலும், அதனை நிரூபிக்கப் பொலிஸாருக்கு ஓராண்டு காலம் தேவைப்பட்டது. யோசித ராஜபக்சவை இவ்வாண்டின் ஜனவரி மாதத்தில் கைது செய்திருந்தனர். அதேபோன்று நாமல்ராஜபக்ச மிக அண்மையிலேயே கைது செய்யப்பட்டிருந்தார். நாமலுக்கு எதிரான கிறிஸ் நிறுவன கொடுக்கல் வாங்கல் குறித்து அந்தவேளையில் எதிர்க் கட்சியாயிருந்த ஐ.தே.கட்சி 2013 ஆம் ஆண்டில் கேள்வி எழுப்பியிருந்தது. இதேவேளை குறித்த கிறிஸ் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் குப்தா, இலங்கை யின் முக்கிய பிரமுகர் அந்தஸ்துள்ள அரசியல்வாதியொருவருக்கு தாம் லஞ்சம் வழங்கியதான குற்றச்சாட்டை மறுத்திருந்தார். அந்தவேளையில் அரசும் அத்தகைய குற்றச்சாட்டை மறுத்திருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து தற்போது ஒன்றரை வருடங்கள் முழுமையாகியுள்ளன. மேற்குறிப்பிட்ட கிறிஸ் நிறுவன கொடுக்கல்–வாங்கல் குறித்த விசாரணையை மேற்கொள்ள அரசுக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. விசாரணைகளின் முடிவிலேயே நாமல் கைது செய்யப்பட்டார். நாமல் அரசியல் அழுத்தத்தால் கைதாகியிருந்தால் ஒரு வாரகாலத்தில் பிணையில் விடுதலையாகியிருக்க முடியாது. பசில் ஒரு மாதகாலம் கூட விளக்கமறியலில் இருந்திருக்கவில்லை. யோசித இரு வார காலமே விளக்கமறிய லில் இருக்க நேர்ந்தது. இவற்றுக்கெல்லாம் காரணம் இவைகுறித்த செயற்பாடுகள் யாவும் சுதந்திரமாக முன்னெடுக்கப்பட்டமையே ஆகும். பொலிஸாரால் இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து அவர்களுக்குப் பிணை வழங்கமுடியுமா? முடியாதா? என்பது குறித்து முடிவு மேற்கொள்வது நீதிமன்றமே, கடைசி முடிவு நீதிபதிகளாலேயே மேற்கொள்ளப்படுகிறது. ராஜபக்ச அரசு தனது அரசியல் எதிரிகளைக் கைது செய்த சந்தர்ப்பங்களில் முதலில் நீதித்துறை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. கைது செய்யப்படுவோர் தடுத்து வைக்கப்படவேண்டிய காலத்தை ராஜபக்ச குடும்பத்தவர்களே தீர்மானித்தனர். ஆனால் இன்று எவரை, எத்தகைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்வதெனத் தீர்மானிப்பது பொலிஸ் துறையே. தாம் கனவிலும் கருதாதவர்கள் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளமைக்கான காரணம் இதுவேயாகும். அவ்விதம் கனவிலும் கருத இயலாத விதத்திலான வர்கள் எவர்கள்என்பதைத் தெரிந்துகொள்ள இன்று முழு நாடும் ஆவலுடன் காத்திருக்கிறது.

## சங்கானை பிரான்பற்று வீதித்திருத்தம் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா?

சங்கரத்தை, துணவி ஊடாக சங்கானை வரை செல்லும் வீதியானது பிரான்பற்று வீதியுடன் இணைந்துள்ளது. இந்த வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களப் (R.D.D) பராமரிப்பின் கீழேயுள்ளது. தற்போது இந்த வீதி திணைக்களத்தினால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

முன்பு இருந்த வீதியில் பள்ளங்கள் இருக்குமிடத்தில் கற்களைப் போட்டு, வீதி முன்பிருந்த நிலையிலேயே இருக்கத்தக்கதாகக் கல் போட்டு, நெரித்து தார் ஊற்றிப் பாதைத் திருத்தம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே இருந்த வீதி பாவனை செய்ய முடியாத நிலையில், குறிப்பாக மழைக்காலத்தில் பாவனை செய்ய முடியாத நிலையில் உள்ளது. இந்த வீதியை முற்றாகக் கிளறி, கல் போட்டு, அதன் மேல் தண்ணீர் பாய்ச்சி ரோலர் மூலம் மட்டம் தட்டி, தார் ஊற்ற வேண் டும். இப்படிச் செய்வதால், வீதி பல காலங்களுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். தனியே பள்ளங்களை நிரப்பி, கல்லுப்போடுவதால் சிறிது காலத்தில் வீதி சேதமடைந்துவிடும்.

மேலும் தார் ஊற்றும் போதும் ஒரு தடவை மட்டும் மேலோட்டமாக ஊற்றுகிறார்கள். இதனால் வீதியில் போடப்பட்ட கற்கள் முழுமையாக தாரினால் மூடப்படாத நிலையில் உள்ளன. வீதியின் இருமருங்கும் கற்கள் சரியான முறையில் நெரித்துப் போடாமையால் ஓரிரு நாள்களில் இரு மருங்குக் கரையும் சேதமடையும் நிலை ஏற்படும். ஏன் திணைக்களம் முழுமையாக மேற்சொன்ன முறையில் முழு வீதியையும் (இடைக்கிடை இல்லாமல்) திருத்த நடவடிக்கை எடுக்க முடியாதா? உரிய முறையில் திருத்தம் செய்தால் நீண்டகால பாவனைக்கு உகந்ததாக இருக்குமென வீதிப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். வீதி அபிவிருத்தித் திணைக்கள உயரதிகாரிகளே நேரில் வந்து, இந்த வீதியின் நிலையைப் பார்வையிடுவீர்களா?

வீதிப்பாவனையாளன்

## டெங்குத்தாக்கத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்

வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்றொரு முதுமொழி வழக்கில் உள்ளது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வடபகுதியில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தால் பெருமளவில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். டெங்குநோய் காரணமான உயிரிழப்புக்களும் நேர்ந்தன. நிலைமையின் தீவிரத்தைக் கண்டு தம்மைச் சுதாகரித்துக் கொண்ட மக்களும் சுகாதாரத் திணைக்களத்தினரும், டெங்குநோய் தீவிரமாகப் பரவாதவாறு தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிச் செயற்பட்டனர். இதனால் உயிர்கொல்லி நோயான டெங்குநோயின் பரவல் கட்டுப்படுத்தப்பட்டதுடன் பாதிப்புக்கு உள்ளானோர் உரிய மருத்துவ சிகிச்சைமூலம் குணப்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான பொதுமக்களுக்குப் புரிந்துணர்வூட்டும் செயற்பாடுகள் துரித கதியில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. பொது மக்களும் டெங்கு நோய்த்தாக்க அச்சம் காரணமாக சுகாதாரத்துறையினது அறிவுறுத்தல்களை கருத்தில் எடுத்து அவற்றுக்கமைய செயற்பட்டதன் மூலம் கூடா நாட்டில் டெங்கு நோய் அபாயம் குறிப்பிடத்தக்க அளவுக்கு தவிர்க்கப்பட்டது. தற்போது மீண்டும் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக வெளிவரும் செய்தி பலரது மனதில் அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் ஒரு தரப்பினரை மற்ற தரப்பினர் குற்றம் சாட்டி விமர்சித்துக் கொண்டிருக்காமல், இது விடயத்தில் சகலரும் ஒன்றிணைந்து எமது சுற்றுச்சூழல் சுகாதாரத்தை உரிய விதத்தில் பேணுவதன் மூலம் டெங்கு நோய்த்தாக்க சவாலை முறியடித்து எம்மையும் எமது இனத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.

பொ.பரஞ்சோதி, நாவற்குழி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்த பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதல்; சிரியாவில் 48 பேர் சாவு

டமஸ்கஸ், ஜுலை 29
வட சிரியாவில் இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 48 பேர் கொல்லப்பட்டனர். 140 பேர் காயமடைந்தனர் எனச் சிரியாவுக்கான லண்டன் மனித உரிமை அவதானிகள் தெரிவித்தனர்.

குவாமிஷாலி என்ற நகரில் அமைந்துள்ள குர்திஷ் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான கட்டடத்தில் ரக் வாகனம் ஒன்றில் வந்த தற்கொலையாளி குண்டுவெடிப்பை நிகழ்த்தினார்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. குர்திஷின் தலைமையகத்தையும், பாதுகாப்பு, இராணுவ திணைக்களங்களையும் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஐ.எஸ். அமைப்பு மேலும் கூறியது.

இதனையடுத்து, சக்தி வாய்ந்த வெடிபொருள்களுடன் ஐ.எஸ். போராளி எவ்வாறு உள்நுழைந்தார் என்ற விசாரணைகளில் குர்திஷ் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

கூட்டுப்படையினருடன் இணைந்து மான்பிஜ் நகரில் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்ததாக ஐ.எஸ். அமைப்பு கூறியுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்கக் கூட்டுப்படையின் வான் வழித் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். ஜுன் மாதத்தில் இருந்து இதுவரை 100க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர் என அவதானிகள் கூறினர். (த-ரி4)



# 6 மாத காலத்தில் 350 பேருக்கு சாவுத் தண்டனை

## ஈரான் – சவூதி மீது குற்றச்சாட்டு



(படம்-சாவுத் தண்டனைக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் குழுவினர்)

தெஹ்ரான், ஜுலை 29
ஈரான் மற்றும் சவூதி அரேபிய நாடுகளில் இந்த வருடத்தில் 350 பேர் சாவுத் தண்டனை மூலம் கொல்லப்பட்டனர் என மனித உரிமைகள் அமைப்புகள் தகவல் வெளியிட்டன.


முதல் 6 மாதங்களில் 250 பேர் இவ்வாறு கொல்லப்பட்டனர். சராசரியாக 3 நாள்களில் 4 பேருக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

சவூதி அரேபியாவில் முதல் 6 மாதங்களில் 108 பேருக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டது. ஈரானில் கடந்த வருட புள்ளிவிவரத்துடன்ஒப்பிடுகையில், சாவுத் தண்டனைகள் பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

2015 ஆம் ஆண்டு 7 மாதங்களில் 700 பேருக்கு ஈரான் சாவுத் தண்டனை வழங்கியிருந்தது. அந்த வருட முடியில் 969 பேருக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டது. இந்தப் பதிவு கடந்த 25 வருடங்களில் அதிகூடிய அளவு எனப் பதிவாகியிருந்தது.

ஈரானில் தண்டனைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை என ஈரானுக்கான மனித உரிமைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு ஈரானில் சாவுத் தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த ஆண்டு சவூதி அரேபியாவில் போராளிக்குழுக்களுடன் இணைந்து செயற்பட்டமைக்காக ஒரே தினத்தில் 47 பேருக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)



# உலகில் போர் தொடர்கிறது

## பாப்பரசர் கவலை

வர்சாவ், ஜுலை 29
ஐரோப்பாவில் இடம்பெறும் தொடர் தாக்குதல்கள், மதகுரு படுகொலை செய்யப்பட்டமை ஆகியன உலகில் போர் இடம்பெறுவதைக் குறிக்கின்றன எனப் பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

போலாந்துக்கு 5 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பண ஆசை இவற்றுக்குப் பிரதான காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பிரான்சில் இடம்பெற்ற படுகொலைகள், மதகுரு படுகொலை, ஜேர்மனியில் இடம்பெற்ற 3 அசம்பாவிதச் சம்பவங்கள் என்பவற்றைப் பட்டியலிட்ட அவர், உலகம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகக் கருத்துக்கள் நிலவியபோதும், உண்மையில் உலகில் போர் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

முதலாம், இரண்டாம் உலகப் போரைப் பற்றிக் குறிப்பிட்ட பாப்பரசர், தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பவையும் அவற்றை நினைவு படுத்துவதாகக் கூறினார்.

தற்போது இடம்பெற்ற சம்பவங்கள் சாதாரண நடக்கும் விடயங்கள் அல்ல. இவை உலகப் போருக்கு வழிவகுக்கின்றன. உலகில் சமாதானம் இல்லை என்றால், போர் நடைபெறுகிறது என்பதே உண்மை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம், போலாந்துக்குப் பயணித்த பாப்பரசர், பல வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார். உலக இளைஞர் தினக் கொண்டாட்டங்களிலும் அவர் கலந்து சிறப்பிப்பார்.

அத்துடன் அகதிகள் தொடர்பாகவும், அவர்களை நாடுகளில் அனுமதிப்பது தொடர்பாகவும் போலாந்து தலைவர்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளார். (த-ரி4)

# 130 ஊடக முடக்கியது

## ஆட்சிக் கவிழ்ப்பு மு

அங்காரா, ஜுலை 29
துருக்கியில் 130 ஊடக நிறுவனங்களை அரசு முற்றாக முடக்க கள் வெளியாகின.

துருக்கியில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியை அடுத்து, அந்த அதிரடியாகத் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

அங்கு அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், 45 16 தொலைக்காட்சிகள் மற்றும் 3 செய்தி முகவர் நிறுவனங்க எனச் செய்திகள் வெளியாகின. அத்துடன், 87 தளபதிகள் உட்பட, ஆயிரத்து 700 இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் ஊடகவியலாளர்களைக் கைது செய்யவும் அரசு உத்தரவிட்டது என சர்வதேச ஊடகங்கள் கூறியுள்ளன.

> துருக்கியில் இன் ஆட் சிக் கவிழ்ப்பு வதைத் தவிர்ப்ப அச்சுறுத்தலான விடயங் களைய வேண்டும் எனத் ஜனாதிபதி ரையிப் ஏர்டக வாரம் தெரிவித்தார். இதன ஆயிரக்கணக்கான இரா கொல்லப்பட்டதுடன், பதவி செய்யப்பட்டனர்.

துருக்கியில் இன்னுமொரு ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காக அச்சுறுத்தலான விடயங்களைக் களைய வேண்டும் எனத் துருக்கி ஜனாதிபதி ரையிப் ஏர்டகன் கடந்த வார இதனை அடுத்து ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொ



வெனிசுலாவில் கரக்காஸ் நகரில் அமைந்துள்ள காப்பகத்தில், விலங்குகள் பட்டினியால் பாதிக்கப்பட்ட நெருக்கடியால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டது பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இ களில் காப்பகத்தில் உள்ள 50 விலங்குகள் பட்டினிச் சா விலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆயுதங்களைக் கைவிட்டால் போராளிகளுக்கு மன்னிப்பு

## சிரிய அதிபர் அறிவிப்பு

டமஸ்கஸ், ஜுலை 29
ஆயுதங்களைக் கைவிட்டால் பொது மன்னிப்பு அளிக்கப்படும் என போராளிகளுக்குச் சிரிய அதிபர் பார் ஆசாத் அறிவித்தார்.

அரசாணை மூலம் அவர் இதனை அறிவித்தார்.

அந்த அரசாணையில், பிணைக்கைதிகளாகப் பிடித்துவைத்திருப்பவர்களை விடுவித்து ஒரு மாத காலத்துக்குள் அரசிடம் சரண் அடைபவர்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்குள் ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடையும் போராளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சிரியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரமான அலப்போவைச் சுற்றிவளைத்திருந்த போராளிகளை அரசு இலாவகமாக அடக்கிய நிலையில் சிரிய அதிபரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (தி)

# உலகில்

ஒஸ்லோ, ஜுலை 29
உலகில் முதல்மு மிதக்கும் பாலம், நே ணிக்கப்பட்டு வருகி கள் இலகுவாகப் ப இந்தப் பாலம் வடிவ 100 அடி ஆழத்தில் களில் போக்குவரத்து இந்தப் பாலங்கள் மிதவைகள் மூலம் படவுள்ளன.

இந்தப் பாலத்துக்கா டொலர் நிதி ஒதுக்கீடு 2035 ஆம் ஆண் பாலத்தின் கட்டுமான மையாகும் எனத் தெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க நிறுவனங்களை
# பது துருக்கி அரசு

## ு முயற்சியை அடுத்து

க முடக்கியதாகச் செய்தி

ு, அந்த நாட்டு அரசு
ன்றது.
னர், 45 பத்திரிகைகள்,
வனங்கள் மூடப்பட்டன

**ு இன்னுமொரு
விழ்ப்பு இடம் பெறு
பிர்ப்பதற்காக
டயங்களைக்
எனத் துருக்கி
ர்டகன் கடந்த
இதனை அடுத்து
இராணுவத்தினர்
, பதவி நீக்கமும்**

ந்த வாரம் தெரிவித்தார்.
ர் கொல்லப்பட்டதுடன்,




பதவி நீக்கமும் செய்யப்பட்டனர்.
அத்துடன், கடந்த வாரம் கிட்டத்தட்ட 24 வானொலிச் சேவைகள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உரிமங்கள் அரசினால் பறிக்கப்பட்டன.
ஆட்சிக் கவிழ்ப்புச் சதிக்கு மூளையாக இருந்தவர் எனக் குற்றச்சாட்டப்படும் பெத்துல்லா குலென் என்பவருக்கு குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவை பறிக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக 130 ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டன எனக் கூறப்பட்டது. (த-ரி4)



# லிபியக் கடற்கரைப் பகுதியில் 87 அகதிகளின் உடல்கள் மீட்பு

திரிபோலி, ஜூலை 29
லிபியக் கடற்கரைப் பகுதியில் கடந்த வாரம் முதல் இதுவரை 87 அகதிகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன எனக் கடற்கரை நகரான சப்ராத்தரின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
கடந்த வெள்ளிக்கிழமை சடலங்கள் கரையொதுங்குவதாகத் தகவல் வெளியானது. கடந்த சனிக்கிழமை 41 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.
கண்டெடுக்கப்பட்ட உடல்களுக்கு உடற்கூற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் உறவினர்கள் தேடும்போது அவற்றை இலகுவாக இனம் காண உதவியாக இருக்கும் எனக் கூறப்பட்டது.
கடந்த சில நாள்களில் பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் வரை 87 உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாக அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகின.
2011 ஆம் ஆண்டிலில் இருந்து மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளில் இருந்து அகதிகள் ஐரோப்பாவுக்குப் படையெடுத்த வண்ணமுள்ளனர்.
இந்த வருடத்தில் மத்திய தரைக் கடலில் மாத்திரம் 3 ஆயிரத்து 34 பேர் கடல் பயணத்தின்போது உயிரிழந்தனர் என ஐ.ஓ.எம். நிறுவனம் தெரிவித்தது. (த-ரி4)




துள்ள கரிக்குவோ வன விலங்குக்
ப்பட்டன. அங்கு நிலவும் பொருளாதார
பட்டதுடன், அயல் நாடுகளில் உணவுப்
னர். இந்த நிலையில், கடந்த 6 மாதங்
ணிச் சாவைத் தழுவியுள்ளன என வன
(த-ரி4)

# அமெ. எதிர்காலம் ஹிலாரி கைகளில்

## ஒபாமா தெரிவிப்பு




வொஷிங்டன், ஜூலை 29
அமெரிக்காவின் கனவுகளுக்கு டொனால்ட் ட்ரம் ஒரு அச்சுறுத்தல். நாட்டைப் பாதுகாப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் ஹிலாரி கிளின்ரனின் தெரிவு. அவரது கரங்களில் அமெரிக்காவின் எதிர்காலம் உள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்றது.
இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக ஹிலாரி கிளின்டன் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.
இந்த நிகழ்வில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும், ஹிலாரியின் கணவருமான கிளின்டன், தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்செல் ஒபாமா, ஏனைய அரசியல் பிரபலங்கள் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் உரையாற்றிய ஒபாமா தெரிவித்ததாவது:
அமெரிக்காவின் கனவுகளுக்கு டொனால்ட் ட்ரம் ஒரு அச்சுறுத்தல். நாட்டைப் பாதுகாப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் ஹிலாரி கிளின்ரனின் தெரிவு.
டொனால்ட் ட்ரம் வாய் சவாடல் மட்டுமே. அமெரிக்கர்கள் தமது நாட்டை ஒரு போதும் தரம் குறைக்கமாட்டார்கள். இரு கட்சிகளுக்கிடையிலான போட்டியல்ல, இரு தரப்புகளுக்கிடையிலான தெரிவு.
உண்மையுடன் இணைந்து, அமெரிக்க அரசைக் கட்டி எழுப்பும் கடமையில் மக்களாகிய உங்களின் வகிபங்கு அவசியம். எமது அதிகாரம் சுயமான முடிவுகளைச் சார்ந்தது அல்ல. ஜனநாயகக் கட்சி சிறப்பானவர்களின் கரங்களில் உள்ளது-என்றார். (த-ரி4)

# கில் முதன்முறையாக நீரினுள் மிதக்கும் பாலம் நோர்வேயில்

லை 29
ல்முறையாக நீரினுள்
ம், நோர்வேயில் நிர்மா
வருகின்றது. வாகனங்
கப் பயணிப்பதற்காக
வடிவமைக்கப்பட்டது.
த்தில் மிதக்கும் குழாய்
வரத்து திட்டமிடப்பட்டது.
ங்கள் மேற்பரப்பில்
மூலம் மிதக்க வைக்கப்

துக்காக 25 பில்லியன்
துக்கீடு செய்யப்பட்டது.
ஆண்டளவில் இந் தப்
டுமானப் பணிகள் முழு
னத் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேயில் ஆயிரத்து 150 சுரங்கப் பாதைகள் ஏற்கனவே பாவனையில் உள்ளன. அவைகளில் 35 பாதைகள் மட்டுமே நிலத்தடியிலானவை. இந்த நிலையில் இந்த திட்டத்தின் சாத்தியங்கள், ஏற் பாடுகள் தொடர்பாகவும், காலநிலை மாற் றங்களுக்கு எவ்வாறு இந்தப் பாலம் ஈடு கொடுக்கும் எனவும் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.
அத்துடன் இதனை அமைப்பதன் மூலம் கடல் அலைகள், நீர்மட்டம், கடல் அமைவிடங்கள் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. ஆனாலும், இதன் ஆரம்ப கட்டப் பணிகளில் பொறியியலாளர் குழு ஈடுபட்டு வருகின்றது. (த-ரி4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

## ரிஷபம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை-தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் - இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீருடம்1, 2 பாதங்கள் வரை குருவின் பார்வை பதிகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சி வருகிறது.**



ஜென்ம ராசியை குரு பார்க்கப் போவதால் நீடித்த நோயிலிருந்து நிம்மதி பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் மாறும். உடல் நலத்துக்காகச் செலவிடும் தொகை குறையும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். கருத்து வேறுபாடுகள் அகலும். கனிவோடுபேசி, காரியங்களைச் சாதித்துக்கொள்ள வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். அறுவைச்சிகிச்சை செய்ய நினைத்தவர்கள்கூட, சாதாரண சிகிச்சையிலேயே குணம் பெற்று மகிழ்ச்சியடைவர்.

இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த தடைகள் அகல புதிய வழி தோன்றும். சிலமாதங்களாக ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றும் நல்ல முடிவுக்கு வரும். மனக்கவலை நீங்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். இனத்தார் பகை அகலும். எல்லா வழிகளிலும் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எப்போது நடக்குமோ என்று ஏங்கிய காரியம் இப்பொழுது நடைபெறும். வெற்றிவாகை சூடும் வகையில் வாழ்க்கை அமையும். பண மழையிலும், பாச மழையிலும் நனைவீர்கள். நினைத்ததைச் சாதித்துக்காட்டும் நேரம் கைகூடி வந்துவிட்டது. மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். மக்கள் செல்வங்களால் யோகம் வரும். ஆபரணங்களை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள்.

லாப ஸ்தானத்தைப் பார்க்கும் குரு மூடிக்கிடந்த தொழிலை மீண்டும் திறக்க வைப்பார். முன்னேற்றம் அதிகரிக்க முறையான மாற்றம் வரும். அரசுப்பணி, நிரந்தரப்பணி, வெளிநாட்டு அழைப்பு, விருப்ப ஓய்வில் வெளிவருதல், பதவி உயர்வு, இலாகா மாற்றம் போன்ற பலவகைச் சந்தர்ப்பங்கள் அவரவர் ஜாதகத்துக்கு ஏற்ப, சூழ்நிலைக்கேற்ப வந்துசேரும். வரும் வாய்ப்பு நல்ல வாய்ப்புகளாகவே அமையும். எனவே நலங்களும், வளங்களும் வீடு வந்து சேர, கலங்காமல் கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): பூமி யோகம் கிட்டும். புதியவை வாங்க நினைப்பவர்கள் அதற்குரிய நேரம் கைகூடி வந்திருப்பது கண்டு மகிழ்ச்சி அடைவர். தாய்வழி ஆதரவு பெருகும். பழைய வீடுகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட ஒரு சிலர் முன்வருவர். வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும்.

குருபகவான், சந்திரசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.6.2016 முதல் 24.11.2016 வரை): சகோதர ஒற்றுமைகூடும். வழக்குகள் சாதகமாகும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடிஎடுத்து வைப்பீர்கள். ஆதாயம் தரும் தகவலில் அக்கறை காட்டுவீர்கள். அசையாத சொத்துக்கள் வாங்குவதில் ஆசை கூடும். புதிய நண்பர்கள் உங்கள் பொருளாதார விருத்திக்கு அடித்தளம் இடுவர். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். நீண்ட தூரப் பயணங்களால் நிம்மதி குறையலாம்.

# அதிகரித்த அறிதிறன்பேசிப் பயன்பாடு குடும்பத்தையும் சமூகத்தையும் பாதிக்கும்

(நேற்றைய தொடர்ச்சி)

ஜோன் லீ என்னும் மொழியியல் ஆய்வறிஞர் தமது அறிக்கையில் மேலும் சில உண்மைகளைக் குறிப் பிடுகின்றார். குறுஞ்செய்தி அல்லது குறும்பனுவல் பரிமாறுவோர் கையாளும் வார்த்தைகளை அர்த்த வியாக்கியானம் செய்வதிலும், ஏற்றுக்கொள்வதிலும் மொழித்திறன் சார்ந்த பிரச்சினைகளும் எழுகின்றனவாம். பிறரைத் துன்புறுத்தும் வகையில் தங்கள் முகநூலிலும், ருவிற்றர் என்கிற சுட்டுரையிலும் பதிவாக்கி, குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களும் இருக்கிறார்கள்.

மேனாட்டில் பல்கலைக்கழக மாணவர்களிடம் இது குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களிடம் சில சம்பிரதாய பூர்வமான வழக்குச் சொற்களும், வேறு சில புதிய புனைவுச் சொற்களும் தரப்பட்டன. தனிப்பட்ட தகவல் அனுப்புவதால், சுட்டுரைக் குழுவினர் அனைவருக்குமே இலக்கண வரம்பு மீறிய மொழியில் எழுதும் துணிச்சல் வரும் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், அதுதான் இல்லை.

புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் போன்ற வழக்கமான அச்சு ஊடகங்களில் நிறைய வாசிப்பவர்களுக்கோ புதிய சொற்களை ஏற்பதில் சிக்கல் ஏதும் இல்லை. எந்தச் சொல்லையும் நவீன எழுத்துப் பிழைகள் உட்பட, தாங்களாகவே திருத்தி அர்த்தப்படுத்தி ஏற்றுக்கொள்கின்றனர்.

பாருங்களேன். ஆங்கிலத்தில் வை-ஓ-யு என்கிற மூன்று எழுத்துச் சொல்லை யூ என்று உச்சரிக்கிறோம். நீ என்று பொருள். ஆனால் நவீன தலைமுறைத் தகவல் இளைஞர்கள் யூ என்ற ஒரே எழுத்தில் செய்தி அனுப்புகிறார்கள். அங்கு இருந்து (ஃப்ரம்) என்பதை ஆங்கிலத்தில் எவ்.ஆர்.எம். என்று எழுதுவர். அதனை "நோக்கி " (To) என்பதை உச்சரிக்கிறபடியே 2 என்ற எண்ணால் குறிக்கின்றனர்.

அவ்வாறே, வழக்கமான அச்சு ஊடகங்களில் படிப்பவர்கள் புதுப்புதுச் செய்திகளை அறிந்து கொள்கிறார்கள். அதனாலே அவர்களின் படைப்பாற்றலும் அதிகரிக்கிறது. ஆனால், பல் தேய்ப்பது முதல் நித்திரைக்குச் செல்வது வரை நிறையத் தகவல் அனுப்பியும் வாசித்தும் நேரத்தைச் செலவழிப்பவர்களிடம் படைப்பாற்றல் குறைந்து வருகிறதாம். இப்படியும் ஒரு புதுச் சொல்லாட்சி இருக்கலாம்தானே என்று ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கிறார்கள். பழைய சொற்களையே வழக்கப்படுத்திக் கொள்வதாகச் சொல்கிறார் ஜோன் லீ.



ஆனால், மொழிநடையில் மட்டும் மரபான இலக்கணம் கூடாது என்று நினைக்கிறார்களாம். இப்படி ஒரு முரண். பண்டித நடையை அவர்கள் மறுக்கி றார்கள்.

இந்த இளைஞர்கள் எவரோ சொன்னதையே தாங்களும் திரும்பத் திரும்ப ஒப்புவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

தமிழில் நகைச்சுவை என்றால் பெரும்பாலும் கணவன் - மனைவி உறவுவைக் கேலி செய்யும் துணுக்குகள்தாம். கட்செவி அஞ்சலில் (வாட்ஸ் அப்) உலாவரும்நகைச்சுவைத் துணுக்குகள் வாராந்தரப் பத்திரிகைகளில் மறு அச்சுப் பெறுவதையும் காண்கிறோம்.

பல் வெள்ளியாகத் துலங்கினால் தான் வாய்திறந்து பேசுகிறபோதும், சிரிக்கிறபோதும் தன்னம்பிக்கை வெளிப்படுத்த முடிகிறதாம்.

ஒரு மேனாட்டுப் பெண் ஆலோசகர் பரிந் துரை இது. கடைகளில் தடைசெய்யப்பட்ட மருந்துகள் கிடைக்காமல், குழந்தைக்கு எதை வாங்கிக் கொடுப்பது என்று ஏங்கு கிறார் இன்னொரு குடும்பத் தலைவி. மருத் துவர் குறிப்பு இன்றி குழந்தைக்கு எதை யும் வாங்கிக் கொடுப்பது தவறு அல்லவா?

நம் நாட்டில் வேட்டி விளம்பரம் நீங்கலாக வேறு எல்லாப் பொருளுக்கும் பெண்மணிகளே வந்து சொல்லவேண்டும் என்று நினைக்கிறோம்.

மேனாடுகளில் கேட்கவே வேண்டாம். 2013 ஆம் ஆண்டு திரைக்கு வந்தது ஓர் ஆங்கிலத் திரைப்படம். அதனுடைய தலைப்பு ஹெர். வார்னர் பிரதேர்ஸ் தயாரிப்பு. அது, சமந்தா என்னும் செயற்கை அறிவாண்மை (ஆர்ட்டிஃபிஷியல் இண்டலிஜென்ஸ்) கொண்ட மின்னணுத் திரை யுடன் தியோடார் என்னும் மனிதன் காதல் வயப்படுவதைச் சித்திரிக்கும் படம். எதிர்காலத்தில் நீங்கள் விரும்பினால் உங்களுடன் மாயக் காதலன் அல்லது காதலி ஆகத் தயார் என்று செயற்கை அறிவாண்மை இயந்திர விளம்பரம் தூள் கிளப்புமாம், போங்கள். இது நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்விக்கு அமெரிக்காவில் வாய்ப்பு இல்லை என்று 47 சதவீதம் பேர் கைவிரித்து உள்ளனர். 35 சதவீதம் பேர் சாத்தியம் என்றும், கருத்து இல்லை என 18 சதவீதம் பேரும் தெரிவிக்கின்றனர். அதுமட்டுமா? குடும்பத்தோடு ஒட்டாமல், தனியே விளையாடும் குழந்தைகளுக்கு மின் இயந்திரப் பேசும் பொம்மைகள் விற்பனைக்கு வந்துவிட்டன. கல்வி போதிக்கும் கருவிகளும் நடைமுறையில் உள்ளன. ட்ராக்டிகா என்ற அமைப்பின் கணிப்பீட்டின்படி அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தச் சேவை இயந்திரங்களின் தொகை ஏறத்தாழ நாலரை மடங்காகி விடும். எப்படியோ, கூடி விளையாடு பாப்பா என்பது இனிப் பழங்கதையாய்ப் போய் விடும் என்பதுதான் எமது கவலை.

*கட்டுரையாளர்:*
*இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அதிபர்களது ஆளுமைப் பண்பும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்

பா.தனபாலன்

1. இன்றைய பாடசாலைகள், மாணவர்களின் ஒழுக்கக் கல்வி வளர்ச்சிக்குப் பொருத்தமான இடமாக அமைந்துள்ளதா?
2. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன், ஊக்கத்துடன் மாணவர்களுக்கு முன் மாதிரியாகக் கற்பிக்கும் சூழல் காணப்படுகின்றதா?
3. மாணவர், ஆசிரியர்கள், பெற்றோர் களது சமூக வளர்ச்சிக்குப் பொருத்தமான சூழலை பாடசாலையில் அதிபர் ஏற்படுத்தியுள்ளாரா?
4. பாடசாலை அதிபர்களின் வாண்மை விருத்திக்கான பொருத்தமான சூழல் காணப்படுகின்றதா?

பாடசாலைகளின் முகாமைத்துவப் பணிகளின் பெறுபேறு ஒழுக்கம், கற்றல் கற்பித்தல் செயன்முறையூடாக மாணவர்களிடத்தே அபிவிருத்தி சார்ந்த நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். மேற் குறிப்பிட்ட வினாக்கள் இன்றைய பாட சாலைகள் மாணவர்களது கல்விச் செயன்முறையை நடைமுறைப்படுத்த பல சவால்களை எதிர்நோக்குவது புலனாகின்றது.

எத்தகைய பாடசாலை என்றாலும், பௌதிக வளங்களைப் பயன்படுத்தி அவற்றின் உச்சப் பயனை மாணவர்கள் பெறத்தக்கவாறு தனது முகாமைத்துவ ஒழுங்கமைப்பை நடைமுறைப்படுத்துவதே அதிபரின் தலையாய கடமையாகும். மாணவர்களுக்கு அவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை உணர்ந்து கொள்ள வாய்ப்பளித்ததன் ஊடாக, எதிர்கால உலகுக்கு ஒழுக்கமும், திறமையும் மிக்கவர்களை வழங்குவதே பாடசாலை அதிபரின் முகா மைத்துவ செயன்முறையாகும். இத னைச் சரியாகச் செய்வதற்கு இன்றைய பாடசாலை அதிபர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றார்கள்.

**மாணவர்களின் பிறழ்வான நடத்தைகள்(இடைநிலை, உயர்தரம்)**

இலங்கையில் குறித்த மாகாணப்பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பெறுபேறாக;

1. பாடசாலை அதிபரை உரிய மரியாதை கொடுத்து மதிப்பளிப்பதில்லை.
2. பாடசாலை ஆசிரியர்களுக்குரிய கௌரவம், மரியாதை கொடுப்பதில்லை, பெற்றோர்களை மதிப்பதில்லை.
3. ஒழுக்கவிழுமியப் பண்புகளை அலட்சியம் செய்வது.
4. பாடசாலை காலை நேரப் பிரார்த்தனை, முக்கிய நிகழ்வுகளில் முரண்பாடான நடத்தைகளை வெளிக்காட்டல்.
5. கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் ஆர்வம் இன்மை.
6. கல்விப் பெறுபேறுகளில் சடுதியான வீழ்ச்சி ஏற்படுகின்றமை.
7. பாடசாலைக்கு உள்ளும்வெளியிலும் வன்முறைக் கலாசாரம், பாலியல் பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை. என்பவை அவதானிக்கப்பட்டுள்ளன.

சாதாரணமான சமூகச் சூழலில் இவ்வாறான நிலமைகள் பத்துவீதம் காணப்படலாம். ஆனால் எமது பிரதேசத்தில் இது அறுபது வீதத்துக்கு அதிகமாகச் சென்று கொண்டிருக்கின்றது. இதற்குப் பொறுப்புச் சொல்பவர்களில் முதலாமவர் பாடசாலை அதிபரே ஆவார். இன்று உலகளாவிய ரீதியில்அபிவிருத்திஅடைந்தகல்விப்பெறுபேறு கூடிய நாட்டுப் பாடசாலை அதிபர்கள் மிகவும் தராதரம் கூடிய வாண்மையாளர்களாக சமூகத்துக்கு வழிகாட்டி வருகின்றார்கள்.

இன்று பல்வேறு உள, சமூக பண்பாட்டு பொருளாதாரச் சூழல்களைச் சேர்ந்த குடும்ப அலகுகள் ஒன்று சேர்ந்து இயங்கும் இடமாக உலகின் ஒரு சிறிய மாதிரியாகப் பாடசாலைகள் உள்ளன. பாடசாலை, மீது இது சமூகத்தின் கருத்து மாற்றங்கள், பெருமளவுக்கு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளன. சமத்துவம், ஒத்துழைப்பு, பங்கேற்பு, கூட்டாகப் பொறுப்பு வகித்தல், மிருது நிலைத்திறன்களைப் பிரயோகித்தல் போன்ற புதிய நன் மனப் பாங்குகள் பெருகியுள்ளதுடன் தீய மனப்பாங்குகளும் பெருகியுள்ளன. பாட சாலையை நடத்துவதற்கு அதிபர்கள் பின்வரும் சவால்களை எதிர்நோக்குகின்றார்கள்.

**பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

1. பாடசாலை ஆசிரியர்கள் உரிய கடமைகளைச்செய்யாமை, ஒற்றுமை இன்மை, பிரிவுக்குழுக்கள், பொருத்தமற்ற விமர்சனங்கள், நேரான மனப்பான்மை இன்மை, சிறிய பிரச்சினைகளையும் பெரிதாக்கி விடுகின்றமை, கல்வி முகாமைத்துவக் கலாசாரத்துக்கு வர மறுக்கின்றமை.
2. பாடசாலை மாணவர்களின் பொருத்தப்பாடின்மை, பிறழ்வான நடவடிக்கைகள்.
3. பெற்றோர்களின் புரிந்துணர்வின்மை, ஆதரவின்மை
4. பழையமாணவர் சங்கம், நலன்விரும்பிகள், முகாமைத்துவக் குழு உறுப்பினர்களின் பொருத்தமற்ற நடவடிக்கைகள்.
5. மேற்பார்வை அதிகாரிகள், பாடசாலை அதிபர்களை மதிக்காமை, கௌரவக் குறைவாக நடத்துகின்றமை, நவீன முகாமைத்துவ அணுகுமுறைகளைப் பின்பற்றாமை.
6. பாடசாலைக்குப் பொருத்தமில்லாதவர்களின் தலையீடுகள், பொருத்தமில்லாத அரச, அரச சார்பற்ற தனியார்களின் தலையீட்டு நிகழ்ச்சிகள், பரீட்சைகள், நிகழ்வுகள் என்பவையே அவையாகும்.

ஒருங்கமைக்கப்பட்ட பயனுறுதி வாய்ந்த பாடசாலையாகத் தனது பாடசாலையை நடத்திச் செல்ல அதிபர் மிகப் பல சவால்களை எதிர்நோக்குகின்றார். பலரிடம் கூனிக்குறுகி தலை வணங்கியவாறு தனது பாடசாலையை நடத்தப் போராடுகின்றார். பலருடைய விமர்சனங்களுக்கு உள்ளாகுகின்றார். மனவேதனைகள், அழுத்தங்கள் பல்வேறு பிரச்சினைகளோடு அதிபர் கடமையாற்ற வேண்டியுள்ளது. பாடசாலை அதிபர்களை வலுவூட்டவும் முகாமைத்துவத்துக்கு உதவும் பொருத்தமானவர்களுடைய உதவி கிடைக்காமலும் உள்ளது. அதிபர்கள் தம்மை வாண்மைப்படுத்தி உயர உதவும் கற்கை நெறிகளும் போதுமானதாக இல்லை.

> ஒருங்கமைக்கப்பட்ட பயனுறுதி வாய்ந்த பாடசாலையாகத் தனது பாடசாலையை நடத்திச் செல்ல அதிபர் மிகப் பல சவால்களை எதிர்நோக்குகின்றார். பலரிடம் கூனிக்குறுகி தலை வணங்கியவாறு தனது பாடசாலையை நடத்தப் போராடுகின்றார். பலருடைய விமர்சனங்களுக்கு உள்ளாகுகின்றார்.

**பாடசாலை அதிபர்களிடம் காணப்படும் குறைபாடுகள்**

1. பக்கச் சார்புப்படி பகிரங்கமாக செயலாற்றல், சரியான முடிவை எடுக்க முடியாமை.
2. தந்திரோபாய முகாமைத்துவத் தேர்ச்சிகளைப் பின்பற்றாமை
3. மனிதத்துவம் பொருந்திய மனிதாபிமானப்படி செயலாற்றாமை
4. நேர்மை, தலைமைத்துவம், துணிவு, முன்மாதிரிப் பண்புகள் இன்மை.
5. பாடசாலைக் கல்வி கலைத்திட்டம் சார் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்காது நிதி, நிர்வாகத்தில் அதிக ஈடுபாடு, அதனுள்ளேயே மூழ்கிப் போதல், ஒழுக்கக் குறைபாடுகள்.
6. இருக்கின்ற குறைந்த வளத்துடன் கூடிய பெறுபேறுகளை வெளிக்காட்டாமை, மனிதவள முகாமைத்துவத்தைப் பின்பற்றாமை.
7. பகிரங்கப்படுத்தல், பங்கேற்பு முகாமைத்துவம், கூட்டாக குழுவாகச் செயலாற்றாமை, எல்லோருடைய கருத்துக்களையும் கேட்காமை.
8. பொருத்தமற்ற அதிகார மனப்பாங்கு, தான்தோன்றித்தனமான முடிவுகள், தொடர்பாடல் குறைபாடுகள், ஏனையோருடன் முரண்பட்டுக் கொள்ளுதல், மேற்பார்வைக் குறைபாடுகள்.
9. நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றாமை
10. சுயமதிப்பீடு, மாற்ற முகாமைத்துவம், ஆக்கத்திறன் தன்னை வாண்மைப் படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாமை. என்பவையே அவையாகும்.

இவ்வாறான குறைபாடுகள் பாடசாலையைப் பெரிதும் பாதிக்கின்றன. குறித்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எமது எதிர்கால சமுதாயமே பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டு வருகின்றது. இதனைப் போக்க மிக விரைவாக நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அதிபர், ஆசிரியர் சங்கங்கள், வெளிநிறுவனங்கள், சமூகப் பற்றாளர்கள் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டியுள்ளது. பாடசாலை அதிபர்களுக்குப் பொருத்தமான வலுவூட்டல்களையும் நவீன முகாமைத்துவ தந்திரோபாய உபாயங்களையும் ஏற்படுத்த வேண்டும். ஒரு பாடசாலை அதிபர் பாடசாலையைச் சுமுகமாக நடத்த அனைவரும் ஒத்துழைக்கும் ஒரு முகாமைத்துவ கலாசாரச் சூழலை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இந்த ஆய்வுக் கருத்தியல் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொருந்தாவிட்டா லும் பெரும்பாலான பாடசாலைகளுக் குப் பொருந்துகின்றது. எம் எதிர்கால பிர சைகள் இன்றைய பாடசாலைகளிலேயே வாழ்கின்றார்கள். ஒரு பாடசாலையின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு அங்கு தலைமை வகிக்கும் அதிபரது முகாமைத்துவத் திறமை அல்லது திறமையீனம் மீதே தங்கியிருக்கின்றது. பாடசாலை முகாமைத்துவம் என்பது சகலரும் பங்கேற்கும் பணி, ஒழுங்குபடுத்தப்பட்ட பயனுறுதி வாய்ந்த பாடசாலையாகத் தனது பாடசாலையை நடத்திச் செல்வதற்காக முதன்மை முகாமையாளர் என்ற வகையில் அதிபருக்குச் சிறந்த முகா மைத் துவ செயன்முறை இன்றியமையாத தாகும். பாடசாலை பௌதிகச் சூழலைத் திட்டமிடல், ஆசிரிய மாணவர் தொடர்பு களைச் சிறப்பாகப் பேணல், சமூகத்துடன் கொண்டுள்ள அபிவிருத்தி சார்ந்த தொடர்புகளை வளர்க்கப் பாடுபடல் ஆகியவை ஓர் அதிபருக்கு அவசியமாகும்.

ஒவ்வொரு பாடசாலை மாணவனதும், மாணவியினதும் ஆளுமை மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி மாணவர்களதும், ஆசிரியர்களதும் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்தல், அவர்கள் மீது கரிசனை காட்டல். இவ்வகையில் பாடசாலை அதிபர் முன் மாதிரியாளராக, வழிகாட்டியாக, தலைவராக, வளமுகாமையாளராக, எல்லோரும் விரும்பும் ஒரு வராகத் திகழ வேண்டும். இந்த நிலை தொடர்பாக எமது பாடசாலை அதிபர்கள் நிறையவே மாற வேண்டியுள்ளது.

புலமையாளர்களான அதிபர்கள் அறிவையும், மாற்றத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டும். நாம் கற்கும்போது மாற்றமடைகின்றோம். மறுதலையாக மாறும்போது கற்கின்றோம். எனவே மாற்றமும் கற்றலும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.

*கட்டுரையாளர்:*
*நிபுணத்துவ ஆலோசகர் விழுமியக் கல்விப்பிரிவு*
*கல்வியமைச்சு பத்திரமுல்ல.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பேருந்து

சாரட்டுப் போல ஊருமே!
வீதி எங்கும் போகுமே!
ஆளை ஏற்றிச் செல்லுமே!
அழகுப் பேருந்து என்றுமே!

ஊர்கள் எங்கும் போகலாம்!
உறவைக் கண்டு மகிழலாம்!
யாரு என்று பார்க்காமல்
ஏற்றிச் செல்லும் பேருந்து

ஓட்டுநர்கள் திறமையாய்
ஓட்டுகின்ற வாகனம்!
பாட்டுக் கூட கேட்கலாம்!
பரவசமும் அடையலாம்!

பயணச் சீட்டு வாங்கியே
பத்திரமாய்ப் போகலாம்!
பயணம் செய்து இன்பமாய்
பல இடங்கள் பார்க்கலாம்!





வித்தியாதரன் சங்கீதன்,
விசுவமடு மகாவித்தியாலயம்

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்தி ரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# சொல்லும் செயலும்

ஒரு கிராமத்தில் பசியோடு உணவு தேடி அலைந்து கொண்டிருந்த ஒரு ஓநாய் கிராமத்தின் கடைசியில் இருந்த குடிசைப் பக்கமாக வந்தது.

அந்தக் குடிசையின் உள்ளே ஒரு சிறுபையன் அழுது கொண்டிருந்தான். ஒரு கிழவி அவனை அதட்டி "நீ அழுகையை நிறுத்து. இல்லாவிடில் உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டு விடுவேன்" என்று பயமுறுத்திக் கொண்டிருந்தாள்.



அதைக் கேட்டு ஓநாய் மேலும் நடந்து அலையாமல் குடிசைக்கு வெளியிலேயே படுத்துக் கிடந்தது. கிழவி பையனை எப்பொழுது வெளியே எறிவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இரவு நேரம் ஆகி விட்டது. ஓநாய் காத்துக் கொண்டே இருந்தது.

குடிசையினுள்ளிருந்து கிழவியின் குரல் கேட்டது.

"என் தங்க ராஜா! அழாதே! உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட மாட்டேன். கிழட்டு ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதை அடி அடி யென்று அடித்துக் கொன்று விடுவோம்" என்றாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஓநாய் "இவர்களெல்லாம் பேசுவது ஒன்று செய்வது வேறாக இருக்கிறதே!" என்று எண்ணியபடி எழுந்து வேறு திசையை நோக்கிப் போய் விட்டது.



# வரலாற்றில் இன்றைய தினம்

615 - பலங்கியூ அரியணையிலிருந்து தனது 12 ஆவது வயதில் 'பகல்' முடி துறந்தார்.

1836 - பிரான்ஸ் பாரிஸில், ஆர்க்டி றியோம்பி-நினைவுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

1858 - அமெரிக்காவும், ஜப்பானும் நல்லெண்ணம் மற்றும் பொருளாதார ஹாரிஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1900 - இத்தாலியில் முதலாம் அம்பேற்றோ அரசன் புரட்சியாளர் கெற்றானோ பிஹஸ்கியால் படுகொலை செய்யப்பட்டான்.

1914 - கேப் கோட் கால்வாய் மசாசூசெட்டில் திறக்கப்பட்டது.

1945 - பி.பி.ஸி வானொலி நிலையத்தில் மென்நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

1957 - சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

1967 - வியட்நாம் போர்; வடக்கு வியட்நாம் கரைக்கு அப்பால், USS பொறஸ்ரல் கப்பல் தீப்பற்றியதையடுத்து, 134 பேர் உயிரிழந்தனர். இரண்டாம் உலகப் போரின் பின், ஒரு அமெரிக்க கடற்கலம் எதிர்கொண்ட இடர் இதுவாகும்.

1973 - முடியாட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் தேர்தல் கிரேக்கத்தில் நடைபெற்றது.

1980 - இஸ்லாமிய புரட்சியின் பின்னர் ஈரான் புதிய புனிதக் கொடியை ஏற்றுக்கொண்டது.

1981 - லண்டன் சென்போல் தேவாலயத்தில் இடம்பெற்ற வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் லேடி டயானா ஸ்பென்சரின் திருமணத்தை 700 மில்லியன் பேர் தொலைக்காட்சியில் பார்த்தனர்.

1987 - முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இனப்பிரச்சினை தொடர்பான இந்தோ-சிறிலங்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

1986 - இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு தலைப்பட்ச தீர்வு எதுவும் இருக்கக் கூடாதென இந்தியலோக் சபையில் இணையமைச்சர் உரை.
- அரசு-கூட்டணி பேச்சு: பிரதமர் பிரேமதாசவையும் பங்குபற்றச் செய்வதற்கு முயற்சி.
- மாகாண சபை நடைமுறைப்படுத்தலால், நாடு முழுவதும் உணவுத் தவிர்ப்புப் போராட்ட இயக்கம் நடத்தப்படும் என மல்வத்தை பீடம் முடிவு.

1995 - முஸ்லிம்களுக்கென தனியான தென்கிழக்கு மாகாண சபை: அஷ்ரப் கோரிக்கை. அரசு சம்மதம்.

2002 - ஹாட்லிக் கல்லூரியிலிருந்து படையினர் வெளியேறினர்.
- தமிழ்க் கைதிகளின் விடுதலையை அரசியல் விளையாட்டு ஆக்காதீர்கள் என புனர்வாழ்வு நிறுவனம் வலியுறுத்து.

2005 - இலங்கை நெருக்கடி தீர்ப்பது பற்றி நோர்வே தலை நகரில் நேற்றுப் பேச்சு.
- தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தென்னாசிய நாடுகளுக்கும் விஸ்தரிப்பு.
- தள்ளக் கிரகம், எரிஸ் கண்டுபிடிக்கப்பட்டதாக வானவியலாளர்கள் அறிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரை வஞ்சித்தல் முறையா..? துன்பம் கண்டு சிரித்தல் அநாகரிகம்..! நல்லரசாக நீதி வழங்குங்கள்...!

இலங்கை ஒரு அழகிய நாடு. எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த அழகின் நிஜஉருவத்தின் பின்னாய் அமிழ்ந்துள்ள அழிவுகளின் காடு என்பது, குருதிகளால் வறண்ட வனாந்தரம் என்பது மிகப்பரந்து கிடக்கிறது. மிகப் பிரதானமாய் அங்கு பூர்வீகம் செய்கின்ற தமிழர்கள் உரிமையின் தாகம்கொண்டு அலைய விடப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கெதிரான கொடுமைகளின், மனித உரிமை மீறல்களின் நீர்நிலைகள்தான் எங்கும் பரந்துள்ளன. இனவாதம் என்பதான நச்சுத்தன்மையை தம்முள் கலப்படம் செய்துள்ளன.

தாகம் போக்கும் தீர்வு எனும் நீர் ஆகாரமாய் வழங்கப்படவில்லை. நல்லிணக்கம், சமத்துவம், விசாரணைகள், நீதி என்ற தீர்வின் மூலங்களான குளங்களும் வறட்சியுற்றன. இந்தக் கடை நிலைகள் நன்முறைப்படவேண்டுமெனில், தமிழர்கள் புத்துயிர்பெற வேண்டுமெனில் நல்லாட்சி அரசு தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு கொள்கைகளையும், மனக்கிலேசங்களையும் நற்சிந்தனைகொண்டு தூர்வை செய்யவேண்டும். அதன் வழி செயல் நிலை கொண்டு தீர்வுகளை புனருத்தாரணம் செய்ய வேண்டும். அப்போதுதான் நிஜஉருவமாக சித்திரிக்கப்படும், நாட்டின் அழகுநிலையின் பின்னால் மறைந்துள்ள அழிவுகளின் காடுகள் ஜனநாயகம் செய்யும். இல்லாதுபோனால் இந்த வறட்சி நிலைகளின் வழியே வேட்கை என்ற ஆணிவேர்கள் உறுதியாக வேர்விட ஆரம்பிக்கும். அதன் பச்சயங்கள் துளிர்த்திட மீண்டும் விடுதலை வேண்டிய பயணங்களாய் அவை பரிணமிக்கும்..! சிந்திக்க வேண்டியது..!

இந்த நிலையிலே அழிவுகளின் தாற்பரியங்கள் மீண்டும் மீண்டும் ஞாபகமுறுகின்றன.தீர்வு நிலையின்றி சாபமிடுகின்றன. 1983 களின் தொடக்கம் என்பது 2009 ஆகி இன்றுவரை அழவின் கூர் முனைகளை தீட்டிய படியே இயக்க முறுகிறது. 2009 களின் மிகப் பெரிய மனித உரிமை மீறல்கள் சார்ந்த நீதியின் தேடல் என்பது பரிந்துரைகள் வடிவிலும், அறிக்கைகளின் நளினங்களிலும், அறிவுரைகளின் ஆர்ப்பாட்டங்களிலும் ஆர்ப்பரிக்கின்றன. ஆனால், தீர்வை நாடவில்லை. நீண்டு கிடக்கிறது. குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்து தமிழர்களுக்கான நீதியை விரைவுறச் செய்யுமா என்பது தெரியவில்லை...! இதனையே அண்மைய சம்பவங்கள் தமிழர்களிடம் கேள்வியாக முன்னகர்ந்திருக்கிறது..! கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகளின் நீதிக்கான காத்திருப்பும், நம்பிக்கைகளும் உடைவுறுகின்றன. நீதியின் இருட்டறைகள் கொடுக்கும் மிடுக்கில் குற்றவாளிகள் தப்பிப் பிழைக்கின்றனர் என்பதை பட்டவர்த்தனமாக எடுத்தியம்பியிருக்கின்றன.

குறிப்பாக திருகோணமலை குமாரபுரத்தில் இருபது வருடங்களின் முன்பாக இடம்பெற்ற 26 தமிழர்கள் படுகொலை விவகாரம் எந்தவித விமோசனமும் இன்றி தீர்ப்பாயம் செய்யப்பட்டது. அந்த அசம்பாவிதங்களின்போது 13 குழந்தைகள், பெண்கள் உட்பட 26 பேர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். 39 பேர் வரை காயமடைந்திருந்தனர். கைது செய்யப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, இதுவரை காலமும் விசாரணைகள் விலங்கிடப்பட்டிருந்தன. தற்போது அந்த வழக்கின் சாட்சியங் கள் முரண்படுவதாகவும் அவர்களின் வயது முதிர்வினை கருத் தில் கொண்டும் விசாரணைகள் இராணுவத்தினருக்கு சாதகமாய் சுவாத்தியம் செய்யப்பட்டது. நிரபராதிகள் என்று நற்பட்டம் சூட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் நீதி மீதான நம்பிக்கையும், பற்றுதலும் ஏமாற்றம் தந்திருக்கிறது. மாறாக விமோசனம் தரவில்லை..!


உண்மையில் இத்தனை காலங்களின் நீட்சி எதற்கு..? இவை நீதியின்பின் உறைந்துள்ள இருளின் வியாபிப்பை, அதில் உள்ள ஓட்டைகளை வெளிப்படையாக சுட்டிநிற்கின்றன, சுட்டி நிற்கிறது..!

ஆக, தற்போதைய நல்லாட்சி அரசின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கைகள் எப்படி நிலைபெறப்போகிறது..! 2009களின் நடுப்பகுதியில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கான பரிகாரம் என்று மேற்குலகத்தாரால், ஐ.நா.மனித உரிமை மன்றத்தினரால் சாட்டுதல் செய்யப்பட்ட விசாரணைப் பொறிமுறைகள் எப்படி நல் மொழிவுகளை தமிழர்களுக்கு தரப்போகிறது. நல்லிணக்கம், இன சமத்துவம், நீதி விசாரணை என்ற சொற்பதங்களின் வழியே அலைபவர்களிடம் எப்படி மன இணக்கங்கள் நல்லியக்கமாக இயைபுறப்போகிறது..! தெரியவில்லை...??

தமிழர் தலைமைத்துவங்கள் திடமாக சிந்திக்க வேண்டிய தருணங்கள் இவை..! எதிர்வரும். எதிர்வரப்போகும் அழிவின் மறை நிலையிலுள்ள மரணங்களின் உறை நிலைகளை எடைபோட வேண்டும்..! அரசை நல்வழிப்படுத்தும் செயன் முறைகளைச் செய்யவேண்டும்..!

இந்த நிலையிலே அரசும் தமிழரை வஞ்சித்தல் முறையா..? என்பது தொடர்பில் இனியாவது சிந்திக்க வேண்டும். அவர்களின் துன்பம் கண்டு சிரித்தல் அநாகரிகம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். தொடர்ந்தும் ஏமாற்றும் தந்திரங்களையும், காத்திருப்பின் வழித் திட்டமிட்ட ஏய்க்காட்டல்களையும் செய்திருக்கக்கூடாது. நல்லரசாக நியாயபூர்வமான நீதி வழங்கலை செய்ய வேண்டும்...! எதிர்விளைவுகளும் இந்த பின்னூட்டங்களின் வழியேதான் எடுக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்!



# நாட்டைத் தூய்மைப்படுத்தும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களைப் போற்றுவோம்! மதிப்போம்!

திருமதி யோகேஸ்வரி இராஜரட்ணம்

ஒரு நாட்டின் சூழல் மாசடைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது குப்பை கூளங்களே!

இவைகளை உரிய முறையில் அப்புறப்படுத்தி எரித்தோ, புதைத்தோ சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்த வேண்டும். இந்தத் தொழில்களைச் செய்பவர்கள் சுத்திகரிப்புத் தொழிலாளர்களே. இவர்கள் செய்யும் தொண்டு மிகவும் மகத்தானது. இவர்களே நாட்டைத் தூய்மைப்படுத்துபவர்கள். இவர்கள் செய்யும் தொண்டை நாம் போற்றவேண்டும், மதிக்கவேண்டும்.

நாட்டைத் தூய்மைப்படுத்தும் இவர்கள் ஒரு நாளோ பல நாள்களோ வேலை செய்யாவிட்டால் வீட்டிலோ அல்லது வீதியிலோ துர்நாற்றம் வீசும். போவோர் வருவோர் மூக்கைப் பொத்திக் கொண்டே செல்லவேண்டும். இதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் நடைமுறையில் நாம் அவர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடக்கின்றோமா?

குப்பை லொறி வந்தவுடன் குப்பை லொறி வந்துவிட்டது என்று சொல்லாமல் குப்பைக்காரன் வந்துவிட்டான் என்று பலர் சொல்வதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அத்துடன் சிலர் மிகவும் மரியாதைக் குறைவாக அவர்களோடு நடந்துகொள்வர். அப்படிச் செய்வது தவறல்லவா? அவர்களைச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் என்றுதான் கூறவேண்டும்.எல்லாத் தொழில்களும் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவையே. அவர்களை நாம் மதிக்க வேண்டும். தொழிலின் மகத்துவம் பற்றி அறிந்தவர்கள் ஒருபோதும் எந்தத் தொழிலையும் இழிவுபடுத்திக் கூறமாட்டார்கள். 'செய்யும் தொழிலே தெய்வம்'. அந்தச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை ஒருபோதும் இழிவாக நினைக்கக் கூடாது. மதித்து நடக்க வேண்டும். அவர்களுக்குரிய போதிய ஊதியம் வழங்க வேண்டும்.

கடந்த சுனாமி அலைகளாலும் வெள்ளப் பெருக்காலும் மண்சரிவுகளாலும் நாட்டில் பாதிக்கப்பட்ட இடங்களில் கால் வைக்க முடியாதநிலை, வீடுகள், கடைகள், அலுவலகங்கள், சந்தைகள், பாடசாலைகள் என்று எங்குமே பொருள்கள் நீரால் பழுதடைந்து துர்நாற்றம் வீசின. அவைகளைக்கூட்டி அள்ளி வீதிகளில் போட்டார்கள். அத்தனை அழுக்குகளையும் முகம் சுழிக்காமல் அள்ளி அப்புறப் படுத்திய சேவை மிகவும் மகத்தான சேவை. இந்தச் சேவையைச் செய்தவர்களை நாம் போற்றவேண்டும், பாராட்ட வேண்டும், அப்படிச் செய்கிறோமா? இல்லை.


மேலை நாடுகளில் அவர்களைச் சுகாதார உதவியாளர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். உரிய சம்பளமும் மரியாதையும் வழங்குகின்றனர். அந்த தொழிலாளிகளின் மகிழ்ச்சியான சேவையால் அந்த நாடுகள் என்றும் சுத்தமாக விளங்குகின்றன.



இனிமேலாவது [illegible]ர்களின் சேவையைப் பாராட்டுமு[illegible]க வருடத்தில் ஒ[illegible] நாளை உலக சு[illegible] சுத்திகரிப்பாள தினம் என்று ஒ[illegible]க்கி அவர்களை கௌரவிக்கும் மு[illegible]மாக கிராமங்க[illegible] நகரங்கள் தோற[illegible]க்கள் கூடி அ[illegible]களுக்கு தம்மா[illegible]ன்ற அன்பளிப்[illegible]களை வழங்கிக் [illegible]ரவிக்க வேண்டு[illegible] இந்தச் செய்கை [illegible]ர்களுக்கு ஓர் உ[illegible]கத்தையும், உற்[illegible]தையும், தன்ன[illegible]பிக்கையையும் [illegible]டுக்குமென்பதி[illegible]ஐயமில்லை. எல்[illegible]ரும் இதை நல[illegible] முறைப்படுத்த மு[illegible]வாருங்கள், நல[illegible] முறைப்படுத்து[illegible]. நாடு மேலு[illegible] தூய்மையடையு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழ்நிலை அறிந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். உடல் நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** திறமையை வெளிப்படுத்தி, பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள்.

**மிதுனம்:** தன்மானத்திற்கு சோதனை வரலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவை. மிதமான வருமானம் கிடைக்கும். சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம்.

**கடகம்:** அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை அதிகரிக்கும். ஆதாயம் கூடும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருளை வாங்குவர்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்குரிய நற்பலன் வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** எதிர்கால வளர்ச்சிக்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். உணவுப் பொருளை தரமறிந்து உண்பது நல்லது.

**துலாம்:** உறவினரின் பாசம் கண்டு வியப்பீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த பிரச்சினைகளை, கவனத்துடன் சரிசெய்வது நல்லது. புதிய முயற்சியால் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். அரசு வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். காணாமல் போன பொருள், புதிய முயற்சியால் கைக்கு வந்துசேரும்.

**தனுசு:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி, பொறாமை குறையும். வருமானம் உயரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** பேச்சில் நிதானத்தை பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில், குளறுபடி குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். உறவினரால் உதவி உண்டு.

**கும்பம்:** சிறிய பணிக்கும், அதிக முயற்சி தேவைப்படலாம். அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். முயற்சியில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் உயரும். குடும்பத்தினரின் தேவையை, தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.



இது தான் சத்திய சோதனையா?



இந்த மாதிரி இரண்டு டயர மாட்டிட்டா போதும், காணாமற் போன பிளேனு கடல்ல விழுந்தா, மிதக்கும்மல்ல. ஒருத்தனுக்கும் யோசன பத்தலை.

லீவு போட்டுத் தூங்கிறவன் மனுசன்...



எவ்வளவு களைப்பு இருந்தாலும், அலுவலகத்தில போய்த் தூங்கிறவன் பெரிய மனுசன்.



சமூக வலைதளம் போலி உலகம் என்று தெரியாமல் உண்மையாக வாழ்வதை விடவா, முட்டாள் தனம் இருக்கப்போகிறது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | 7 | | 5 |
| | | 3 | | | | | 1 | |
| | | | | 8 | 6 | | | |
| 1 | | | | 6 | 7 | | | |
| | | 8 | | | | 4 | | |
| | | | 9 | 5 | | | | 2 |
| | | | 2 | 3 | | | | |
| | 5 | | | | | 9 | | |
| 8 | | 4 | | | | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 4 | 7 |
| 8 | 4 | 7 | 2 | 3 | 6 | 1 | 5 | 9 |
| 1 | 9 | 3 | 7 | 5 | 4 | 8 | 6 | 2 |
| 9 | 3 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 5 | 7 | 8 | 3 | 9 | 2 | 4 | 1 | 6 |
| 6 | 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 3 | 8 | 9 | 6 | 1 | 5 | 2 | 7 | 4 |
| 4 | 5 | 2 | 9 | 7 | 3 | 6 | 8 | 1 |
| 7 | 1 | 6 | 4 | 2 | 8 | 5 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை.
சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






# ஹிந்தி படவேட்டையில் இறங்கிய எமிஜாக்சன்!

சங்கரின் ஐ படத்துக்கு பிறகு தங்கமகன், கெத்து, தெறி என வரிசையாக நடித்த எமிஜாக்சனுக்கு எந்தப் படமும் பெரிதாகக் கைகொடுக்கவில்லை. இந்த நிலையில், தற்போது சங்கர் இயக்கத்தில் ரஜினி–அக்சய்குமார் நடிக்கும் 2.O படத்தில் நாயகியாக நடித்து வருகிறார். இந்தப் படத்துக்கு பிறகு 'ஆளி' என்ற ஹிந்திப் படத்தில் நடிக்கும் எமிஜாக்சன், ஏ.எல்.விஜய் இயக்கத்தில் பிரபுதேவா–தமன்னா நடித்துள்ள 'தேவி' படத்தில் நட்புக்காக நடித்திருக்கிறார். ஆனால் இதையடுத்து தமிழில் அவருக்கு எதிர்பார்த்தபடி புதிய படங்கள் வரவில்லை.

தற்போது 'ஆளி' ஹிந்திப் படத்தில் நடித்து வரும் எமிஜாக்சன், ஹிந்தியில் புதிய படங்களைக் கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறாராம். ஏற்கனவே, ஹிந்தியில் 'ஏக் திவானா தா', 'சிங் இஸ் பிலிங்' போன்ற படங்களில் நடித்திருப்பதால் பொலிவுட்டில் எமிக்கென்று ஒரு ரசிகர் வட்டாரம் உள்ளதாம். மேலும், ரஜினி–அக்சய்குமாருடன் நடித்து வரும் '2.O' படம் ஹிந்தியிலும் வெளியாகயிருப்பதால், இந்தச் சமயத்தில் பொலிவுட்டில் முயற்சி எடுத்தால் பெரிய அளவிலான படங்கள் கிடைக்கும் என்று லண்டனில் இருந்து அடிக்கடி மும்பைக்கு சென்று அங்குள்ள முன்னணி இயக்குநர்களுடன் பட வேட்டை நடத்தி வருகிறாராம் எமிஜாக்சன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இது புதுசு

ஆண்களுக்கான இரட்டை நிற ரக்சூட் அறிமுகமாகியுள்ளது. வித்தியாசமான வடிவமைப்பில், கால் பகுதில் பாண்ட் வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. 800 ரூபாவில் இருந்து 1100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 600 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 500 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 550 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 700 | 1060 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 700 | 800 | 1000 | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 400 | 600 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 650 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 400 | 450 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 600 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 400 | 140 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 350 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 200 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 120 | 40 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 100 | 120 | 120 | 100 | 80 | 90 | 70 |
| கரட் | 200 | 160 | 170 | 180 | 160 | 160 | 130 | 140 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 50 | 70 | 60 | 80 | 140 | 40 | 80 |
| பாகல் | 200 | 170 | 240 | 180 | 120 | 160 | 110 | 150 |
| கருணைக்கிழங்கு | 120 | 140 | 160 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | 70 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 | 100 | 100 | 60 | 130 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 | 80 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 90 | 80 | 120 | 100 | 80 | 110 | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 450 | 400–600 | 500 | 600 | 600 | 450 | 600 |
| புடோல் | 70 | 80 | 40 | 100 | 80 | 80 | 60 | 60 |
| கோவா | 140 | 140 | 140 | 160 | 140 | 80 | 160 | 120 |
| வெண்டி | 80 | 60 | 50 | 70 | 100 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 150 | 170 | 200 | 180 | 160 | 160 | 130 | 140 |
| லீக்ஸ் | 140 | 130 | 120 | 180 | 160 | 200 | 100 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20 | 40 | 20–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 110 | 100 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 | 100–120 | 200 | 100 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 300 | 300 | 260 | 200 | 300 | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 300 | 130 | 160 | 250 | 160 | 400 | 250 | 300 |

## மரக்கறித் தோசை



### தேவையான பொருள்கள்

பச்சரிசி – 100கிராம்
புழுங்கலரிசி – 100 கிராம்
உழுந்து – 100 கிராம்
பாசிப்பருப்பு 100 கிராம்
துவரம்பருப்பு – 200 கிராம்
கடலைப்பருப்பு – 200 கிராம்
செத்தல்மிளகாய் – 5
மிளகுத்தூள், சீரகம், உப்பு, மஞ்சள்தூள், எண்ணெய் – தேவையான அளவு
நறுக்கிய வெங்காயம் – 1 கப்
கரட், லீக்ஸ், பீற்றூட், கறிமிளகாய், கோலி பிளவர்(நறுக்கியது) – தேவையான அளவு

### செய்முறை

அரிசிவகைகளையும், பருப்பு வகைகளையும் தனித்தனியாக ஊற வைக்கவும்.
ஊறியதும் உப்பு சேர்த்து நன்கு அரைக்கவும்.
அரைத்த விழுதை நன்றாக குழைத்து அரை மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும்.
நறுக்கிய மரக்கறிகள்ளை சிறிது எண்ணெய் விட்டு நன்கு வதக்கவும்.
வதக்கியதும் தோசை மாவில் மஞ்சள்தூள், மரக்கறிகளையும் சேர்த்து நன்கு கலக்கவும்.
தோசைத்தட்டில் தோசைகளை சுட்டு எடுக்கவும்.
மரக்கறித் தோசை தயார்.

## நாளை ஆடி-15

சனிக்கிழமை -30.07.2016
திதி: ஏகாதசி மு.ப.08.57 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ.04.59 வரை
ராகுகாலம்: 09.03-10.33 வரை
சுபநேரம்: 03.03-04.33 வரை
ஏகாதசி விரதம்

## சமையல் செய்முறைகள் சில

- கோடை வெயிலுக்கு குளிர்ச்சியாகத் தயாரிக்கும் மோரில் உப்பு, பெருங்காயத்தூளுடன் ஒரு சிட்டிகை சுக்குப் பொடி சேர்த்துக் குடித்தால் உடலுக்கு மிகவும் நல்லது.
- தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம் போன்ற கலந்த சாதங்கள் தயாரிக்கும்போது, பொட்டுக் கடலையை நன்கு வறுத்துக் கொட்டினால் மிகவும் சுவையாக இருக்கும்.
- தேங்காய் உடைக்கும்போது எடுக்கும் தண்ணீரை ரசத்தில் சேர்த்தால் இளநீர் ரசம் போல மணமாகவும், சுவை கூடியும் இருக்கும்.
- கொழுக்கட்டைக்கு மா பிசையும்போது, ஒரு கரண்டி பால் சேர்த்து கொழுக்கட்டை பிடித்தால், சூட்டில் பிளந்து கொள்ளாமல் அழகாக வருவதோடு சுவையாகவும் இருக்கும்.
- கரட்டை மெலிதாகச் சீவி, தக்காளியுடன் லேசாக வதக்கி, உப்புப் போட்டு சாதத்துடன் கலந்து குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுத்தால், அதனை விரும்பிச் சாப்பிடுவார்கள்.
- சமையலறையில் புகை அதிகமாக இருக்கும்போது ஈரத்துணியை தொங்க விட்டால், புகை எளிதில் மறைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்தானம் செய்யும் இலகுத் தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்தும் மொபிடெல்



தேசிய கையடக்க தொலைப்பேசி சேவை வழங்குநரான எஸ்.எல்.ரி. மொபிடெல் கண் மற்றும் உடல் உறுப்பு தானம் செய்ய விரும்பும் எந்தவொரு நபருக்கும் இத்திட்டத்தில் இணைந்துகொள்ளக்கூடிய வகையில் கண்தானம் வழங்கும் மத்திய நிலையம் மற்றும் தேசிய 'திசு' வங்கியுடன் இலகுவாக பதிவு செய்யும் தொழில்நுட்பமுறையை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்தது.

மொபைல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த தொழில்நுட்பத்தின் மூலம் 6060 எனும் இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுதல் அல்லது எஸ்.எம்.எஸ். ஒன்றை அனுப்புதல் அல்லது இணையத்தளத்தின் மூலமாகவோ தங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும் என அது கூறியுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் சிறிலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் பி.ஜி. குமாரசிங்க, இலங்கை கண்தானம் செய்வதற்கான மத்திய நிலையத்தின் தலைவர் டி.சி. ரணசிங்க ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் இடம்பெற்றது.

6060 எனும் இலக்கத்தை இந்தத் திட்டத்துக்காக அறிமுகப்படுத்துவதுடன், வாடிக்கையாளர்கள் இலகுவாக இணையத்தளத்தின் மூலம் பதிவு செய்வதற்காக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அனுசரணையையும் மொபிடெல் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறையின் மூலம் அழைப்பை மேற்கொள்ளுதல், குறுந்தகவல்களை அனுப்புதல் என்பவற்றின் மூலம் பதிவு செய்துகொள்ளும் நபர்களின் தகவல்கள் கணினிமயப்படுத்தப்பட்ட தரவு சேகரிப்புக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். மேலும், இணையத்தளத்தின் மூலம் பதிவு செய்வோருக்கு 24 மணித்தியாலமும் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.

www.htb.mobitel.lk எனும் இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலம், நபரொருவர் தமது தகவல்களை இலகுவாகப் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும், அத்துடன் நாடு முழுவதும் பரந்துள்ள மொபிடெல் கிளைகளுக்குப் பிரவேசிப்பதன் மூலம் இந்தத் திட்டத்தினுள் இணைந்துகொள்ள முடியும் எனவும் மொபிடெல் நிறுவனம் கூறியுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிரிசேன, அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளர் 'இசுறு' திஸாநாயக்க, இலங்கை கண்தான மத்திய நிலையத்தின் தலைவர் டி.சி. ரணசிங்க மற்றும் தேசிய 'திசு' வங்கியின் மூத்த முகாமையாளர் ஹெமந்த தி மெல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த எஸ்.எல்.ரி. மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன, "சிறிலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனமானது எப்பொழுதும் புதிய சேவைகளையும் தொழில் நுட்பங்களையும் தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் முன்னனியில் திகழும் ஒரு நிறுவனமாகும். அந்த வகையில் உடல் உறுப்புகள், கண்தானம் செய்ய விரும்பும் நபர்களுக்கு மிக இலகுவாக இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தப் புதிய தொழில்நுட்பம் உதவும். 6060 முறையை அறிமுகம் செய்வதில் நான் அதிகம் மகிழ்ச்சியடைகின்றேன். நடை முறையில் கண் மற்றும் உடல் உறுப்புக்களைத் தானம் செய்வதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது" – என்றார்.

இலங்கை கண்தான மத்திய நிலையத்தின் தலைவர் டி.சி. ரணசிங்க கூறுகையில், "கண் மற்றும் உடல் உறுப்பு தானம் செய்வதற்கு இந்தநாட்டு மக்களுக்கு மிகச் சிறந்த சந்தர்ப்பமாக நான் கருதுகின்றேன். தகவல் தொழில் நுட்பங்கள் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் அவை மனித வாழ்வின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படுவது மிகச் சிறந்ததொரு விடயமாகும். இவ்வாறானதொரு மிகச் சிறந்த திட்டத்தில் எம்முடன் இணைந்து கொண்ட மொபிடெல் நிறுவனத்துக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்"– எனக் கூறினார். (த)

**வணிகம்**

## தேயிலை உற்பத்தி சரிவு

இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த மாதம் வீழ்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேயிலைச் சபையின் புள்ளிவிவரங்கள் இதனைத் தெரிவித்தன.

2015ஆம் ஆண்டு ஜுன் மாதத்துடன் ஒப்பிடும்போது, தேயிலை உற்பத்தி 14.3 சத வீத வீழ்ச்சி கண்டுள்ளது. அத்துடன் இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுக்கான தேயிலை உற்பத்தி 11.1 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதிகூடிய மழையுடனான கால நிலையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்திருப்பதாகவும் கூறப்பட்டது. (த)

## வட்டு. கார்த்திகேசு வித்தியாலயத்துக்கு வர்ணம் பூசியது ஏ.ஐ.ஏ. காப்புறுதி நிறுவனம்



நீண்ட காலமாக வர்ணப்பூச்சுக்கள் பூசப்படாமல் காணப்பட்ட வட்டு கார்த்திகேசு வித்தியாலயக் கட்டடத்துக்கு ஏ.ஐ.ஏ. காப்புறுதி நிறுவனத்தால் வர்ணம் பூசப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது. 'வேள்ட் விசன்' நிறுவனத்தின் வழிநடத்தலில் குறித்த பாடசாலைக் கட்டடத்துக்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் வர்ணம் பூசப்பட்டது. இதில் ஏ.ஐ.ஏ. காப்புறுதி நிறுவனத்தைச் சேர்ந்த 40க்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு, வர்ணப்பூச்சு வேலைகளில் ஈடுபட்டனர். (த-21)

### நுட்பம்




## சாம்சுங்கின் புதிய தொழில்நுட்பம்

சாம்சுங் நிறுவனம் ரி.எஸ்.ரி. (ரேபோ ஸ்பீட் ரெக்னொலஜி) எனும் தொழில்நுட்பத்தை தனது புதிய தொடுதிரைக் கைபேசிகளில் புகுத்த உள்ளது.

சமீபத்தில் அறிமுகமான ஜே2 புரோ தொடுதிரைக் கைபேசியில் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பம் மூலம் செயலிகளால் கைபேசி வேகம் குறைவது கட்டுப்படுத்தப்படும்.

இதன் மூலம் ரம் அளவை அதிகரித்து போனை 40 சதவீதம் வரை போனை வேகமாக வைத்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த தொழில்நுட்பத்தை இனி வெளியிடும் அனைத்து கைபேசிகளில் கொண்டு வரப் போகின்றோம் என்று சாம்சுங் நிறுவனம் தெரிவித்தது.

## அப்பிள் இலாபத்தில் வீழ்ச்சி

தொழில்நுட்ப பெருநிறுவனமான அப்பிள் தனது காலாண்டு நிகர லாபத்தில் 27 சத வீத வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பான, ஐபோன் விற்பனையில் இரண்டாவது தொடர் காலாண்டு பருவத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அறிவித்திருக்கிறது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் விற்கப்பட்ட ஐபோன்களின் எண்ணிக்கையை விட 15 சதவீதம் குறைவான ஐபோன்களே இந்தக் காலாண்டில் விற்கப்பட்டிருக்கின்றன.

இந்த வீழ்ச்சி என்பது அஞ்சப்பட்டதைக் காட்டிலும் குறைவானதே. அப்பிள் ஐபோன்கள் அந்த நிறுவனத்தின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு அளவு வருவாயைத் தருகின்றன.

அப்பிள் நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பான ஐபோனின் பிரபல்யத்தில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி குறித்துச் சில முதலீட்டாளர்கள் கவலைப்படுகின்றனர். ஆனால் இந்த வீழ்ச்சி வரும் செப்ரெம்பரில் வெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐபோன் 7 விற்பனைக்கு வரும்போது மாற்றமடையும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.



### பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE — 28/7/2016 — www.cse.lk

| சுட்டெண் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ⇑ 9.73 | 6,392.15 | 6,382.42 |
| S&P SL20 | ⇑ 12.87 | 3,414.66 | 3,401.79 |
| வியாபாரப்புரள்வு | | 991,474,816 | 363,987,040 |
| உள்நாடு- கொள்வனவு | | 243,364,544 | 273,435,392 |
| விற்பனை | | 260,721,200 | 288,300,800 |
| வெளிநாடு- கொள்வனவு | | 748,110,272 | 90,551,664 |
| விற்பனை | | 730,753,664 | 75,686,240 |



| அதிகூடிய பங்குபரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (ரூ) |
|---|---|---|---|---|
| டயலொக் | DIAL.N | 11.00 | 85,583,336 | 941,561,950 |
| ஹெய்லஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 86.1 | 4,106,092 | 359,163,843 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 140 | 482,906 | 67,617,911 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N | 126 | 532,864 | 66,603,682 |
| பீப்பிள் லீசிங் & பைனான்ஸ் | PLC.N | 18.1 | 3,470,076 | 62,854,030 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 81.30 | 656,102 | 53,339,785 |
| டிஸ்டில்லெரிஸ் | DIST.N | 245 | 198,488 | 48,608,818 |
| ஹய்லீஸ் பைபர் | HEXP.N | 95 | 352,512 | 33,897,886 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 128.1 | 219,254 | 28,421,158 |
| செவ்ரோன் லுப்ரிகன்ட்ஸ் | LLUB.N | 166 | 162,082 | 26,793,064 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
ஸ்வதேசி இண்டஸ்ட்ரியல் [illegible]
ரெக்ஸ்யோ பொலிஷ் (TIL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
ஏசில் கேபிள் (ACL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50
செவ்ரோன் லுப்ரிகன்ட் (LLUB) - பங்கு ஒன்றிற்கு Rs. 3.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 294 |
| பரிமாற்றத்தில் | 217 |
| [illegible] | 13.1 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக

னெடுப்பது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை அமைப்பது என்பன தொடர்பில் மக்களிடம் கருத்தறியப்படுகிறது. செயலணியின் நேற்றைய அமர்வு துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் தெரிவித்தாவது:

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. நாம் ஆடு, மாடு, கோழி வேண்டும் என்று கேட்கவில்லை. எங் கள் பிள்ளைகள் காணாமற் போய்விட்டார்கள் என்று பரணகம ஆணைக்குழுவில் முறையிட்டபோது, அவர்கள் கோழி வேண்டுமா மாடு வேண்டுமா என்றுதான் கேட்டனர். நாங்கள் அதைக் கேட்கவில்லை. குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடியுங்கள்.

கொத்துக் குண்டுகளால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். உணவில்லாமல் எங்களைச் சாகடித்தார்கள். 3 லட்சம் மக்கள் போரின் இறுதியில் அகப்பட்டிருந்தோம். ஆனால் 25 ஆயிரம் பேருக்குரிய உணவைத்தான் அரசு அனுப்பியது. எங்களைப் பட்டினிபோட்டுச் சாகடித்தனர்.

இறுதிக் கட்டப் போரை முழுமையாக அனுபவித்தவன் என்ற அடிப்படையில் சொல்கின்றேன், உணவின்றியே பலர் சாவடைந்தனர். உணவுக்கு கையேந்தி வரிசையில் நின்றபோது கொல்லப்பட்டவர்கள் பலர்.

1977ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கை எங்கே என்பது தெரியாது. இதனால் எங்களுக்கு உள்ளூர் விசாரணையிலும், உள்ளூர் விசாரணையாளர்களிலும் நம்பிக்கையில்லை. குற்றவாளிகள் இனம் காணப்படவேண்டும். அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். பன்னாட்டு நீதிபதிகளின் பங்கெடுப்புடன் பன்னாட்டு விசாரணையே தேவை - என்றார்.

எங்களைப் பாதுகாப்பு வலயம் என்று அறிவித்த இடத்தில் இருக்குமாறு தெரிவித்தனர். அங்கு ஒன்று கூடி இருந்த மக்களில் பலரைக் கொலை செய்தனர். எறிகணைகள் எங்கள் மீது தவறி விழவில்லை. இலக்குமாறி விழவில்லை. எங்களைக் கொல்ல வேண்டும் என்ற நோக்குடன்தான் எறிகணை வீசினார்கள்.

திருகோணமலை குமாரபுரம் வழக்கு முடிந்து போய்விட்டது. இராணுவத்தினர் சுற்றவாளிகள் என்று விடுவித்துவிட்டார்கள். இங்கே உள்ள நீதிபதிகளையும், விசாரணையாளர்களையும் பயன்படுத்தி வழக்கு நடத்தினால் இப்படித்தான் முடிவு வரும். எனவே, விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்க வேண்டும் என்றார் அனிஞ்சயன் குளம் கிராமத்தைச் சேர்ந்த கந்தையா நவரத்தினராஜா.

(வ-5-ரி7)

## சிங்கள

ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பிரதேசத்தில் சிங்கள மீனவர்கள் வந்து தங்கியுள்ளனர். இவர்கள் சட்ட விரோதமாகத் தமது காணிகளில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கொக்கிளாய் தமிழ் மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். தமிழ் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்கு காணி வழங்கப்பட்ட போது, அதற்கு சிங்கள மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தப்பின்னணியிலேயே, சிங்கள மீனவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் கூரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கொக்கிளாய்ப் பிரதேசத்தில் தமக்கு வாடிகள் அமைப்பதற்கு காணியைப் பெற்றுத் தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆளுநர் கூரே, இதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதா என்பது தொடர்பில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரிடம் தொலைபேசியூடாகக் கேட்டறிந்தார் என்று தெரியவருகின்றது. (வ-5-10)

## நீதிப்

என்பன தொடர்பில் மக்களிடம் கருத்தறியப்படுகிறது. இதில் நாளை சனிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் காலை 8 மணி தொடக்கம் இடம்பெறுகிறது.

இந்த அமர்வுகளில் பொதுமக்கள் தனிநபராகவோ அல்லது பொது அமைப்புக்கள் ஊடாகவோ தமது ஆலோசனைகளை முன்வைக்க முடியும். இதன்போது வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் தரவுகள் தொடர்பில் இரகசியம் பேணப்படும். எனவே பொதுமக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ முன்வைக்க முடியும்.

தொடர்ந்து எதிர்வரும் 5ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் 6ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்திலும் 7ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் மக்கள் கருத்தறியும் அமர்வுகள் இடம்பெறும்.

இந்த அமர்வுகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான அலுவலகமொன்றை நிறுவுதல் உண்மை நீதி நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்படல், வழக்கு தொடுநர் தொடர்பிலான கலந்தாய்வுகள், இழப்பீடு வழங்கல் அலுவலகம் அமைத்தல் என்பன தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துக்களைப் பதிவு செய்ய முடியும் - என்றார்.

இதேவேளை குறித்த செயலணியின் வேலணை பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட அமர்வில் பொதுமக்களின் பங்குபற்றல் குறைவாக இருந்தது. இது தொடர்பில் பல்வேறு தரப்பினாலும் விசனம் தெரிவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளாவிடில், அரசு ஏதோ ஒரு பொறி முறையை வலுக்கட்டாயமாகத் திணித்து உண்மைகளை மூடி மறைக்கவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமிழ்மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலான பன்னாட்டுக் கவனத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(வ-109)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ம.சுதர்சன் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி றோஸ்மேரி மரியதாசன்**

அவர்கள் காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலகம் -**
**அனைத்து உத்தியோகத்தர்களும்**
**தீவுகள் தெற்கு, வேலணை.**

## மரண அறிவித்தல்

### திருமதி றோஸ்மேரி மரியதாசன்

தோற்றம்
10 . 10 . 1948



மறைவு
27 . 07 . 2016

குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும், இல.04, ஈச்சமோட்டை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ்மேரி மரியதாசன் 27.07.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணிவேதநாயகம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிமியோன் கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், டோமினிக் மரியதாசனின் பாசமிகு மனைவியும், எழிலன், இளங்கோ, சுதர்சன், டேமியன், சங்கீதா, அருண் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.07.2016) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா (புனித மரியன்னை) பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.4, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/3306)
(11,18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிருஸ்ணபவானி (கிருஷா) பரமலிங்கம்



மலர்வு: 08.07.1964
உதிர்வு: 27.07.2016

புங்குடுதீவு, ஊரதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, காளிகோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபவானி (கிருஷா) பரமலிங்கம் 27.07.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூலோகராசா மற்றும் வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், கேதீஸ்வரன் (பிரான்ஸ்), பங்கயற்செல்வி (பிரான்ஸ்), இளந்திரயன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், முத்துலிங்கம், சிவலிங்கம், சண்முகலிங்கம், ராசலிங்கம், சுதாநந்தினி, காலஞ்சென்ற மதியழகன் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், புஸ்பராணி, அனுஷா, கீதா, சுகந்தினி ஆகியோரின் சகலியும், நிஷாந்தினி, நிஷாந்தன், நிமல்ராஜ், நிலோஜினி, விதுஷன், கிஷானிக்கா ஆகியோரின் அன்புப் பெரிய தாயும், தமிழ்மாறன் (பிரான்ஸ்), தனுப்பிரியன் (பிரான்ஸ்), பிரியங்கா, விசித்திரன், சாருஹான் ஆகியோரின் பாசமிகு மாமியும், மதினிஷன்(பிரான்ஸ்), அனுஷன் (பிரான்ஸ்), மதுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது மைத்துனரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கேதீஸ்வரன் (அண்ணன்-பிரான்ஸ்) 0033 6686 14479, சுதாநந்தினி (யாழ்ப்பாணம்)- 077 357 4057, அனுஷா (யாழ்ப்பாணம்)- 077 807 5949 - (மைத்துனிமார்கள்)**
பூ.முத்துலிங்கம் (மைத்துனர்),7ஆம் வட்டாரம், கேரதீவு.

**077 341 5683**

(J/3316)
(11,18)

### ஸ்ரீமதி இராஜேஸ்வரி சிதம்பரநாதக்குருக்கள்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி இராஜேஸ்வரி 2016.07.28 வியாழக்கிழமை காலை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மட்டுவில் கிருஷ்ணசாமிக் குருக்கள் (பொன்னுச்சாமிக் குருக்கள்) - இரத்தினம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரஐயர் - ஜானகி அம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருமதி லோகேஸ்வரி சண்முகராஜஐயர் மற்றும் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள், ' சமஸ்கிருத பண்டிதர்' சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள், திருமதி லோகநாயகி விஸ்வநாதசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரசர்மா(திருக்கணித ஜோதிடம், கொழும்பு), பிரம்மஸ்ரீ சண்முகானந்த சர்மா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சியாமளா மற்றும் திருமதி மனோகரி சபாநாதக்குருக்கள் (ஜேர்மனி), பிரம்மஸ்ரீ ஸ்ரீதரசர்மா (அமெரிக்கா) ,சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் (பிரதமகுரு, சரசாலை வீரமாகாளியம்மன் கோயில்), பிரம்மஸ்ரீ வாகீஸ்வரசர்மா (Achievers Marketing Pvt.Ltd. Colombo), பிரம்மஸ்ரீ குமரேஸ்வர சர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாசுகி, கமலா, சபாநாதக்குருக்கள் (ஜேர்மனி), கவிதா (அமெரிக்கா), கௌரீஸ்வரி, சாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் திவ்யா, விசாகன், பார்கவி, சாம்பவி, ஹானவி, சௌஜன்யா, சௌந்தர்யா, சாசனா, சுதர்சன், ஹம்சிகா, சுகிர்தன், வைஷாலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரித்திரா, ஆர்த்ரா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது கல்வயல் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளாவும்.

" சியாமளா பவனம்"
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:
சி. சண்முகானந்த சர்மா
(மகன்)

**021 321 3472**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல் பொறிமுறையில் பன்னாட்டுப் பங்களிப்பு அவசியம்

## கொழும்பு வந்த கனேடிய அயலுறவு அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 29
நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளில் பன்னாட்டுப் பங்களிப்பு அவசியம் என இலங்கை அரசிடம் வலியுறுத்தினார் கனேடிய அயலுறவு அமைச்சர் ஸ்ரிவன் டியேன்.

கொழும்பிலுள்ள அயலுறவு அமைச்சின் அலுவலகத்தில் அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்று சந்தித்து கலந்துரையாடினார் கனேடிய அயலுறவு அமைச்சர். இந்தச் சந்திப்பை அடுத்து நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் அவர் கருத்து வெளியிட்டார்.

இதன்போது அயலுறவு அமைச்சர் ஸ்ரிவன் டியேன் தெரிவித்ததாவது:

இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரை இன்று (நேற்று) காலை சந்திக்க கிடைத்தது. அனைத்து மக்களுக்குமான சமாதானம், பொறுப்புகூறல், நல்லிணக்கம் செழிப்பு ஆகியவற்றை மேம்படுத்த தயாராகவுள்ளமை தொடர்பான கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் செய்தியை இருவருக்கும் தெரியப்படுத்தினேன். தெற்காசியாவில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் தோளோடு தோள் நின்று எவ்வாறு செயற்பட முடியும் என்பது குறித்து மங்கள சமரவீரவுடன் கலந்துரையாடினேன்.

இலங்கை மற்றும் கனடாவின் இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம்.

இலங்கை முன்னெடுத்துள்ள அரசமைப்பு உருவாக்கம் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம். குறிப்பாக காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பதில் மக்களுக்குள்ள அர்ப்பணிப்பு, இராணுவ மயப்படுத்தப்பட்ட பகுதிகளில் சில காணிகள் விடுவிக்கப்பட்டதை நாம் கருத்தில் எடுத்துள்ளோம். எவ்வாறாயினும் அதிகளவிலான காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன.

தற்போதைய சாதகத்தன்மையை பயன்படுத்தி நல்லாட்சியை பலப்படுத்தல், பொருளாதார ஸ்தீரத்தன்மை உள்ளிட்ட ஏனைய மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு இலங்கை முன்னோக்கிச் செல்வதை நாம் ஊக்குவிக்கிறோம். அரச கரும மொழிகள் தொடர்பான பிரச்சினைகள், அதிகார பரவலாக்கம், காத்திரமான பொருளாதார அபிவிருத்தி, சட்ட நிபுணர்கள், இளையோர் திறன், மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களில் அனுபவங்கள் பலவற்றை இலங்கையுடன் கனடா பகிர்ந்துகொண்டுள்ளது.

நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளில் அர்த்தமுள்ள பன்னாட்டுப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை நாம் அறிந்துள்ளோம். உள்நாட்டுப் போரின் பின்விளைவுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. உணர்ச்சிபூர்வமான விடயங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. நல்லிணக்க நடவடிக்கை நீண்டதும் தடைகளைக் கொண்ட ஒன்றாகும். எவ்வாறாயினும் எதிர்காலத்தை கருத்திற் கொள்ளும் போது அது முக்கியமானது. நாட்டைப்பலப்படுத்தும்வகையில் அனைவரையும் ஒன்றிணைக்கும் அதேவேளை, அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதே நீண்டகால நோக்கமாக இருக்க வேண்டும் -என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கை அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர, கடந்த சில ஆண்டுகளாக கனடாவுடனான இருதரப்பு உறவுகள் சீர்குலைந்திருந்தது கவலை அளிக்கும் செயற்பாடாகும்.

கனடாவுடனான இருதரப்பு உறவுகளில் ஸ்ரிவன் டியோனின் பயணம் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. 13 வருடங்களின் பின்னர் முதல்முறையாக கனேடிய அயலுறவு அமைச்சர் ஒருவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த போது அகதிகளாக சென்ற எமது சகோதர சகோதரிகளின் வீடாக கனடா இருந்தது. நட்புறவைப் புதுப்பித்தல், புதிய கூட்டிணைப்பை உருவாக்குதல், அனைத்து மக்களுக்கும் சிறந்த விடயங்களை எதிர்பார்த்து உலக நாடுகளுடனான ஈடுபாட்டை இலங்கை மீள ஆரம்பித்துள்ளது. ஜனநாயகம், நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி என்ற தூண்களின் அடிப்படையில் புதிய இலங்கைக்கான அடித்தளத்தை நாம் இட்டுள்ளோம் - என்றார்.

(வ-5)

அச்சகத்துறையில்
எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும்
வழங்காத வழங்கமுடியாத நியாயவிலை
கலர் பிறிண்ட்

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
0771974875 அச்சகத்துறையில் கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

### கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர்
**திரு. ச.குகதாஸ்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி குகதாஸ் கோமதி**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இலங்கை கணக்காளர் சேவை சங்கம்**
**வடக்கு மாகாணம்.**

### கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர்
**திரு. ச.குகதாஸ்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி குகதாஸ் கோமதி**

அவர்களின் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகின்றது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் மாவட்ட செயலக, பிரதேச செயலக**
**கணக்காளர்கள்.**

### கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர்
**திரு. ச.குகதாஸ்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி குகதாஸ் கோமதி**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Institute of Public Finance**
**& Development Leadership**

### கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலக பிரதம
கணக்காளர்
**திரு. ச.குகதாஸ்**
அவர்களின் பாசமிகு
துணைவியார்
**திருமதி**
**கோமதி குகதாஸ்**

அவர்களது திடீர் மறைவுத் துயர் அறிந்து பேரதிர்ச்சி அடைந்துள்ள நாம் அவரது ஆத்மா எல்லாம் வல்ல இறைவனது திருவடிகள் சேரப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**கணக்காளரும் உத்தியோகத்தர்களும்**
**நிதிக்கிளையும் களஞ்சிய நலன்புரிக் கிளையும்,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**



முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் நேற்று வியாழக்கிழமை நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. புனர்வாழ்வு பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் பிரிகேடியர் தர்சன லியனகே தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்ற 300 முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தல், பற்சிகிச்சை, கண் சிகிச்சை போன்றவற்றுடன் போராளி குடும்பங்களின் சிறுவர்களுக்கான ஆலோசனை மற்றும் உளவள ஆற்றுப்படுத் போன்றன வழங்கப்பட்டது. (ற-5-402)


தேவை
பிரிஜ்ல தனியார் PVC நிறுவனத்திற்கு Bend வளைக்க, விநியோகிக்கத் தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு. 0772185175

பசு மாட்டைக் காணவில்லை
இளம் மஞ்சள் கருமை கலந்த (K.S குறியுடை)
7 மாத சினையுடன் கூடிய கன்னி பசுவை
25/07/2016 திங்கள் முதல் காணவில்லை
கண்டவர்கள், கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
0774115387

வீடு விற்பனைக்கு
இருபாலை அரசடி ஒழுங்கையில்
02 பரப்புக் காணியுடன் அமைந்த
வீடு விற்பனைக்குண்டு
(பலநோக்கு கூட்டுறவு
சங்கத்துக்கு அருகில்)
தொடர்புக்கு:
077 4976 815, 077 9317 674

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**வீரகத்தி செல்லையா**



| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 19 . 05 . 1919 | 29 . 06 . 2016 |

**கடந்த 29.06.2016 ஆம் திகதியன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (29.07.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.**
**இந் நிகழ்வுகளில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் அதன்பின்னர் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

சரசாலை வடக்கு, சாவகச்சேரி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்ச உட்பட அறுவருக்குப் பிடியாணை

## கொழும்பு நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூலை 29

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட அறுவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸினால், பொலிஸ் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று உத்தரவிடப்பட்டது. 'ஹெலோ கோப்' நிறுவனத்திடமிருந்து 125 மில்லியன் ரூபாக்கான பங்குகளைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டிலேயே, நாமல் உள்ளிட்ட அறுவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக, நாமல் ராஜபக்சவுக்கு பணம் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது. அதனால், அவர் உள்ளிட்ட அறுவர் மீது, நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு கூறியே, இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(வ-5)

### கடன் வசூலிப்பு

எமக்குப் பணம் கிடைத்துவிடுமா? என்றும் கேள்வியெழுப்பிக் கலங்குகின்றனர் பாதிக்கப்பட்ட பெண்கள்.

குறித்த இரண்டு இடங்களிலுமுள்ள நிதி நிறுவனங்கள் கடனைக் கட்டுமாறு கொடுமைப்படுத்துகின்றனர். கடன்கள் குறித்த தவணையில் செலுத்தத் தவறின் இரவு நேரங்களில் வந்து தொந்தரவு செய்கின்றனர்.

நிதி நிறுவனங்களுக்கு அதிக வட்டியுடன் சேர்த்து வழங்குவதில் கடும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளோம். நிறுவனத்தினர் அனுப்பும் ஆள்களால் நாங்கள் வீடுகளில் தங்கமுடியாது. ஆண்கள் துணையின்றி இருக்கும் நாம் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறோம்.

கடன்களைத் திரும்ப செலுத்த மாட்டோம் என்று நாங்கள் தெரிவிக்கவில்லை. கிழமை ரீதியாகச் செலுத்துகின்ற பணத்தை மாதமாக மாற்றி தரும்படி கேட்டோம். அதற்கு அவர்கள் இணங்கவில்லை. எம்மால் பணம் வழங்கக் கூடிய பொருளாதார வளமும் இல்லை. ஆனால் நிறுவனத்தினர் ஆள்களை வைத்துக் கடந்த ஒரு மாதமாக தொந்தரவு செய்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட பெண்கள் கூறினர்.

"மகள் நிறுவனம் ஒன்றுக்கு வேலைக்குச் செல்கிறாள். வீட்டிலிருந்து மகள் புறப்படும்போது வீட்டின் வெளியில் காத்து நின்று அவளிடம் பணம் கேட்கின்றனர். பல தடவைகள் இது தொடர்ந்ததால் மகள் பயந்துவிட்டாள். இனியும் வந்தால் 2 பேரும் செத்துப் போவம் என்று கூறுகிறாள்" என்று தாயார் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து நேற்றிரவு அழுதவாறு தெரிவித்தார்.

பணம் கேட்டு வீடுகளுக்கு வந்து பணம் இல்லை என்றவுடன் வீட்டிலுள்ள பொருள்களைக் கொண்டுசெல்லவுள்ளதாகத் தெரிவித்தனர். 2 வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் மற்றொரு வீட்டில் குளிர்சாதனப் பெட்டியையும் எடுத்துச் செல்லவுள்ளதாகக் கூறுகின்ற னர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரியிலுள்ள நிறுவனமே நேற்றும் ஆள்களை அனுப்பியது. அவர்கள் வீட்டுக்கு வந்து கொடுமைப்படுத்தினர். கொடுமை தாங்காது நேற்றுச் சட்ட உதவி ஆணைக்குழுவுக்குச் சென்றோம். அவர்களின் ஆலோசனைப்படி கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தோம் என்றும் அந்தப்பெண்கள் தெரிவித்தனர்.

நிதி நிறுவனங்களிலிருந்து யாராவது மாலை 5 மணிக்குப் பின்னர் வீடுகளுக்கு வந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு பொலிஸார் தெரிவித்ததாகப் பெண்கள் குறிப்பிட்டனர். (வ-4,ரி3)

### பிரதேச

பிரதேச செயலர் மீறியுள்ளார் என்று தெரிவித்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தில் சிங்கள மீனவர்கள் தங்கி நின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தமது வாடிகளை அமைப்பதற்கு காணி வழங்குமாறு கரைதுறைப் ற்று பிரதேச செயலகத் திடம் கோரிக்கை விடுத்திருந்த னர். இருப்பினும் இன்னமும் தமக்கு காணி வழங்கப்படவில்லை என்பதன் அடிப்படையிலேயே, மீனவர்கள் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தில், தமிழ் மீனவர்கள் மீன்வாடிகளை அமைப்பதற்கு காணி வழங்கப் பணிப்புரை விடுத்த கரைதுறைப்பற்று பிரதேச செயலர் மற்றும் வாடி அமைத் துள்ள மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், முல்லைத்தீவு நீரியல்வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

(வ-5-101)

### இராணுவத்தினரை

தெட்டம்பே விகாரையில் மதவழிபாடுகளை நடத்திய பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பேரணிக்குப் பிள்ளையார்சுழி போட்டார். குறித்த பாதயாத்திரையை வெற்றிகரமாகத் தொடக்கிவைப்பதற்காக 2 நாள்களுக்கு முன்னரே அவர் கண்டியில் முகாமிட்டு முக்கிய சந்திப்புக்களை நடத்தி, வியூகங்களை வகுத்திருந்தார்

'வற் வரி அதிகரிக்கப்படக்கூடாது', 'புதிய அரசமைப்பு சாவுப்பொறியாக அமையக்கூடாது', 'உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்து', 'படையினரை வேட்டையாடும் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை வேண்டாம்', 'அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்து', 'விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கு' என்பன உட்பட மேலும் பல கோசங்களுடனும், 'மக்களைக் கொலைசெய்த புலிகளுக்கு விடுதலை; படையினர் சிறைக்குள்; இதுவா நல்லாட்சி?', 'தாய்நாட்டை மீட்டெடுத்த படையினரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் காட்டிக்கொடுக்க வேண்டாம்' என்றெல்லாம் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியவாறும் பாதயாத்திரை ஆரம்பமானது.

மேற்குலக நாடுகளையும், அரசின் வெளிவிவகாரக் கொள்கையையும் பேரணியில் கலந்துகொண்ட சிலர் கடுமையாகச் சாடினர். பொது எதிரணி ஏற்பாடு செய்த இந்தப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவுறுத்தல் விடுத்திருந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாது கட்சியிலுள்ள மகிந்தவின் விசுவாசிகள் பேரணியில் குதித்தனர்.

அரசு மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டைக் காட்டிக்கொடுக்கக்கூடாது. அரசுக்கு வேண்டாத நபர்களுக்குத் துரோகி முத்திரை குத்தப்படுகின்றது. தற்போது முரளிதரன் மீதும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்" என்று மகிந்த ராஜபக்ச நேற்றைய பேரணியின் போது கருத்து வெளியிட்டார். "10 இலட்சம் மக்களை அணிதிரட்டுவதே எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், அந்தத் தொகையையும் விஞ்சுமளவுக்கு மக்கள் வெள்ளம் திரளும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம இதன்போது குறிப்பிட்டார்.

(வ-4) (மற்றொரு செய்தி 11 ஆம் பக்கம்)

## மரண அறிவித்தல்

தோற்றம்
1939 . 09 . 28



மறைவு
2016 . 07 . 29

### திரு. தியாகர் சின்னத்துரை சிவப்பிரகாசம்

[முன்னாள் பிரதமலிகிதர்- நீர்ப்பாசனத் திணைக்களம்(அனுராதபுரம்), ஓய்வு பெற்ற பிரதமலிகிதர்- மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகார சபை (யாழ்ப்பாணம்), முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்- கொக்குவில் நாமகள் வித்தியாலயம்]

யாழ் நயினாதீவை பிறப்பிடமாகவும் பிரம்படி வீதி கொக்குவில் மற்றும் மெல்பேர்ன் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை சிவப்பிரகாசம் அவர்கள் 29/07/2016 மெல்போ்ன், அவுஸ்திரேலியாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகர் சின்னத்துரை, சின்னத்துரை தங்கம்மா(நயினாதீவு) தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலாயுதம், வேலாயுதம் வைரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவப்பிரகாசம் லோகாம்பிகை (மெல்பேர்ன் அவுஸ்திரேலியா) அவர்களின் ஆருயிர் கணவரும் ஜெயகுமரன் (விஞ்ஞானப் பட்டதாரி அவுஸ்திரேலியா) நந்தகுமரன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) வைத்திய கலாநிதி அனுரகுமரன் (அவுஸ்திரேலியா) விஜேகுமரன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் வரலட்சுமி, நாகலட்சுமி, குணலட்சுமி, ஞானப்பிரகாசம் (ஓய்வுபெற்ற அதிபர் வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுசித்திரா, சுதர்சினி, எழிலினி மற்றும் கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற முத்தம்மா, செல்லம்மா (நயினாதீவு), காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் பரமேஸ்வரி (நயினாதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மாதங்கி, சங்கரி, புருஷோத், லோகப்பிரியன், நிவேனி, ரஷன், அபூர்வா, ஆதிரன், அகரன், நியந்திரி மற்றும் நிஷ்கலன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

| | | | |
|---|---|---|---|
| நந்தகுமரன் | - 0061469730335 | | |
| அனுரகுமரன் | - 0061434352256 | லோகாம்பிகை | - 0061469341969 |
| விஜேகுமரன் | - 0061470689158 | ஜெயகுமரன் | - 0061410381559 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கிட்ணர் இளையதம்பி

பிறப்பு
14.04.1940

இறப்பு
28.07.2016



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணர் இளையதம்பி நேற்று (28.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கிட்ணர் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, அரியமலர் ஆகியோரின் அன்புக் கணவரும் றஞ்சன்,மதிமலர், சசிகலா, பிறேமதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதேவி, ஜீவகாந்தன், கஜேந்திரன், வினோதினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89/3, நாயன்மார் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்தவருமாகிய திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் நேற்று (28.07.2016) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை நடேசபிள்ளை (ஆசிரியர்)-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் நடராசா சோமசுந்தரத்தின் (மாநகரசபை ஓய்வுநிலை பிரதம எழுதுனர்) அன்பு மனைவியும் ஸ்ரீமுருகன் (ஓய்வுநிலை கூட்டுறவு அலுவலர்), ஸ்ரீகாந்தன்(ஓய்வு நிலை அதிபர்-கனடா) பேராசிரியர் வேலும்மயிலும் (U.S.A), சாந்தினி( ஆஸ்திரேலியா) , ஸ்ரீகதிர்காமநாதன் (முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்-கனடா), நளாயினி (முன்னாள் ஆசிரியை-புதுக்குடியிருப்பு ம.வி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, கலாநிதி, நந்தினி, ஸ்ரீகணேசன், றஞ்சினி, ஞானச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாஷ், தர்ஷினி, ஷெமிலா, பிரமிளா, ஷர்மிலா, ஸ்ரீகரன், றஜிகலா, செந்தூரன், நர்மதன், சிந்துஜா, மிதுன், அபிரா, துளசி, காயத்திரி, கிறிஸ், அனோஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சோ.ஸ்ரீமுருகன்(மகன்),
சோ.ஸ்ரீகாந்தன் (மகன்)

### திருமதி
### கோமதி குகதாஸ்

(ஆசிரியை -சாதனா பாடசாலை, நல்லூர்)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மற்றும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோமதி குகதாஸ் நேற்று (28.07.2016) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் நடராசா-சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும் குகதாஸ் (பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்), அவர்களின் பாசமிகு மனைவியும் சரண்யா(2016 A/L வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாருஜன்(2018 A/L யாழ் இந்துக் கல்லூரி), தாரங்கா(தரம்-07 வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.07.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் சந்தி,
நீர்வேலி.

தகவல்:
ச.குகதாஸ் (கணவர்)



## விடைபெறுகிறார் சாமுவேல்ஸ்?

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான சாமுவேல்ஸ், டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறத் திட்டமிட்டதாகத் தகவல்கள் வெளியாகின.

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியின் அனுபவ வீரராக சாமுவேல்ஸே உள்ளார். சமி, பிராவோ, கெய்ல், ரசல் ஆகியோரின் புறக்கணிப்புக்குப் பின்னர், தீவுகளின் துடுப்பாட்ட வரிசையின் பெரும் பலமாக சாமுவேல்ஸ் கருதப்பட்டு வந்த நிலையில், அவர் ரி-20 ஆட்டங்களில் அதிக கவனம் செலுத்துவதற்காக டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறத் திட்டமிட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இருப்பினும் சாமுவேல்ஸ் தரப்பில் இதுவரை எந்தக் கருத்தும் வெளிப்படுத்தவில்லை. (ம)

## விருதுகளை அள்ளிய ரபாடா

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் ஆறு விருதுகளை அள்ளி அமர்க்களப்படுத்தினார் ரபாடா.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் 25 ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு குறித்த சபையின் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான ரபாடா ஆறு விருதுகளை அள்ளினார். இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒரு நாள் வீரர், வீரர்களின் விருப்பத் தேர்வு, ரசிகர்களின் விருப்பத் தேர்வு, சிறந்த பந்து வீச்சு பெறுபேறு ஆகிய விருதுகளையே ரபாடா கைப்பற்றினார்.


ஒரு விருது வழங்கும் நிகழ்வில், ஆறு விருதுகளை வென்ற முதல் தென்னாபிரிக்க வீரரும் ரபாடாவே. வில்லியர்ஸ், அம்லா இருவரும் 5 விருதுகளைக் கைப்பற்றியமையே இதுவரை சாதனையாக இருந்தது. (ம)



# ஆஸிக்குப் பயிற்சி வழங்கியிருக்கக்கூடாது; முரளி தொடர்பாக ரணதுங்க தெரிவிக்கிறார்

ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளி செயற்பட்டிருக்கக்கூடாது எனத் தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சருமான ரணதுங்க.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி, டெஸ்ட் தொடருக்கான பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளியை நியமித்தது. ஆனால் தொடர் முழுவதும் பயிற்சியாளராகச் செயற்பட மறுத்த முரளி, 10 நாள்களுக்கு மட்டுமே தன்னால் பயிற்சி வழங்க முடியும் என தெரிவித்து பயிற்சியை வழங்கினார். சொந்த நாட்டுக்கு எதிரான தொடருக்காக வந்துள்ள அணிக்கு பயிற்சி வழங்கியதையடுத்து முரளியை துரோகி எனக் குறிப்பிட்டார் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான சுமதிபாலா. இதனையடுத்து முரளிக்கும் சுமதிபாலவுக்கும் இடையில் வார்த்தை மோதல் ஏற்பட்டது. சங்கா, மகேல, மலிங்க போன்ற வீரர்கள் முரளிக்கு ஆதரவாகப் பேசினர். இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் சபைக்கும், சுமதிபாலவுக்கும் ஆதரவாக குரல் கொடுத்தார் ரணதுங்க.



நான் முரளிதரன் இடத்தில் இருந்திருந்தால் ஆஸ்திரேலியா அணிக்கு பயிற்சியளிக்கும் வாய்ப்பை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன். இந்த முடிவு சரியானது அல்ல, இருப்பினும் அவர் எடுத்த முடிவைப் பற்றி நான் ஏதும் கூறமுடியாது. அவர் கண்டிப்பாக ஆஸ்திரேலிய அணி வழங்கிய இந்த பயிற்சியாளர் பதவி வாய்ப்பை நிராகரித்திருக்க வேண்டும் என ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)



## கோக்லியை வரைந்த ரிச்சட்ஸ் மகன் மாலி

தீவுகளுக்கு எதிராக இரட்டைச்சதம் விளாசியமையைக் கௌரவிக்கும் விதமாக, விராட் கோக்லியின் உருவப்படத்தை வரைந்து அவருக்கே பரிசளித்துள்ளார் தீவுகளின் ஜாம்பவானான ரிச்சட்ஸின் மகன் மாலி.


விராட் கோக்லி ஓர் அற்புதமான வீரர். கிரிக்கெட் உலகம் கண்ட தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர். தீவுகளுக்கு எதிரான பெறப்பட்ட இரட்டைச்சதம் இதற்குச் சான்று. அவரது இந்த இரட்டைச் சதத்தை கௌரவிக்கும் விதமாகவே அவரது உருவப்படத்தை வரைந்து அவருக்கு பரிசளித்தேன் என மாலி தெரிவித்தார். (ம)

## நர்சிங் வெளியே பிரவீன் உள்ளே

ரியோ ஒலிம்பிக் தொடரில் இந்திய மல்யுதத்த வீரர் நர்சிங் யாதவ் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து மாற்று வீரராக பிரவீன் ராணா பெயரிடப்பட்டார்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இந்திய மல்யுத்த வீரர் நர்சிங் யாதவ் பங்குபற்றுவது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவரிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியில், ஊக்கமருந்து இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் அவருக்கான மாற்று வீரராக பிரவீன் ராணா பெயரிடப்பட்டார்.

இரண்டாம் கட்டப் பரிசோதனையிலும் யாதவ்வின் குருதியில் ஊக்கமருந்து உள்ளமை கண்டறியப்பட்டால், பிரவீன் ராணா களமிறங்குவார். நர்சிங் யாதவ் ஊக்கமருந்தை பயன்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டால் நர்சிங் களமிறங்குவார். (ம)



பிரவீன் ராணா

## ஹங்கேரி கார்பந்தயம்; எதிர்பார்த்த வெற்றியாம்

ஹங்கேரி கார்பந்தயத் தொடரில் தனக்குக் கிடைத்த வெற்றியை எதிர்பார்த்ததாகத் தெரிவித்தார் லூயிஸ் ஹமில்டன்.

நடப்பு வருட கார்பந்தயத் தொடரின் 11 ஆவது சுற்று ஹங்கேரி ஓடுதளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தச் சுற்றில் முதலிடம் பிடித்த ஹமில்டன், முடிவடைந்த முதல் 11 சுற்றுக்களின் அடிப்படையிலும் முதலிடம் வகிக்கிறார். இதனையடுத்தே அவர் இந்த வெற்றியை எதிர்பார்த்திருந்ததாகத் தெரிவித்தார்.



ஹங்கேரி கார்பந்தயத் தொடரில் நான் வெற்றிபெறுவேன் என்று எதிர்பார்த்திருந்தேன். பந்தயத்துக்கு முதல் நாள் நடைபெற்ற தகுதிச் சுற்றிலும் முதலிடத்தைப் பிடித்ததால், பந்தயத்தை முதலாவது இடத்திலிருந்து ஆரம்பிக்கத் தகுதி பெற்றதாக என்னைப் பெயரிட்டனர். முதலிடத்தில் இருந்து ஆரம்பிப்பதென்பது ஓர் மிகப்பெரும் வாய்ப்பு. அப்போதே எனது வெற்றியின் பாதி உறுதியாகிவிட்டது. எனவேதான் இந்த வெற்றி, எனக்கு பெரிய ஆச்சரியத்தை வழங்கவில்லை. எதிர்பார்த்து இருந்தேன் என ஹமில்டன் மேலும் தெரிவித்தார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்.சி.சி., சித்திவிநாயகர் அணிகள் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ். மாவட்ட கபடிச் சங்கம் நடத்தும் கபடித் தொடரில் என்.சி.சி. அணியும், சித்திவிநாயகர் அணியும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த காலிறுதிகளில் முதலாவதில் பருத்தித்துறை யுனைற்றெட் அணியை எதிர்த்து நெல்லியடி என்.சி.சி. அணி மோதியது. இதில் என்.சி.சி. அணி 14:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் சித்திவிநாயகர் அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். அன்ரனிஸ் அணி மோதியது. இதில் சித்திவிநாயகர் அணி 26:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-422)



## நாயன்மார்கட்டு பாரதி அணி நண்பர்களை வெளியேற்றியது

யாழ்ப்பாணம், ஜூலை 29
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் நண்பர்கள் அணியை வெளியேற்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நாயன்மார்கட்டு பாரதி அணி.

திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 8.15 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 26:24, 25:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நாயன்மார்கட்டு பாரதி அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## அம்பாள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 29
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நீர்வேலி காமாட்சியம்பாள் அணி வெற்றிபெற்றது.

திருமகள் சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வொலிகிங்ஸ் அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின், முதல் செற்றை 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது காமாட்சியம்பாள் அணி. இரண்டாவது செற்றை 25:19 என்றபுள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றி, பதிலடி கொடுத்தது வொலிகிங்ஸ். மூன்றாவது செற்றைக் கைப்பற்றும் அணியே ஆட்டத்தின் வெற்றியாளர் என்ற நெருக்கடி நிலையில் அந்த செற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய நீர்வேலி காமாட்சியம்பாள் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## தேசியமட்ட வுசுப் போட்டியில் வெண்கலம் வென்றார் பிரவீந்

யாழ்ப்பாணம், ஜூலை 29
தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான வுசுப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரவிந் வெண்கலம் வென்றார்.

மாத்தறை விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 60 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்டே அவர் வெண்கலம் வென்றார். (ம-23)



## கிறீடா சக்தி திட்டத்துக்கான வவுனியா மாவட்டத் தெரிவு

வவுனியா, ஜூலை 29
வவுனியா மாவட்டத்தில் கிறீடா சக்தி விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தில் வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

மெய்வல்லுநர், கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, கராத்தே, குத்துச்சண்டை, பூப்பந்தாட்டம், பளுதூக்கல், ஹொக்கி, மேசைப்பந்தாட்டம், வுசு, யூடோ போன்ற விளையாட்டுகளுக்கான தெரிவேஅவ்வாறுஇடம்பெறவுள்ளது. (ம-422)

## வலைப்பாடு ஆன்ஸ் கூ.ச. கால்பந்தாட்ட முடிவுகள்


வலைப்பாடுசென். ஆன்ஸ் கடற்றொழில்கூட்டுறவுச்சங்கத்தினால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றஆட்டங்களில், கலையொளி, உதயதாரகை, லக்கிஸ்ரார், இளந்தளிர் அணிகள் வெற்றிபெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வேரவில் கலைமகள் அணியை எதிர்த்து பூநகரி கலையொளி அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற இந்த ஆட்டத்தில் பூநகரி கலையொளி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில்கிளிநொச்சிஉதயதாரகை அணியை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இளந்தளிர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## தீவுகளில் அறிமுகமாகிறார் ஜோசப்

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் 19 வயதேயான இளம் வேகப் பந்து வீச்சாளர் அல்ஜரி ஜோசப் களமிறங்குகிறார்.

இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணத் தொடரில், 13 இலக்குகளைக் கைப்பற்றிய ஜோசப் மேற்கிந்தியத் தீவுகள் சம்பியனாக பிரதான காரணமாக இருந்தார். இதனையடுத்து கரீபியன் பீரிமியல் லீக்கில் களமிறக்கப்பட்ட அவர் தற்போது டெஸ்ட் அணியில்அறிமுகமாகவுள்ளார். நாளை ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட்ஆட்டத்தில்இந்தியாவெற்றி பெற்றால், இந்தியா கிண்ணத்தைக் கைப்பற்றுவது கிட்டத்தட்ட உறுதியாகிவிடும். எனவே, வெற்றி பெறவேண்டும் என்ற ஒருவித கட்டாயத்தின் அடிப்படையில் தீவுகள் களமிறங்குகிறது.

மேற்கிந்தியத் தீவுகளின் அணி விவரம் - கோல்டர் (தலைவர்), கி.பிரீத்வைட், சந்ரிகா, டாரன் பிராவோ, சாமுவேல்ஸ், பிளக்வூட், சேஸ், டவரிச், எஸ்.பிரீத் வைட், பிஸ்கூ, கபிரியேல், ஜோன்சன், கும்மினஸ், அல்ஜரி ஜோசப். (ம)

## கலைமதி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 29
புத்தூர்வளர்மதிவிளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில், புத்தூர்கலைமதிஅணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

வளர்மதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதியது. 5செற்களைக்கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:19, 25:23, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி 3:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-422-108)



## ஒற்றுமை, உருத்திரபுரம் அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 29
புதுகுடியிருப்பு, விக்கினேஸ்வரா வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஒற்றுமை, உருத்திரபுரம் அணிகள் வெற்றிபெற்றன.

விக்கினேஸ்வராவின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொக்கணை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துவற்றாப்பளை மங்களேஸ்வரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பொக்கணை ஒற்றுமை அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணிக்கும் புதுக்குடியிருப்பு ஆனந்தா அணிக்கும்இடையிலான இரண்டாவது ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குசல் மெண்டிஸ் சதம் இலங்கை போராட்டம்

இலங்கை, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் குசல் மெண்டிஸின் சதம் கைகொடுக்க சரிவிலிருந்து மீண்டு இரண்டாவது இன்னிங்ஸில் இதுவரை 196 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கிறது இலங்கை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 117 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக சில்வா 24 ஓட்டங்களையும், குசல் பெரேரா 20 ஓட்டங்களையும், சண்டகன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸியின் சார்பாக கசில்வூட், லையன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஸ்ராக், கெபி இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா சகல இலக்குகளையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வோக்ஸ் 47 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஸ் 31 ஓட்டங்களையும், சிமித் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத், சண்டகன் இருவரும் தலா நான்கு இலக்குகளையும், பிரதீப் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.



இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 86 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாய நிலையில் களமிறங்கிய இலங்கை இரண்டாம் நாள் முடிவில் 6-1 என்றிருந்தது. சில்வா, கருணாரத்ன இருவரும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஓட்டமெதனையும் பெறாத நிலையில் கருணாரத்னவை வீழ்த்தினார் ஸ்ராக். சில்வாவை வீழ்த்தினார் கெபி. களமிறங்கினார் குசல் மென்டிஸ். டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய நிதானம் அவரிடத்தில் இல்லை. தற்காப்பு ஆட்டத்தால் இலக்குச் சரிவு ஏற்படுவதை உணர்ந்து அடித்தாடினார். வெற்றியும் கண்டார். தலைமை இன்னிங்ஸ் தடுமாற்றம் காட்டினாலும் மென்டிஸ், சந்திமல் இருவரும் இணைப்பாட்டமாக 117 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் மென்டிஸ். 8 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் சந்திமல். தனஞ்சய டி சில்வாவும் ஓரளவு தாக்குப்பிடிக்க மறுமுனையில் பதற்றமில்லாத சதம் ஒன்று அரங்கேறியது. ஸ்ராக், ஹசில்வூட் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் லையன், கெபி போன்ற சுழல்பந்து வீச்சாளர்கள் என அனைவரும் அனைத்தையும் செய்து பார்த்து விட்டனர். மென்டிஸை அசைக்க முடியவில்லை. நாள் முடிவில் இலங்கை 282-6 என்றுள்ளது. குசல் மென்டிஸ் 169 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். நான்காம் நாள் இன்றாகும். (ம)

# சென். அன்ரனிஸ் சம்பியன்



குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் சென். அன்ரனிஸ் அணி சம்பியனானது.

பாடும்மீன் வி.கழக மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. கோல்கணக்கு இல்லாமல் நகர்ந்தது முதல் பாதி. இடைவேளைக்கு இரண்டு நிமிடங்கள் மீதமிருக்கையில் கலிஸ்ரஸின் துல்லிய பரிமாற்றத்தைத் தலையால் மோதிக் கோலாக்கினார் றஜித். அன்ரனிஸின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. மாறாத கோல் கணக்குடன் நகர்ந்தது இரண்டாம் பாதி. அற்புதங்கள் ஏதும் நிகழவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது சென். அன்ரனிஸ்.

ஞானமுருகன் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது குருநகர் பாடும்மீன். (ம-23)

# சுருண்டது சிம்பாப்வே

சிம்பாப்வே, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில், முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 164 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்ததுடன், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து நாள் முடிவில் 32-0 என்ற நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 164 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக 10 ஆம் நிலை வீரரான திரிபானோ ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களைப் பெற்றார். 72 ஓட்டங்களுக்கு 8 இலக்குக்ளை இழந்த சிம்பாப்வே 164 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடிக்க இவரது இன்னிங்ஸே பிரதான காரணமாக அமைந்தது. திரிபானோவுக்கு அடுத்தபடியாக மஸ்வரி 42 ஓட்டங்களைப் பெற்றார்.



பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக வாக்நெர் 6 இலக்குகளையும், சான்நெர், சவுத்தி இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 32 ஓட்டங்களைப் பெற்றது. குப்தில் 14 ஓட்டங்களையும், லாதம் 16 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

# ரஷ்யர்கள் இல்லாத ஒலிம்பிக்; நன்கு திட்டமிட்ட சதிச்செயல்

## —புடின்



ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவுக்குத் தடை விதித்துள்ளமையானது நன்கு திட்டமிட்டு அரங்கேற்றிய சதிச்செயல் என விமர் சித்தார் ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர் புடின்.

2008, 2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடர்களிலும் அதற்குப் பின்னரான பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தடகளத் தொடர்களிலும் ரஷ்யாவின் சார்பாக களமிறங்கிய வீர, வீராங்கனைகளில் கிட்டத்தட்ட 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் ஊக்கமருந்தை உபயோகித்தமை கண்டறியப்பட்டது. இதனால் அடுத்த மாதம் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை தொடர்பாக இதுவரை தனது கருத்தை வெளிப்படுத்தாத புடின், தற்போது இது ஒரு திட்டமிட்ட சதி எனத் தெரிவித்தார்.

ஒலிம்பிக்கில் பல்வேறு வகையான விளையாட்டுகளில் ரஷ்யர்கள் பங்கேற்க இயலாத நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். இதனால் ரியோ ஒலிம்பிக் தொடரின் தரம் குறைந்து பாதிப்பை ஏற்படுத்தும். ரஷ்ய வீர, வீராங்கனைகளுக்கு தடை விதிக்கப்பட்டது முற்றிலும் பாரபட்சமானது. இன்னும் சொல்லப் போனால் இது ஓர் திட்டமிட்ட சதி என்பதில் சந்தேகமில்லை என புடின் மேலும் தெரிவித்தார். (ம)

திரு.ஷாம்சனின்
IELTS

இலகுவழி கற்பித்தல் முறை மூலமான ஷாம்சனின் IELTS பரீட்சைக்கான புதிய ஆங்கில பயிற்சி பிரிவுகள்
ஆரம்பம் 01.08.2016
வாரநாள் வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வியாழன் வரை
காலை 8.30 - 11.00
பதிவுகளை 30. 07. 2016 வரைமேற்கொள்ளமுடியும்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
077 1570 486, 021 320 3313

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2017 ஜனவரி பரீட்சைக்கான
aat [Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium-Tamil & English
Batch I week end days 30/07/2016 08 am
Batch II Week days 04/08/2016 03 pm
Note: 2015 ஆம் ஆண்டு G.C.E O/Lபரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
Jaffna College
Undergraduate dept.
464, Hospital Road,
Jaffana.
021 2223382
021 2229149

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLTES
பிரதி ஞாயிறு 9.30am-2.00pm மணிவரை
Auditor
சனி 1.00pm-5.00pm
ஞாயிறு9.00am-4.00 pm
சனி 1.00pm-5.00pm
GS,சமுர்த்தி
சனி 1.00pm-5.00pm
ஞாயிறு 2.00pm-5.00pm
D.O, P.M.A
EB Exam
சனி,ஞாயிறு
9.00am-12.00pm
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

பாடசாலை மாணவர்களின் விடுமுறையை பயனுள்ளதாக்க
Young Learners English (Speaking, Listening, Writing)
100 hrs (one month) course Course Fee: 2000/=
Age group : 11-16 09 a.m to 12 p.m
Starts on 01.08.2016 11 a.m to 01 p.m
Week days and Weekend days 03 p.m to 05 p.m
முன்பதிவு செய்து கற்கை நெறியை பின்பற்றமுடியும்
ELAS Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
(பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040, 077 050 4446

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.